பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்

New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-120

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)



| மலர் : 18 Vol : 18 | இதழ் : 02 Issue : 02 | www.ncbhpublisher.in | மே 2025 May 2025 | விலை Price ₹ 45/- | ஆண்டு சந்தா Annual Subscription ₹ 540/- |
|---|---|---|---|---|---|





மடியில் தங்கியிருக்கும் மரணம்!

- ஜனகப்பிரியா

கணியன்பாலன் கட்டமைக்கும் பண்டைத் தமிழ்ச் சமூகம்

- இரா. அறவேந்தன்

மஜூலா சிங்கப்புரா

- முனைவர் இரா.காமராசு

நியூ செஞ்சுரியின் இம்மாத வெளியீடு

# இறையன்பு

## ஓராண்டு உரைகள்

4 தொகுதிகள்




கெட்டி அட்டை 1800 பக்கங்கள் ரூ 1500/-

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.




கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2055*

*மலர் - 18 இதழ் - 02 - மே 2025*

ஆசிரியர்
**த.ஸ்டாலின் குணசேகரன்**



ஆசிரியர் குழு
க.சந்தானம்
பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.கு.ராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா



இதழ் வடிவமைப்பு
*கா. குணசேகரன்*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00
சந்தா தொகையை
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


1 புத்தெழுச்சியூட்டும் புத்தகத் திருவிழாக்கள்
ஆசிரியர் குழு ........ 04

2 படித்துப் பாருங்களேன்
ஆ.சிவசுப்பிரமணியன் ........ 06

3 தமிழ் மக்கள் வரலாறு நூல்கள் 25
புதுவை சீனு. தமிழ்மணி ........ 11

4 சித்த மருத்துவ சொற்களஞ்சிய அகராதி
டாக்டர் சு.நரேந்திரன் ........ 15

5 கணியன்பாலன் கட்டமைக்கும் பண்டைத் தமிழ்ச் சமூகம்
இரா. அறவேந்தன் ........ 19

6 மடியில் தங்கியிருக்கும் மரணம்!
ஜனகப்பிரியா ........ 25

7 'துரை'த் தமிழ்: காலனியத்தின் மறுபக்கம்
கோ.பாலசுப்ரமணியன் ........ 29

8 மஜூலா சிங்கப்புரா
முனைவர் இரா.காமராசு ........ 35

9 பத்மநாபசுவாமி கோவிலும் தென் திருவிதாங்கூர் தொன்மங்களும்
அ.கா.பெருமாள் ........ 38

10 பழந்தமிழ் இலக்கியத்தில் விளிம்புநிலையினர்: சில விசாரணைகள்
முனைவர் சீ. சரவணஜோதி ........ 45

11 உயர் தமிழ்க்குடியின் உறவுக்காரர்
முனைவர் யாழ். சு. சந்திரா ........ 49

12 ஏழு பனைஓலையிலே எழுதினாலும் தீராது
பேரா சு.செல்வகுமாரன் ........ 53

13 வரலாறு சொல்லலும் வரலாற்றைச் சொல்லலைப் பேசலும்
சுஜா சுயம்பு ........ 56

14 அறம் மற்றும் தர்மம் – ஓர் ஒப்பீடு
மகிமை பெர்னாண்டோ நிக்சன். அ ........ 61

15 ஓடைப்புல் புதினத்தில் வெளிப்படும் ஆதிக்கமும் அடக்குமுறையும்
மு.தவமணியன் & முனைவர் மா. சம்பத்குமார் ........ 65

16 போண்டு செல்லப் பிராணிகளின் கதை
சு.தீபிகா ........ 69

17 Reading Between Languages: Bama's Voice in Karukku
G.Krishnaveni & Dr.B. Winmayil ........ 72




# புத்தெழுச்சியூட்டும் புத்தகத் திருவிழாக்கள்

தமிழ்நாடு அரசு சார்பில் மாநிலமெங்கும் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஆண்டுதோறும் புத்தகத் திருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

நல்ல நூல்களை தமிழ் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதும், பெரும் எண்ணிக்கையிலான பொது மக்களை வாசிப்புக்கு வசப்படுத்துவதும் வரவேற்கத்தக்க அறச்செயல்களாகும்.

ஏற்கனவே பல ஆண்டுகளாக அந்தந்தப் பகுதிகளில் செயல்பட்டு வந்த சில சேவை அமைப்புகள் புத்தகத் திருவிழாக்களை சிறப்பாக நடத்தி வந்தன.

மாவட்டத் தலைநகரில் அரசே புத்தகத் திருவிழாக்களை நடத்த அரசாணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் அத்தகைய சேவை அமைப்புகள் அரசுடன் இணைந்து புத்தகத் திருவிழாவை சிறப்புடன் நடத்தி வருகின்றன.

அந்தந்த மாவட்டங்களில் கிடைக்கப்பெறும் அனுபவங்களுக்கு ஏற்ப ஆண்டுக்காண்டு புத்தகத் திருவிழாக்கள் செழுமைப்பட்டு வருகின்றன. பள்ளி, கல்லூரி மாணவர்களை புத்தகத் திருவிழாவில் பங்கேற்க வைப்பது

திருவிழாவை அரசே நடத்தும் நோக்கங்களில் பிரதானமான ஒன்றாகும்.

பள்ளி மாணவர்களுக்கான தேர்வுகள், மழைக்காலம், கல்வி நிறுவனங்களின் விடுமுறைக் காலம் என்பன போன்ற பல அம்சங்களைக் கணக்கிலெடுத்து அந்தந்த மாவட்டத்தின் திருவிழாத் தேதிகளை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்ணயிக்க வேண்டியுள்ளது.

இயன்றவரை ஒரே நேரத்தில் அருகருகே உள்ள மாவட்டங்களில் புத்தகத் திருவிழாக்கள் நடைபெறாமல் பார்த்துக் கொள்வது சிறப்பாகும்.

மாவட்ட அளவில் நடத்தப்படுகிற அரசோ, அரசுடன் இணைந்து தனியார் சேவை அமைப்புகளோ நடத்துகிற புத்தகத் திருவிழாக்களில் அந்த மாவட்டம் முழுவதிலுள்ள ஊராட்சிகளில் இயங்குகிற நூலகங்களுக்கு புத்தகங்களை வாங்கிக் கொள்ளும் ஏற்பாடு இருந்தால் புத்தகப் பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு உற்சாகம் அளிப்பதாக அமையும். அவ்வாறான கிராமப்புற நூலகங்களுக்கும் புதிய புதிய நூல்கள் ஆண்டுக்காண்டு கிடைக்கப் பெறும்.

அந்தந்த மாவட்டங்களில் இயங்கும் பள்ளி, கல்லூரிகளில் உள்ள நூலகங்களுக்கும் இந்தப் புத்தகத் திருவிழாக்களில் நூல்களை வாங்கும் ஏற்பாடு இருக்க வேண்டும்.

விருப்பபூர்வமாக அல்லாமல் உணர்வுபூர்வமாகவும் உளப்பூர்வமாகவும் மாநிலமெங்கும் ஒரே சீராகவும் இவ்வாசிப்பு வேள்வி நடைபெறுவதை உறுதி செய்தால் அரசு இப்புத்தகத் திருவிழாக்களை நடத்துகிற நோக்கம் முழுமையாக நிறைவேறும்.

பதிப்புத்துறை அறிவு வளர்ச்சிக்கு அடித்தளமிடும் பல்கலைக்கழகங்களுக்கு நிகரான ஒரு சிறப்புத்துறை. பல காரணங்களால் அத்துறை தற்போது திக்கித் திணறிக் கொண்டுள்ளது. அத்துறை எக்காரணம் கொண்டும் நலிந்துவிடக்கூடாது என்பதில் அனைவருக்கும் கருத்தும் கவனமும் இருக்க வேண்டும்.

பதிப்புத்துறை என்பது ஒரு தொழில் மட்டுமல்ல மகத்தானதொரு தொண்டு என்பதை அனைத்துத் தரப்பினருமே உணரவேண்டும்.

அடுத்த தலைமுறையினரை திசைதிருப்பும் விதத்தில் சமூகப்புறச்சூழல் நிலவுவதை மனதில் கொண்டு ஒரு அறிவுச் சமூகத்தை, ஒரு அறிவார்ந்த தமிழ்ச் சமூகத்தை, அறிவியல் கண்ணோட்டமுள்ள புதிய தலைமுறையை, சுயசிந்தனையும் உலகப்பார்வையும் கொண்ட இளையோர் கூட்டத்தை இத்தமிழ் மண்ணில் வளர்த்தெடுக்க வேண்டிய வரலாற்றுக் கடமை அரசுக்கு உள்ளது. அனைத்து அமைப்புகளுக்கும் உள்ளது. குடிமக்களுக்கும் உள்ளது.




பதிப்புலகமும் மக்களை முன்னோக்கி வழிநடத்திச் செல்லும் புதிய புதிய அரிய நூல்களை, சிந்தனையைத் தூண்டும் தனிச்சிறப்பு மிக்க நூல்களை, மனித நேயத்தையும் மானுடப் பண்புகளையும் வளர்க்கும் வல்லமை மிக்க நூல்களை, அறிவைச் செழிக்கச் செய்யும் அற்புதமான நூல்களை சிரத்தையெடுத்தேனும் பதிப்பிக்க சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

புத்தகத் திருவிழா என்பது ஒரு நிகழ்வு மேலாண்மை அல்ல. அறிவு வேளாண்மை. அது ஒரு சடங்கோ சம்பிரதாயமோ அல்ல. சரித்திரச் சந்தர்ப்பம்.

புத்தகத்திருவிழாக்கள் புத்தொளி பாய்ச்சும். புத்தெழுச்சியூட்டும்.

எந்தெந்த வழிகளில் வாசிப்பை வளப்படுத்த இயலுமோ, எந்தெந்த வகைகளில் புத்தகங்களுக்குப் புத்துயிரூட்ட முடியுமோ அந்தந்த முறைகளிலெல்லாம் அரசும் அனைத்து அமைப்புகளும் கல்வி நிலையங்களும் முழுமையான முயற்சிகளை மேற்கொள்ளலாம். மேற்கொள்ள வேண்டும்.

●

**ஆசிரியர் குழு**



# படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்

## சபரிமலை (கேரளக் கோவில் ஒன்றின் சமூக வரலாறு)

Jitheesh P.M (2022) Sabarimala :
Social History Of a Temple in Kerala. left Word Books. New Delhi 110008.

**(ஏப்ரல் 2025 இதழின் தொடர்ச்சி)**

சென்ற நூற்றாண்டுக் காலத்தில்தான் ஐயப்பனுக்கு சமஸ்கிருதத் தோத்திரங்கள் உருவாயின. அதன் பின்னர்தான் கேரள நாட்டார் தெய்வமான ஐயப்பன் இந்தியாவெங்கும் உலகமெங்கும் இந்துக்கள் வழிபடும் தெய்வமாக ஆகியது.

சபரிமலையில் மலையாளம் மட்டுமே ஒலித்திருந்தால் இத்தனை தமிழர்களும் ஆந்திரர்களும் பீகாரிகளும் அங்கே ஒன்றாக நின்று வழிபட்டிருக்க முடியாது - ஜெயமோகன்.

**இக்கூற்றின் முக்கிய சாரமாகப் பின்வரும் மூன்று செய்திகளை வகைப்படுத்தலாம்:**

- சென்ற நூற்றாண்டில்தான் அய்யப்பனுக்கு சமஸ்கிருத மொழியில் தோத்திரங்கள் உருவாயின.
- அதற்கு முன்னர் அய்யப்பன் நாட்டார் தெய்வமாக இருந்தார்.
- இதன் பின்னரே அய்யப்பன் உலகெங்கும் உள்ள இந்துக்கள் அனைவரும் வணங்கும் கடவுளானார்.

இம் முன்றும் அவரது கற்பனையில் தோன்றியவை அல்ல. அவை வரலாற்று அடிப்படையில் முற்றிலும் உண்மையானவை. அய்யப்பன் என்ற நாட்டார் கடவுள் இருபதாம் நூற்றாண்டில் சமஸ்கிருதத் தோத்திரங்களை ஏற்று வைதீகமரபினரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வரலாறை இந்நூலின் பிற்பகுதி எடுத்துரைக்கிறது. எழுத்தாளர் ஜெயமோகன் குறிப்பிடும் அய்யப்பன் மீதான சமஸ்கிருத தோத்திரங்களுக்கான வித்து இருபதாம் நூற்றாண்டின் முதல் கால்பகுதியை அடுத்து இடப்பட்டுள்ளது.

**தொன்மம் உருவாதல்:**

தேவலோக முற்பிறவி ஒன்றை நாட்டார் தெய்வங்களுக்கு வழங்கி அதன் வழியாக அத்தெய்வங்களை வைதீக மரபுடன் தொடர்பு படுத்துவது என்ற வழிமுறை பழமையான ஒன்று. இம் முயற்சியின் முதற்படியாக அமைவது அத் தெய்வத்திற்கு தேவலோக முற்பிறப்பு வழங்குவது அமையும். (மனிதர் என்றால் உயர்குடிப் பிறப்பு வழங்கப்படும்) அவ்வகையில் 'ஸ்ரீ பூத நாதோபாக்கியானம்' என்ற புராணம் 19 ஆம் நூற்றாண்டில் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது என்பதை முன்னர் குறிப்பிட்டோம்.





இது முற்றிலும் புராணமரபை உள்வாங்கியதாக அமைந்திருந்தது. அய்யப்பன் சிவலோகத்தில் சிவபெருமானின் பூதகணங்களுக்குத் தலைவனாக விளங்கி வந்ததுடன் பூர்ணா, புஷ்கலா என்ற இருபெண்களின் கணவராகவும் இருந்துள்ளார். அவரது பூலோக அவதாரமே அய்யப்பன் ஆகும். (ஓரளவுக்கு இது தமிழ்நாட்டின் காவிரிச் சமவெளியில் பரவலாகக் காணப்படும் காத்தவராயன் வழிபாட்டில் நிகழ்ந்த மாற்றத்தை ஒத்ததாக உள்ளது). இச் செய்திகளைக் குறிப்பிடும் இப் புராணம் இருபதாம் நூற்றாண்டில்(1929), அச்சாக்கம் பெற்று நூலாக வெளிவந்தது. (தற்போது தமிழிலும் வெளிவந்துள்ளது).

இப் புராணத்தை அடியொற்றி 'ஐயப்பன் கிளிப்பாட்டு' என்ற இலக்கிய நூல் மலையாளமொழியில் தோன்றியது. அன்னம், கிளி போன்ற பறவைகளை அழைத்து ஒரு செய்தியைக் கூறும் முறையிலமைந்த கிளிப்பாட்டு என்ற மலையாள இலக்கிய முறையியலைப் பின்பற்றி உருவான இந்நூல் அய்யப்பன் வழிபாட்டின் பரவலுக்குத் துணை நின்றது. இருப்பினும் இன்று பரவலாக அறிமுகமாகியுள்ள அய்யப்பன் வழிபாட்டிற்கு முக்கிய காரணமாக அமைந்தது 1950இல் நிகழ்ந்த தீவிபத்துதான்.

சென்ற நூற்றாண்டுக் காலத்தில்தான்
ஐயப்பனுக்கு சமஸ்கிருதத் தோத்திரங்கள்
உருவாயின. அதன் பின்னர்தான்
கேரள நாட்டார் தெய்வமான ஐயப்பன்
இந்தியாவெங்கும் உலகமெங்கும்
இந்துக்கள் வழிபடும் தெய்வமாக
ஆகியது.
சபரிமலையில் மலையாளம் மட்டுமே
ஒலித்திருந்தால் இத்தனை தமிழர்களும்
ஆந்திரர்களும் பீகாரிகளும் அங்கே
ஒன்றாக நின்று வழிபட்டிருக்க முடியாது

**– ஜெயமோகன்.**



ஜித்தேஷ் பி.எம்.

**1950 தீ விபத்து:**

இவ்விபத்து குறித்து 1950 ஜூன் மாதம் வெளியான இந்து (The Hindu 18 June 1950)) மிகச் சுருக்கமாகப் பின்வரும் செய்தியை வெளியிட்டது:

'திருவிதாங்கூரின் வடகிழக்கு எல்லையில் உள்ள மக்கள் நடமாட்டமில்லாத மலையில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க சபரிமலைக் கோயிலின் மீது அண்மையில் சில குண்டர்கள் தாக்குதல் நடத்தியதாகவும், அவர்கள் சிலையை உடைத்து, கோயிலைக் கொள்ளையடித்து தீ வைத்து எரித்ததாகவும் கூறப்படுகிறது.' 19 ஜூன் 1950 இந்து நாளேட்டில் இந் நிகழ்வு தொடர்பாக திருவிதாங்கூர் அரசு வெளியிட்ட பின்வரும் அறிக்கை வெளியாகியுள்ளது:

'14 ஜூன் அன்று சாந்திக்காரன் (பூசை செய்பவர்) கோயிலுக்குச் சென்றபோது கோயிலின் கருவறை, மண்டபம், பொருள்கள் வைக்கும் அறை ஆகியன நெருப்பினால் அழிந்து போனதையும், கருவறையில் இருந்த கடவுளின் சிலை ஓரளவுக்கு ஊறுபட்டிருப்பதையும் கண்டார்.'

மொத்தத்தில் கோயில் பெருமளவில் அழிவுக்காளாகியிருந்தது. 21 ஜூன் 1950 இல் வெளியான இந்து நாளேட்டில், கருவறையில் இருந்த மூலவர் படிமத்தின் தலையும் கைகளும் உடைக்கப்பட்டு, உடல்பகுதியில் இருந்து துண்டிக்கப்பட்டிருந்தன.

உடைந்த பகுதிகள் மூலவர்படிமத்தின் கீழே சிதறிக்கிடந்தன. கோயில் கதவின் மேல் வெட்டப்பட்ட அடையாளம் காணப்பட்டது. பொருள்கள் வைக்கும் அறையும் உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப் பட்டிருந்தன.

இந்நிகழ்வு குறித்து ஆராய விசாரணை ஆணையம் மாநில அரசால் அமைக்கப்பட்டது. டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த கேசவமேனன் என்ற உயரதிகாரி புலனாய்வு அதிகாரியாக நியமிக்கப்பட்டார். விசாரணை ஆணையத்தின் அறிக்கைப்படி கருவறைக்குச் செல்லும் வழியிலிருந்த கதவில் பதினைந்து வெட்டுக்கள் பதிந்து வன்முறையாக நுழைந்தமைக்குச் சான்று பகர்ந்தன. மூலவரின் சிலை உடைக்கப்பட்டு, தலை, இடதுகையின் உள்ளங்கைப் பகுதி, கைவிரல்கள் அகியன துண்டு துண்டாக்கப்பட்டிருந்தன. மூலவர் சிலையின் முகத்திலும் நெற்றியிலும் வெட்டப்பட்ட அடையாளங்கள் காணப்பட்டன. இச் சான்றுகளின் அடிப்படையில் இத்தகைய அழிவுச் செயலானது திட்டமிட்டுச் செய்யப்பட்டது என்ற முடிவுக்கு விசாரணை ஆணையம் வந்தது. அத்துடன் இச் செயலைச் செய்தவர்கள் இந்துக்களாக இருக்க முடியாது, கிறித்தவர்களாக இருக்கலாம் என்ற மத அடிப்படையிலான யூகத்தையும் முன்வைத்தது. இவாறு யூகித்தமைக்கான காரணங்களாக அது பின்வருவனவற்றைக் குறிப்பிட்டது.

சிலை வழிபாடு குறித்த மாறுபாடான கருத்து இருந்தாலும் ஒரு இந்து கடவுளின் திருவுருவை உடைத்தல், கோயிலுக்கு நெருப்பு வைத்தல் போன்ற செயல்களைச் செய்வானா என்பது சந்தேகத்திற்குரியது.

சிலை வழிபாட்டை விரும்பாதவன் என்றால் கோயிலுக்குச் செல்லாமலிருப்பான். ஆனால் சிலையை உடைத்து கோயிலுக்கு நெருப்பு வைக்கமாட்டான்.

இப்பகுதியில் இந்துக்களுக்குச் செல்வாக்கு இல்லை. இந்துக்களின் கட்சி எதுவும் கிறித்தவர்கள் பார்வையில் படாது இக்காட்டுப்பகுதியில் செயல்படமுடியாது.

சூழ்நிலைச் சான்றுகளின் அடிப்படையில் கிறித்தவர்களின் கைவரிசை இதில் இருப்பதாக ஆணையத்தின் அறிக்கையில் அதன் புலனாய்வு அதிகாரியான கேசவமேனன் குறிப்பிட்டார். இதை உறுதிப்படுத்தும் முகமாக அவுசோப் (Ouseph)

என்ற பெயர்கொண்ட ஒருவர் கிடைத்தார். பணம் படைத்த கிறித்தவர்கள் சிலரை முதலாளிகள் என்று பொதுவாகக் குறிப்பிட்டதுடன் அவர்களில் ஒரு சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டு அய்யப்பன் கோயில் மீதான வன்முறைச் செயல்கள் நடந்தேறியது குறித்து வாக்குமூலம் அளித்தார். இறுதியில் விசாரணை ஆணையம் மத அடிப்படைவாதத்தின் பங்களிப்பை இவ்வாறு பதிவு செய்தது:

'பொருத்தமான முடிவு என்னவென்றால் இக் கிறித்தவ முதலாளிகள் சபரிமலை அய்யப்பன் கோயிலுக்கு எதிராக எதாவது செய்ய ஆயத்தமாக இருந்தார்கள். கோவிலானது தங்களுடைய இருப்புக்கு அச்சுறுத்தல் என்று நம்பினார்கள்.'


ஆணையத்தின் விசாரணை அதிகாரி கேசவ மேனன் தீ வைத்ததன் நோக்கத்தை பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

'அதிக எண்ணிக்கையிலான பக்தர்கள் கூடும் கோயில், இந்துக்களின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் ஒரு சக்தியாக மட்டுமல்லாமல், கீழ்சாதி இந்துக்கள் கிறிஸ்தவமதத்தில் படிப்படியாக உள்வாங்கப்படுவதையும் அவர்களின் மதமாற்றத்தைத் தடுக்கும் சக்தியாகவும் கருதுவது.'

அய்யப்பன் கோயில் தீப்பற்றி எரிந்ததை அடுத்து புதிய கோயில் கட்டப்பட்டது. இக் கோயில் உருவாக்கம், அதில் பின்பற்றப்பட்ட நடைமுறைகள் என்பன குறித்து இந்நூல் குறிப்பிடும் செய்திகள் மிகவும் முக்கியமானவை.. சென்ற இதழில் படித்த செய்திகளுடன் ஒப்பிட்டுப் பாரக்கவேண்டியவை.

**புதிய கோயில்– புதிய வழிபாட்டு முறை:**

சபரிமலைக் கோயிலில் 19 ஜூன் 1950இல் நடந்த தீ விபத்து அன்றையக் கேரளப் பகுதியிலும், தமிழ்நாட்டிலும் இந்து உணர்வைத் தோற்றுவித்தது. இது தன்னியலார்ந்த எழுச்சியாகும். வெகுமக்களின் இவ்வுணர்வை இந்துசமய அமைப்புகள் நன்றாகவே பயன்படுத்தலாயின. சபரிமலை வன்முறையைக் கண்டித்து 1950 ஜூலை முதல் நாளன்று தலைநகர் திருவனந்தபுரத்தில் பொது வேலை நிறுத்தத்திற்கு 'இந்து மகாமண்டல்' என்ற அமைப்பு அழைப்பு விடுத்தது. இது சமூகத்தின் பொது உணர்விலிருந்து துண்டித்துக் கொண்டு, இந்து சமூகம் என்ற உணர்வை மேற்கொள்ளத் தூண்டியது. இந்துப் பண்பாடு, இந்து நிறுவனங்கள் என்பனவற்றைப் பாதுகாக்கவென்று துடிப்பான




இளைஞர்களைக் கொண்ட இளைஞர் படை ஒன்று சபரிமலை அய்யப்பன் கோயில் வளாகத்தில் உருவாக்கப்பட்டது. அப்பாஸ்(*ABASS: Ayyappa Seva Sangham*) என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட அய்யப்ப சேவா சங்கம் என்ற அமைப்பின் கட்டுப்பாட்டில் இது செயல்பட்டது.

அய்யப்பன் வழிபாட்டை வெகுமக்களிடம் கொண்டு செல்வதன் முன்னோட்டமாகக் கேரளத்திலும் தமிழ்நாட்டிலும் அய்யப்ப ஜோதி உலா நிகழ்ந்தது. இது அய்யப்பன் வழிபாட்டைப் பரவலாக்குவதில் குறிப்பிடத் தக்க அளவில் பங்காற்றியது. தமிழ்நாட்டில் அய்யப்பன் வழிபாட்டைப் பரவலாக அறிமுகம் செய்ததில் நீதிக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான சர். பி.டி. ராஜனின் பணி குறிப்பிடத்தக்கதாய் இருந்தது.

தமிழ்நாட்டிலிருந்து நிதி திரட்டித் தருவதில் அவரது பங்களிப்பும் இருந்ததாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். வன்முறைக்கு ஆளான சபரிமலை அய்யப்பன் கோயில் புனரமைப்பும் நடந்து முடிந்து மீண்டும் கோயிலில் வழிபாடு தொடங்கியது. இப்போது வழிபாட்டில் சில மாற்றங்கள் நிகழ்ந்தன. முன்னர் பின்பற்றப்படாத புதிய நடைமுறைகள் இடம் பெற்றன.

**உறக்கப்பாட்டு (தாலாட்டு):**

அய்யப்பன் குறித்து நாட்டார் பாடல்கள் பல வழக்கில் இருந்துள்ளன. இவை அவரை பன்முகத்தன்மை கொண்டவராக அறிமுகப்படுத்தும் தன்மையில் இருந்துள்ளன. குறிப்பாக வாவர் என்ற இஸ்லாமியர் அவரது உற்ற தோழராக இருந்தமை குறித்த மரபுவழிச் செய்திகள் பாடல்கள் என்பனவற்றைக் கூறலாம். அய்யப்பன் கோவில் புனரமைக்கப்பட்ட பின்னர் வாவரின் இஸ்லாமியக் குடிப்பிறப்பு மறைக்கப்பட்டு, வாபரன் என்று பெயர் மாற்றம் பெற்று, சிவனின் பூதகணங்களில் ஒருவரானார்.

நாள் வழிபாடு முடிந்து இரவில் கோயில் கருவறை மூடப்படுவது பொதுவான மரபு. இந்நிகழ்வு ஒரு சடங்காக நிகழும். தீ விபத்துக்குப் பின் இந்நிகழ்வில் பாடுவதற்கென்று அய்யப்பனை மையமாகக் கொண்ட தாலாட்டுப் பாடல் ஒன்று சமஸ்கிருதத்தில் 'உறக்கப்பாட்டு-ஹரிவராஷணம்' என்ற பெயரில் எழுதப்பட்டது. மேல்சாந்தி என்றழைக்கப்படும் தலைமைப் பூசாரி இதைப் பாடுவார். இந்நிகழ்வு தொடர்பாக நூலாசிரியர், கள ஆய்வு மேற்கொண்டு சேகரித்த செய்திகளை நூலில் பதிவிட்டுள்ளார். இச் செய்திகளில் ஒன்று உறக்கப்பாட்டு பாடுதலின் தோற்றம் குறித்தது. 1950 ஆவது ஆண்டு ஆகஸ்ட் 13ஆவது நாள்தான் உறக்கப்பாட்டுப் பாடுதல் தொடங்கியுள்ளது. (இப்பாடலின் சில பகுதிகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து மேற்கோளாகக் காட்டியுள்ளார்). இப் பாடல் அய்யப்பன் பாட்டுகள் என்ற பெயரில் மக்களிடையே வழங்கிவந்த பாடல்களின் உள்ளடக்கத்தில் இருந்து விலகி புராணத் தன்மை கொண்டுள்ளது. அய்யப்பன் ஹரிஹரபுத்திரன் என்ற கடவுளாகவும் வேதங்களால் போற்றப்படுபவனாகவும் உறக்கப்பாட்டில் சித்தரிக்கப்படுகிறார் என்பதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

உறக்கப் பாட்டை அடுத்து 1950க்கு முன் பின்பற்றப் பட்ட நடைமுறைகளில் சில மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. எருமலை பேட்டைத்துள்ளல் என்ற சடங்கு மலையாள மாதம் 27 இல்நிகழும். தற்போது 20 க்கு முன்பே நடந்து விடுகிறது. 1969 இல் ஆகம விதிமுறைப்படி, கொடிக்கம்பம் நிறுவப்பட்டது. அதற்கு முன்னர் கொடிக்கம்பம் கிடையாது. கோயிலுக்குள் செல்வதற்கு அமைக்கப்பட்ட 18 படிகளில் தேங்காய் உடைக்கும்வழக்கம் இருந்தது. 1950க்குப்பின் படிகளில் உடைத்தல் நிறுத்தப்பட்டு அதற்கென்று கீழ்ப் பகுதியில் நிறுவப்பட்ட பீடத்தில் உடைக்கும் வழக்கம் அறிமுகமாயிற்று. மரபை வலியுறுத்துபவர்கள் மேற்கொண்ட இச் செயல்கள் குறித்து 'மரபு என்பது வளைந்து கொடுக்கக் கூடிய ஒன்று' என்று நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இக் கோயில் வழிபாட்டுடன் தொடர்புடைய ஒன்று மகரவிளக்கின் ஒளி தெரிவதாகும். இது குறித்து நேர்காணல், ஆவணங்கள் வழி நூலாசிரியர் கண்டறிந்த செய்திகளின் தொகுப்பு துப்பறிவாளர் ஒருவரின் பதிவுபோல் உள்ளது. இது தவிர 1983இல் சபரிமலையில் இருந்து இருபது கி.மீ. தொலைவிலுள்ள நிலக்கல் என்ற இடத்திலுள்ள குருசடியையும், அய்யப்பனின் பூங்காவனப் பகுதியில் அது இடம் பெற்றிருப்பதாக இந்துக்கள் நம்புவதையும் அடிப்படையாகக் கொண்டு கிறித்தவர்கள், இந்துக்களிடையே எழுந்த முரண்பாட்டையும் ஆராய்ந்துள்ளார். இவற்றையெல்லாம் எடுத்துரைப்பின் கடந்த மார்ச் திங்களில் தொடங்கிய இக் கட்டுரை ஜூன் திங்களுக்கு நீண்டுவிடும். எனவே இந்நூலின் இறுதியில் இந்நூலாசிரியர் முன்வைக்கும் பின்வரும் கருத்துக்களை மேற்கோளாகக் காட்டி இந்நூல் அறிமுகத்தை முற்றுப்பெறச் செய்துவிடுவது பொருத்தமாக இருக்கும்.

'கேரளத்தில் உள்ள மற்ற திருத்தல யாத்திரைகளுடன் ஒப்பிடும் போது சபரிமலை யாத்திரையின் தனித்தன்மை இந்து சமய ஒற்றுமையை வலுப்படுத்த உதவுகிறது. திருத்தல யாத்திரை என்பது ஒரு கூட்டுச் செயல்பாடு. பெரும்பாலும் ஆண்கள், சில இளம்பெண்கள் மற்றும் முதிய பெண்களுடன் பயணம் செய்கிறார்கள். கோயில் மற்றும் திருத்தலப் பயணம் தொடர்பான மாற்றங்கள் ஒரே மாதிரியான அடையாளங்களை (Homogeneous identity)மிகுதியாக வழங்கியுள்ளன. இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் குறிப்பிடத்தக்க மற்றும் விரைவான மாற்றங்கள் நிகழ்ந்தன.'

நூலாசிரியர் குறிப்பிடும் மாற்றங்கள் என்பன இஸ்லாம், கிறித்தவம் என்ற பிற சமயங்களுடனான தோழமையுறவைத் துண்டித்தமையும் ஆகம விதிமுறைகளை அய்யப்பன் வழிபாட்டில் அறிமுகப்படுத்தியமையும் ஆகும்.

●

**கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்.**




"ஆங்கில நூல்கள், பகுதி பகுதியாகப் பிரித்து மொழிபெயர்க்கப்பட்டு, என்சிபிஎச் வெளியீட்டகத்தால் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு, வரலாற்றறிவில் தமிழ்நாட்டு மக்களுக்குப் புதுவெளிச்சத்தைப் பாய்ச்சிக் கொண்டு வருகிறது."

### நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீட்டில்


# 'தமிழ் மக்கள் வரலாறு' மற்றும் 'தமிழியல் நூல்கள்' எனது மொழிபெயர்ப்புப் பட்டறிவுகள்



**புதுவை சீனு. தமிழ்மணி**


தமிழின் மிகப் பெரிய பதிப்பகம் என்.சி.பி. எச், பல நூல்களை வெளியிட்டிருந்தாலும், வரலாற்றுநர் எஸ். ஜெயசீல ஸ்டீபன் அவர்களின் நூல்களைத் 'தமிழ் மக்கள் வரலாறு' மற்றும் 'தமிழியல் நூல்கள்' எனும் இரு பொதுத் தலைப்பில் சூலை 2017ல் தொடங்கி, பிப்ரவரி 2025 வரை 25 நூல்கள் மற்றும் 8 நூல்கள் ஆங்கிலத்தின் வழியாக தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிட்டுள்ளது. இது ஒரு சிறப்பு வாய்ந்த பணியாகும். ரகு அந்தோணி, சு.முத்துக்குமரவேல், அ.சாமிக்கண்ணு, எஸ். தோதாத்திரி, ந.அதியமான், க.ஐயப்பன், கி.இளங்கோவன், கி.ரா.சங்கரன் ஆகியோர் மொழிபெயர்ப்பாளர்களாகப் பணியாற்றியுள்ளனர். நான் மொழிபெயர்த்த நூல்களும் வெளியிடப்பட்டுள்ளது என்பது எனக்குப் பெருமையே.

தொடக்கத்தில் பாக்களையே ஆங்கில வழித் தமிழில் மொழிபெயர்த்தேன். அம்மொழிபெயர்ப்புகள் பல இதழ்களில் வெளிவந்துள்ளன. பிறகு 2022இல் இருந்து கட்டுரைகளை மொழிபெயர்த்து வருகிறேன். 'தமிழ் மக்கள் வரலாறு' எனும் வரிசையில் நான் மொழிபெயர்த்தது 5 நூல்களாகும்.











'தமிழ் மக்கள் வரலாறு' வரிசையில் பிறருடன் இணைந்து மொழிபெயர்த்தது 3 நூல்களாகும். 'தமிழியல் நூல்கள்' எனும் வரிசையில் நான் மொழிபெயர்த்தது 2 நூல்களாகும்.

I


புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் 2005ஆம் ஆண்டு முதல் 'விடுதலை வீரர்' சீனுவாசன் – தனலட்சுமி அறக்கட்டளை', என் பெற்றோர் பெயரில் நிறுவப்பட்டு, சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. 12ஆம் அறக்கட்டளைச் சொற்பொழிவை நிகழ்த்த ஜெயசீல ஸ்டீபனை நான் அணுகிக் கேட்டேன். ஏற்றுக்கொண்ட அவர் ''புதுச்சேரியில் தமிழ்ப் புத்தக அச்சு வரலாறும், அதன் தாக்கமும்'' (19ஆம் நூற்றாண்டு) எனுந் தலைப்பில் 10-04-2019இல் வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையாற்றினார். அச்சொற்பொழிவின்போது புதுச்சேரியில் அச்சிடப்பட்ட பல புத்தகங்களைப் பற்றி விரிவாகப் பேசினார். அந்த உரை பதியப்பட்டது. அந்நாள் முதல் நான் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றேன். அவர் சில நூல்களை என்னிடம் தந்து படிக்கச் சொன்னார். நான் படித்து என் கருத்துகளைச் சொன்னேன். 'இந்த நூல்களை நான் தமிழில் மொழி பெயர்க்கலாமா?' எனக் கேட்டேன். 'சரி' என்றார். அதனடிப்படையில்தான் நான் அவர் நூல்களை கடந்த 2022 முதல் மொழிபெயர்த்து வருகின்றேன்.

மொழிபெயர்த்து அனுப்பும்போது என்னைப் பாராட்டி ஊக்கப்படுத்தியதோடு. சிறுசிறு பிழைகளைத் திருத்தி 'இப்படி இப்படி மொழிபெயர்க்க வேண்டும்' என்பார். பிற வரலாற்றறிஞர்களிடமிருந்து இவர் வேறுபடும் புள்ளி யாதெனில், இவருக்குத் தமிழ், ஆங்கிலம், போர்ச்சுக்கீசு, டச்சு, பிரெஞ்சு, டேனிஷ், ஜெர்மன் ஆகிய மொழிகள் தெரியும். இவர் போர்ச்சுக்கல், நெதர்லாந்து, ஸ்பெயின், பிரான்சு, இங்கிலாந்து, இத்தாலி, வாட்டிகன், ஜெர்மனி மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்குள்ள ஆவணக்காப்பகங்களில் தரவுகளைத் திரட்டி தன் சிறப்புமிக்க வரலாற்றறிவால், அரிய, இதுநாள் வரை நாம் படித்திராத, பல வரலாற்றுண்மைகளை, நூல்களின் வழித் தெரிவிப்பவராக இருக்கிறார் என்பதே உண்மை. ஜெயசீல ஸ்டீபன் அவர்களின் வரலாற்றாய்வு என்பது, கி.பி.1500 முதல் 1900 வரையாகும். ஆக, இதுவரை அவர் தான் கற்ற மொழியின் வழி, தமிழகக் கடல்சார் வணிக வரலாறு, தமிழ் மொழி வரலாறு, அச்சுப் பதிப்பு மற்றும் இதழியல் வரலாறு, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வரலாறு, மொழிபெயர்ப்பு வரலாறு, நெசவுத் தொழில் வரலாறு, வண்ண ஓவியங்கள், உள்ளூர்க் கலைஞர்கள் வரலாறு, அடிமைகள் வரலாறு, நெசவு வரலாறு, சாதி வரலாறு, தமிழக மக்கள் மற்றும் விலங்கினங்களுடனான தொடர்பு குறித்த ஐரோப்பியர்களின் விலங்கு அறிவியல் ஆராய்ச்சி மற்றும் மருத்துவ விலங்கியல் வளர்ச்சி வரலாறு, தமிழரின் சித்த மருத்துவ வரலாறு, தமிழக இசைக் கலைஞர்கள், நடனக்காரிகள், நாடக நடிகர்கள் வரலாறு, தமிழ் உரைநடையில் வாழ்க்கை-வரலாறு, தன்-வரலாறு, கதை, சிறுகதை, புதின வரலாறு மற்றும் தருக்க நூல்கள் வரலாறு, இலக்கண வரலாறு எனப் பல வரலாற்று நூல்களை அவர் எழுதியுள்ளார்.










*II*

*என் மொழிபெயர்ப்பு குறித்த சில பட்டறிவுகளை நான் இங்கே பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். என் மொழிபெயர்ப்பில் பெரும்பாலும் எளிய தூய தமிழ்ச் சொற்களையே கையாண்டுள்ளேன். அவை பிறருக்கும் புரியும்படியாக இருக்கும். பல சிறந்த கலைச்சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.*

| **பிற மொழிச்சொல்** | **தமிழ்ச்சொல்** |
|---|---|
| *Company* | *குழுமம்* |
| *Jelly fish* | *இழுதுமீன்* |
| *Carrot* | *சிவப்பு முள்ளங்கி* |
| *Mica* | *காக்கைப் பொன்* |
| *Missionary* | *மதப்பரப்புநர்* |
| *Magnesium* | *வெளிமம்* |
| *Magnazite* | *வெளிமடம்* |
| *Chromic acid* | *குரும்புளிமம்* |
| *Nitrate* | *வெடியகி* |
| *Chromic oxide* | *கருமவுயிரகை* |
| *Peroxide* | *வெடிய ஈருயிரகை* |
| *Chromate* | *இரும்புக் குருமளம்* |
| *Potassium nitrate* | *சாம்பரிய வெடியகி* |
| *Fauna* | *மாவடை* |
| *Tale, Story* | *கதை* |
| *Fable* | *கட்டுக்கதை* |
| *Legend* | *பழைய மரபுக் கதை* |

*ஜெயசீல ஸ்டீபனின் ஆங்கில நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இதுவரை மூன்று பரிசுகள் கிடைத்துள்ளன. ‘தமிழகக் கடல்சார் பொருளாதாரமும், போர்ச்சுக்கீசிய காலனியமயமாக்கமும்’ என்ற க.ஐயப்பன் மொழிபெயர்ப்பில் வெளிவந்த நூல் தமிழக அரசின் சிறந்த மொழிபெயர்ப்பு நூலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு (2024ல்) வழங்கப்பட்டது. ‘காலனிய வளர்ச்சிக் காலம்: புலம்பெயர்ந்தவர்களின் வாழ்க்கை’ என்ற ரகு அந்தோணி மொழிபெயர்ப்பில் வெளிவந்த நூலுக்கு தொ.மு.சி. ரகுநாதன் விருது (2019ல்) கிடைத்தது. ‘தமிழ்நாட்டில் காலனியக்கால வண்ண ஓவியங்களும், அய்ரோப்பியர்களும், உள்ளூர்க் கலைஞர்களும்’ என்ற எனது மொழிபெயர்ப்பில் வெளிவந்த நூலுக்கு தொ.மு.சி. ரகுநாதன், எழுத்தாளர் சந்திரகாந்தன் நினைவு விருது (2022ல்) கிடைத்தது. நூலாசிரியருக்கும், மொழிபெயர்ப்பாளருக்கும், நூல்களை வெளியிட்ட என்சிபிஎச் நிறுவனத்திற்கும் இதனால் பெருமையாகும்.*

*ஆங்கிலம் அறியா தமிழ் மக்கள், எஸ். ஜெயசீல ஸ்டீபனின் அரிய வரலாற்று நூல்களைப் படிக்க வேண்டும் என்ற பேரவாவின் காரணமாக, விலை அதிகமான, கனமான ஆங்கில நூல்கள், பகுதி பகுதியாகப் பிரித்து மொழிபெயர்க்கப்பட்டு, என்சிபிஎச் வெளியீட்டகத்தால் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு, வரலாற்றறிவில் தமிழ்நாட்டு மக்களுக்குப் புதுவெளிச்சத்தைப் பாய்ச்சிக் கொண்டு வருகிறது. அந்த வெளிச்சத்தைப் பாய்ச்சும் பணியில் நானும் ஒருவன் என்பது எனக்குப் பெருமிதமே. தொடர்ந்து மொழிபெயர்க்க என்னை ஊக்கப்படுத்தும் வரலாற்றறிஞர், முனைவர், பேராசிரியர் எஸ்.ஜெயசீல ஸ்டீபன் அவர்களுக்கு என் நன்றி! தொடரட்டும் என்சிபிஎச்சின் மொழிபெயர்ப்பு நூல்கள் வெளியீட்டுப் பணி!*

●

**கட்டுரையாளர்: மொழிபெயர்ப்பாளர்**

நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடாக

# மீள் புரிதல் நோக்கில் செவ்வியல் நூல்கள்

## தமிழாய்வு வரலாற்றில் ஓர் அரிய முயற்சி

**கூர்மையான, பல அடுக்குத் திட்டமிடலுடன்**
**பல முறை பலரால் மதிப்பீடு செய்யப்பெற்று**
**'விழி' - இணைய அமர்வில் விவாதித்து மேம்படுத்தப்பட்ட**

**64 அறிஞர்களின் ஆய்வுரைகள் 1300 பக்கங்களில்**
**12 தொகுதிகளாக விரைவில் வெளிவருகின்றன**



35 ஆண்டுகளுக்கு மேலாக நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் முதல் பெண் கிளை மேலாளராக பணிபுரிந்தவரும் தற்போது என்சிபிஎச்யின் தலைமைக் கணக்காளருமான தோழர் ஆர்.கிருஷ்ணவேணி அவர்கள் 19.04.2025 அன்று பணி நிறைவு செய்தபோது நடந்த பிரிவு உபச்சார நிகழ்வில் தலைமை அலுவலகப் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.




# சித்த மருத்துவ சொற்களஞ்சிய அகராதி



டாக்டர் சு.நரேந்திரன்

“ சித்த மருத்துவம் படிப்பவர்கள் யாராக இருந்தாலும் இவரது அகராதியை படிக்காமல் இருக்கமாட்டார்கள். அந்த அளவுக்கு சித்த மருத்துவத்திற்கு பெரும் பங்களிப்பு ஆற்றியுள்ளார் டி.வி.சாம்பசிவம் பிள்ளை ”

**டி.வி.சாம்பசிவம்** என்னும் பெயர் சித்த மருத்துவர்களிடையே நன்கு தெரிந்த அறிஞர் பெயர். இவர் மருத்துவம் பட்டம் பெறாதவர், மருத்துவப் பின்புலமும் அற்றவர். இருப்பினும் இவரது தன்நலம் கருதா உழைப்பினால் தமிழ் - ஆங்கில மருத்துவக் களஞ்சிய அகராதி வெளிவந்தது.

இந்தப் படைப்பில் சித்த மருத்துவத்தில் பன்படுத்தப்படும் தாவரம், உலோகம், அரிய உலோகம், விலங்கு ஆகியவைகளைப் பற்றிய ஆழமான குறிப்புகள் உள்ளன. சித்தர் இலக்கியத்தில் போகர் நிகண்டு, சட்டமுனி நிகண்டு, பிங்கல நிகண்டு போன்ற பல நிகண்டுகள் இருப்பினும் டி.வி.சாம்பசிவம் பிள்ளையின் தமிழ் ஆங்கில மருத்துவக் களஞ்சிய அகராதி சித்தமருத்துவத்தை ஆழமாக ஆய்வு செய்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அகராதி 5 பாகங்களையும் 6537 பக்கங்களையும் 80,000 வார்த்தைகளையும் கொண்டுள்ளது. இவ்வகராதியில் தமிழ்ச் சொற்களுக்கு இணையாக ஆங்கில/லத்தீன் சொற்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு சிறப்பு ஒவ்வொரு வார்த்தைக்கும் அதற்கு வேண்டிய விளக்கவுரை தேவையான இடங்களில் குறிப்புரையும் கொடுக்கப்பட்டுள்ளது.

## பிறப்பு

டி.வி.சாம்பசிவம் பிள்ளை 1880ஆம் ஆண்டு செப்டம்பர் 19ஆம் தேதி பெங்களூரில் வசதியற்ற குடும்பத்தில் பிறந்தார். இவருடைய பூர்விக ஊர் தஞ்சாவூருக்கு அருகிலுள்ள காமுகன் செந்தான்குடி என்றாலும் இங்கிருந்தே பிழைப்பிற்காக பெங்களூருவிற்கு இவருடைய பெற்றோர்கள் சென்றார்கள்.

## குடும்ப வரலாறு

சாம்பசிவம் பிள்ளை குடும்பத்தில் தலைமகனாகப் பிறந்தார். இவருடைய தந்தை வில்லையா மன்னையார் தாயார் மனோன்மணி அம்மாள், இவருடைய பெயரில் முதலெழுத்து 'T' தஞ்சாவூரையும் 'V' அவருடைய தந்தை பெயரையும் குறிக்கிறது. பெங்களூரில் பிளேக் கொள்ளை நோயாகப் பரவியபோது இவருடைய குடும்பம் காமுகன் செந்தான்குடிக்குக் குடியேறினாலும், சாம்பசிவம் பிள்ளை கல்வியைத் தொடர பெங்களூருவிலேயே தங்கிவிட்டார்.

பள்ளிப் படிப்பை பெங்களூரில் முடித்தவுடன் சென்னையில் காவல்துறை மாநகராட்சி ஆணையரிடம் எழுத்தராகப் பணியில் சேர்ந்தார். 1903இல் துரைக்கண்ணு அம்மாவை திருமணம் செய்துகொண்டார். அதன்பிறகுப் பிறந்த 5 குழந்தைகளும் இறந்துவிட்டன. இதைத் தொடர்ந்து இவரது மனைவியும் காலராவினால் பாதிக்கப்பட்டு 1914இல் இறந்துபோனார். இவருடைய பெற்றோரின் வற்புறுத்தலால் அம்மணி அம்மாவை 1916இல் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். ஆனால் அவருக்குக் குழந்தை பிறக்கும் போது இறந்து போனார். இவ்விதமாக சோகம் இவரைத் துரத்தித் துரத்தி துன்புறுத்தியதால் உளச் சோர்வுக்கு உள்ளானார். கவலையிலிருந்து விடுபட தன்னை முழுவதுமாக சித்த மருத்துவத்திற்காக அர்ப்பணித்தார். ஆங்கிலத்தில் சித்த மருத்துவத்தின் தட்டுப்பாட்டை உணர்ந்தவர், மருத்துவத்திற்கான தமிழ், ஆங்கில களஞ்சிய அகராதியை உருவாக்கினார். இது இன்றளவும் சித்த மருத்துவத்தின் இன்றியமையாத படைப்பாகத் திகழ்கிறது.

சாம்பசிவம் பிள்ளை 1916ஆம் ஆண்டிலிருந்து இரவு பகலாகப் படித்து, எழுதிய சேகரிப்புகளை எல்லாம் நூலகமாக்கினார். பின்பு தன்னுடைய பெரும்பகுதி ஊதியத்துடன் தன்னுடைய நிலபுலன்களையும் விற்பனை செய்து தான் சேகரித்து எழுதியவைகளில் இரண்டு பாகங்களை 1938ஆம் ஆண்டு வெளிவிட்டார். பிறகு ஒரு பகுதியை தானும் மீதியைத் தமிழ்நாடு அரசு உதவியுடனும் வெளியிட்டார்.

மூன்று பகுதி அகராதி மிகப்பெரிய அளவில் வெளிவந்தபிறகு மருத்துவ உலகமும், அரசும், இவருடைய தன்னிகரில்லாத உழைப்பைக் கண்டுணர்ந்து இதைத் தொடர்ந்து தன்னுடைய பணியைத் தொடர்ந்து ஐந்தாவது, ஆறாவது தொகுதியை உருவாக்க முனைந்தார். இவருடைய ஆழமான ஆய்வைப் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசு 1949ஆம் ஆண்டு ரூ.5000 நிதியுதவி வழங்கியதோடு சென்னை திருவல்லிக்கேணியில் வசிப்பதற்கும் வழி செய்தது. இது போலவே இவருடைய ஆய்வுப் பணியைப் பாராட்டும் விதத்தில் சென்னைப் பல்கலைக் கழகமும் மைசூர்ப் பல்கலைக் கழகமும் முறையே ரூ.5000 நிதி கொடுத்துதவின. இவர் 1953ஆம் ஆண்டு நவம்பர் 12இல் தனது 73ஆம் வயதில் இயற்கை எய்தினார். இவருடைய 6537 பக்கங்கள் கொண்ட அகராதியை தமிழ்நாடு அரசின் இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை மறுபதிப்பு செய்து The Greatness of Siddha Medicine என்று பெயரிட்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் 1968ஆம் ஆண்டு வெயிட்டது.

சாம்பசிவம் பிள்ளை மறைவுக்குப் பிறகு தமிழ்நாடு அரசு அவருடைய அகராதி, தொகுப்புகளைத் தன்னிடம் வைத்துக் கொண்டு பதிப்பிக்காது வாளா இருந்தது. 1972இல் சித்தாந்த நூற்பதிப்புக் கழக நிறுவனர் வ.சுப்பையாபிள்ளை செந்தமிழ் செல்வி எனும் மாத இதழில் இவ்வகராதி குறித்து ஒரு கட்டுரை எழுதினார்.

சித்த மருத்துவம் குறித்த இந்த அரிய அகராதியை அறிந்த விஞ்ஞானி ஜி.டி.நாயுடு IV, V பாகங்கள் வெளியிட முன்வந்தார். ஆனால் இதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே மறைவுற்றார். இருப்பினும் அவருடைய மகன் ஜி.டி.என். கோபால் 1977இல் IV பாகத்தையும் 1978இல் V பாகத்தையும் வெளிக்கொணர்ந்தார்.

**நூலின் சிறப்பு**

தமிழர்களின் சித்த மருத்துவத்தை உலகெங்கிலும் உள்ளவர்கள் சுருக்கமாக தெரிந்து கொள்ளவேண்டும். அம்மருத்துவ சொற்களுக்கான நவீன மருத்துவச் சொல்லின் ஒப்புமைகளும் சுருக்கமான விளக்கங்களுடன் இருக்க வேண்டும். என்ற நோக்கில் வெளிவந்ததே டி.வி.சாம்பசிவம் பிள்ளையின் இந்த மருத்துவ அகராதி. இது சித்த மருத்துவக் கலைகளஞ்சியமாகவும் உள்ளது. இந்த அகராதி தமிழ், ஆங்கிலம் சொற்களுக்கான விளக்கங்களை அளிக்கிறது. சித்த மருத்துவம் அனைத்தும் தமிழ்க் கவிதையில் உள்ளதாய், சரியான தகவலை அறிய பாடல் வரிகளைப் புரிந்து கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது. இதனைக் களைந்து உலகளவில் சித்த மருத்துவ முறைகளை அறிவூட்டுவதற்கு வழிவகுக்கும், நவீன மருத்துவச் சொற்களுடன் உள்ள தொடர்புகள் சரியான அர்த்தங்களைப் புரிந்து கொள்வதற்கு இந்த அகராதிகள் ஆதாரப் பொருளாக விளங்குகிறது.

இத்தொகுப்பு உள்ளடக்கமும் செழுமையின் தரமும் மிகையாக இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒன்று கலைச்சொல் பகுதி. மற்றொன்று விளக்கப் பகுதி. விளக்கப்பகுதி தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கப்பட்டுள்ளன.

தமிழில் சமஸ்கிருதம் வலிந்து திணிக்கப்பட்டு நன்கு கலந்து வேரூன்றியிருந்த காலத்தில் வெளிவந்த அகராதி. ஆகவே இந்நூலில் மிகப் பெருமளவு கலைச் சொற்களும் அவற்றுக்கான விளக்கத்திலும் சமஸ்கிருதச் சொற்கள் கையாளப்பட்டுள்ளன. எ.கா. முதல் தலைச் சொல்லுக்கான விளக்கத்திலேயே 'சர்வாந்தர் யாமி' , 'பாஷை', 'சிருஷ்டி', 'ரூபம்' ஜெபித்தல், விஷம், கிருகதோஷம் என்றெல்லாம் வருகின்றன. மேலும் எது தமிழ்ச் சொல் எது பிறமொழிச் சொல் என்று அறிஞர்களே அறிந்து கொள்ளமுடியாத நிலை இருந்தது. எ.கா. இந்நூலில் ஆநாகரோகம் என்கிற பிறமொழிச் சொல்லுக்கு தமிழில் 'உஷ்ணவாடி' என்று பெயர் என்பதாக நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். உஷ்ணம், வாயு இரண்டுமே தமிழ் இல்லை, இருப்பினும் இதன் மூலம் அக்கால கட்டத்தில் தமிழ்நாட்டில் வழக்கிலிருந்த சொற்களை அறிய உதவுகிறது எனலாம்.

**பாராட்டு**

"சித்த மருத்துவம் படிப்பவர்கள் யாராக இருந்தாலும் இவரது அகராதியை படிக்காமல் இருக்கமாட்டார்கள். அந்த அளவுக்கு சித்த மருத்துவத்திற்கு பெரும் பங்களிப்பு ஆற்றியுள்ளார். டி.வி.சாம்பசிவம் பிள்ளை" என்று மைய சித்த மருத்துவ ஆராய்ச்சிக் குழுமத்தின் தலைமை இயக்குநர் டாக்டர் க.கனகவல்லி தெரிவிக்கிறார்.

தேவநேயப் பாவாணர் 1985இல் வெளியிட்ட தன் செந்தமிழ் சொற்ப்பிறப்பியல் முதல் பாகத்தில் உள்ள 6500 சொற்களில் ஏறத்தாழ 1250 சொற்கள் டி.வி.சாம்பசிவம் பிள்ளை அகராதியிலிருந்து பெறப்பட்டது என்று கூறுவதோடு தன்னுடைய மற்றைய அகராதி தொகுப்புகளிலும் சாம்பசிவம் பிள்ளையின் பல கருத்துகளை எடுத்தாண்டுள்ளதாகவும் தெரிவிக்கிறார்.




**இந்திய ஒன்றிய அரசு பாராட்டு**


இந்திய அரசு இவரைப் பாராட்டும் வகையில் பன்னிரண்டு இந்திய மருத்துவ மேதைகளின் வரிசையில் இவருக்கும் 5 ரூபாய் மதிப்பு அஞ்சல் தலையை 2019 ஆகஸ்டு 30ஆம் தேதி வெளியிட்டது. இதற்கு முன்னதாக இந்த 12 மருத்துவர்களைப் பாராட்டும் விதமாக ஆயுஷ் காலண்டர் வெளியிடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

எஸ்ஆர்எம் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராயம் சாம்பசிவம் பிள்ளையின் அகராதிகளை வெளியிட திட்டமிட்டு இன்றைய காலகட்டத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைத்து முதல் தொகுதியை 2014இல் வெளியிட்டுள்ளது. மற்றைய தொகுதிகளையும் வெளியிட்டால் தமிழுக்கு செய்யும் பெருந்தொண்டாக அமையும்.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்,**
**சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்**


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 85/-




₹ 50/-




₹ 180/-




₹ 90/-




₹ 200/-





₹ 80/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | email: info@ncbh.in



# கணியன்பாலன் கட்டமைக்கும் பண்டைத் தமிழ்ச் சமூகம்



இரா. அறவேந்தன்

பண்டைத் தமிழரின் வாழ்வியல் முறையை விளக்குகின்ற ஆய்வாளர்கள் பல்வேறு வகையான அணுகுமுறைகளைக் கையாண்டுள்ளனர். இலக்கியங்களை மட்டும் தரவாகக் கருதுதல், இலக்கியங்களை மானுடவியல் முதலான பிற துறைப் பார்வையில் விளக்குதல், தொல்லியலை முதன்மையாக்கி இலக்கியத்தைத் துணையாக்கிக் கொள்ளுதல், உலக அளவிலான பிற தொல்குடி இயல்புகளுடன் ஒப்பிட்டு விளக்குதல் என அவை அமைகின்றன. இவற்றில், பிறமொழி பிற இன தொல்குடி வாழ்வியலைப் பண்டைத் தமிழ்ச் சமூக இயங்கியலுடன் இணைத்துப் பார்த்து விளக்குகின்ற பாங்கில் கணியன்பாலனின் ‘தொல்பழங்காலமும் தமிழக நகர அரசுகளும்' எனும் நூல்(2024) அமைந்துள்ளது. இந்த நூல், தன் கருத்தியலாக்கத்திற்கு மார்கன் எழுதிய ‘பண்டைய சமுதாயம்' என்ற நூலையும் அதை ஒட்டி எங்கெல்சு எழுதிய 'குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்ற நூலையும் அடிப்படையாகக் கொண்டு எஸ்.ஏ.டாங்கே எழுதிய 'பண்டைக்கால இந்தியா' என்ற நூலையும் கவனத்தில் கொள்கிறது. மார்கன், எங்கெல்சு நூல்களைத் தனித்தனியாக வாசிப்பதற்கு அப்பால் ஒன்றின் தொடர்ச்சியாக ஒன்றினை வாசித்து, அந்தப் பின்புலத்தில்




**தொல்பழங்காலமும் தமிழக நகர அரசுகளும்**
**கணியன்பாலன் | வெளியீடு: என்சிபிஎச். சென்னை.**
**விலை: ரூ.310/-**

தமிழ்ச் சமூகத்தின் பண்டைய வாழ்வியலை ஆராய்ந்து புதிய புரிதல்களை முன்வைத்துள்ளது.

அமெரிக்க, கிரேக்க உரோமச் சமூகங்களைக் காட்டுமிராண்டிநிலை, அநாகரிகநிலை, நாகரிகநிலை என்று பகுத்து ஆராய்ந்ததை அடிப்படையாகக் கொண்டு ஆரியச் சமூகத்தில் தொல்நிலையை டாங்கே ஆராய்கிறார். ஆரிய மரபில் சுட்டப்படுகின்ற கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் எனும் பகுப்புகளில் புராணத்தன்மை இருந்தாலும் பகுப்பிற்குள் இழையோடுகின்ற சமூக வளர்ச்சி நிலையானது மார்கன், எங்கெல்சு ஆகியோர் குறிப்பிடுகின்ற சமூக வளர்ச்சிப் படிநிலையோடு ஒத்த தன்மையுடன் இருப்பதாக டாங்கே கருதுகின்றார். இவற்றை விரிவாக எடுத்துரைக்கின்றது இந்த நூலின் முன்பகுதி. இவற்றுடன் தமிழ்ச் சமூகத்தின் தொல்நிலையை ஒப்பிட்டுக் காட்டி, ஏனைய சமூக இயங்கியலிலிருந்து தமிழ்ச் சமூக இயங்கியல் வேறுபட்டு அமையும் பாங்கை அடையாளப்படுத்துகிறது.

கிருதயுகத்தைச் சேர்ந்த ஆரியர்கள் கூட்டு வாழ்க்கை வாழ்ந்தனர். அவர்களுக்கு என்று அரச அமைப்பு இல்லை. கிடைப்பதை உண்டு வாழ்ந்தனர். அலைந்து திரிகின்ற வாழ்க்கை முறைக்கு உரியவர்களாக இருந்தனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த வாழ்க்கைமுறை தொடர்ந்தது. திரேதாயுக மக்கள் நெருப்பைப் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். வாழ்க்கையின் எல்லா வகையான நுகர்வுக்கும் நெருப்பை அடிப்படையாகக் கொண்டனர். இதன் அடிப்படையில் விலங்குகளையும் பகைவர்களையும் தமக்கேற்ப மாற்றி அமைத்தனர். இதனால், ஓரிடத்தில் வாழுதல் என்ற சூழல் உருவாகிற்று. செல்வத்தைக் கூடுதலாக உற்பத்தி செய்தல் என்ற புதிய பொருள் உற்பத்தி முறை (யக்ஞம்/யாகம்) வழக்குப்பெற்றது. கூட்டு உழைப்பு, அதை ஒட்டிய உற்பத்தி முறை, தாய்வழிச் சமூகம் அனைத்து உறுப்பினர்களும் இரத்த உடையவர்களாக இருப்பது, திருமணமோ தனிக்குடும்பமோ இல்லாமல் இருப்பது, தனிச்சொத்தோ வர்க்கமோ இல்லாமல் இருப்பது, வேலைப் பிரிவினை இல்லாமல் இருப்பது, அனைத்துப் பொறுப்புகளும் அனைவருக்கும் உரியவை, படை காவல் பிற நிர்வாக அமைப்புகள் சட்டம் அரசு எவையும் இல்லாமல் இருப்பது, உறுப்பினர்கள் அனைவருமே ஆயுதம் கொண்டு இருப்பது எனும் வாழ்வியல் முறைகள் வழக்குப் பெற்றன.

இந்த வாழ்வியல் முறையில் உற்பத்திச் சக்திகள் வளரும்போது தற்காலிகப் பொறுப்பாளர்கள் சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால், உற்பத்திப்பணி முடிந்தவுடன் பொறுப்பும் முடிந்தது. அதாவது, ஒரு நிலையான தலைமை உருவாகவில்லை. இந்தத் திரேதா யுகத்தில் கணங்கள் பல சேர்ந்து குலங்கள் உருவாகின. குழுமணம் வழக்குப்பெற்றது. உலோகங்கள் பற்றிய அறிவு இருப்பினும் அவை உற்பத்தி முறைக்குப் பயன்படுத்தப் பெறவில்லை. இதற்கு அடுத்ததாகக் கருதப்படுகின்ற துவாபர யுகத்தில் வேளாண்மையும் கைத்தொழிலும் வழக்குப் பெற்றன. வணிகம் செழித்தது. தனியுடைமை உருவாகிற்று. இணை மணமுறை வழக்குப்பெற்றது. காலவோட்டத்தில் ஒருதார மணம் உருவாகிற்று. தனிச்சொத்துடைமை வலுப்பெற்றது. தாய் தலைமை வீழ்ச்சியுற்றது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் வெவ்வேறு கணத்தவர்கள் வாழுதல் மற்றும் ஒரு கணத்தைச் சேர்ந்தவர்கள் வெவ்வேறு பகுதிகளில் வாழ்தல் என்ற வாழ்வியல் இடமாற்றமும் உருவாகிற்று. இரத்த உறவு முறையை அடிப்படையாகக் கொண்டு மக்களைப் பகுத்த கண அமைப்பிற்கு மாறாக, மக்கள் வாழ்கின்ற நிலப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு சமூக வாழ்வியலைப் பகுக்கும் அரசு எனும் அமைப்பு உருவாகிற்று. இத்தகு ஆரியச் சமூக

வளர்ச்சி இயல்புகள் யாவும் மார்கன் எங்கெல்சு சுட்டும் தொல்சமூக வளர்ச்சிப்போக்குடன் ஒத்துச் செல்கின்றன என்பதனை இந்த நூல் விரிவாக எடுத்துரைக்கிறது.

ஊடே, பீஷ்மர் சுட்டுகின்ற சங்கல்பம், சம்சுபரிசம், மைதுனம், துவந்தம் எனும் மண முறைகள் யாவும் முறையே தடையற்ற பாலியலுறவு, குழுமணம், இணைமணம், ஒருதாரமணம் எனும் மணமுறை வளர்ச்சிப் போக்குடன் ஒத்துள்ளதையும் எடுத்துக் காட்டுகின்றது. இது சார்ந்த புரிதல்களை வடமொழி புராண இதிகாசங்களில் இடம்பெறுகிற சுதர்சன முனிவர் ஓகாவதி, கௌதமன் கௌதமி, ஜமதக்கினி ரேணுகா எனும் மூன்று இணையருடைய வாழ்க்கைவழி விளக்குகிறது. விருந்தாளிக்குத் தன்னை ஓகாவதி ஒப்படைக்கிறாள். இதனை அறிந்த சுதர்சனன் எவ்வகையான கருத்தியல் மாற்றத்தையும் அடையவில்லை. மனைவி விருந்தினருடன் உறவு வைத்துக்கொண்டதைத் தம் மரபுசார் பண்பாட்டுப் பழக்கமாகக் கருதுகிறான். இதுவே, கௌதமி விருந்தாளிக்குத் தன்னை அளிக்கும்போது கௌதமன் சினம் கொள்கிறான். தன் மகனிடம் தாயைக் கொன்றுவிடுமாறு சொல்லுகிறான். ஆனால், அவன் தாயைக் கொல்லவில்லை. எனினும், கௌதமனின் சினம் தணிந்து தன்னுடைய மனைவியின் செயலை ஏற்கிறான். இவற்றிலிருந்து ஜமதக்கனி ரேணுகா வாழ்க்கை முறை வேறுபட்டு அமைகிறது. ரேணுகா, சித்திரரதா என்கிற கந்தர்வன் மீது ஆசைகொள்வதை அறிந்த ஜமதக்கனி, தன் மகனிடம் தாயைக் கொல்லுமாறு தெரிவிக்க, மகன் தாயைக் கொன்று விடுகின்றான். இந்த மூன்று கதைகளையும் அடுத்தடுத்த சமூகவாழ்வியல் படிமுறை வளர்ச்சியை அறிந்து கொள்வதற்கு ஏற்றதாக இந்த நூல் விளக்குகிறது. இது போன்ற கருத்தியல் பின்புல அடிப்படையில் சங்க காலத்தை ஆராய்ந்து எழுதிய ஆய்வுகள் பல வெளிவந்துள்ளன. எனினும், அவற்றிலிருந்து இந்த நூல் வேறுபட்ட பார்வையை முன்வைக்கிறது.

மேற்சுட்டிய சமூக வளர்ச்சிப் போக்கில் கணம், குலம் முதலானவை மறைந்து அரசு உருவாகிவிட்ட சமூகச் சூழலில் இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அதாவது,[4] கிரேக்கத்தில் ஒடிசி, இலியத் சமஸ்கிருதத்தில் மகாபாரதம், இராமாயணம் தோன்றியதை ஒத்த சமூக இயங்கியலை உடையனவாகச் சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன என்கிறது இந்த நூல்.

சங்க இலக்கியங்கள் சுட்டும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்கிற திணைப் பாகுபாடுகள் தமிழ் மக்கள் பிரதேச அடிப்படையில் பிரிந்து வாழ்ந்ததைக் காட்டுகின்றன என்கிறது. தமிழகத்தில் குறிஞ்சி நிலக் குறுமன்னர்களும் முல்லை நிலச் சீரூர் மன்னர்களும் மருதநில மூதூர் மன்னர்களும் சிறு நகரங்கள், பேரூர்கள் ஆகியவற்றின் ஆட்சியாளர்களாகவே உள்ளனர். அவர்கள் குலம், குலக்குழு, கூட்டுழைப்பு ஆகியவற்றின் தலைவர்களாக இல்லை; பிரதேச அடிப்படையிலான தலைவர்களாக, அரசர்களாக, மன்னர்களாக உள்ளனர். பாரி பரம்பு மலையின் ஆட்சியாளன்; ஓரி கொல்லிமலையின் ஆட்சியாளன் என்பன போன்று பலரும் ஏதேனும் ஒரு ஊரின், ஒரு சிறு நகரத்தின் ஆட்சியாளராகச் சொல்லப்படுகின்றனர். அதாவது, 'ஒரு மன்னன் ஒரு நிலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டு அடையாளப்படுத்தப்படுவதை இந்த நூல் கவனத்தில் கொள்கிறது. குறிப்பாக, ஓரி, அதியமான் ஆகிய இருவருமே மழவர் இனத்தின் தலைவர்கள். ஆனாலும், இருவரும் வெவ்வேறு நிலப்பகுதியின் ஆட்சியாளராகத் திகழ்கின்றனர். ஓர் இனத்தின் தலைவராக ஒருவர் இருந்தால் யாரேனும் ஒருவர்தான் ஆட்சியாளராக இருக்க முடியும். ஆனால், வெவ்வேறு நிலப்பகுதியின் ஆட்சியாளர்களாக ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் இருப்பதனால் பிரதேச அடிப்படையிலான ஆட்சி முறை தமிழகத்தில் வழக்குப் பெற்றதைச் சங்க இலக்கியம் தெளிவாக்குகின்றது'(ப.95) என்கிறது. இந்தச் சூழலில்தான் கிரேக்க, உரோம, அமெரிக்க, ஆரியத் தொல்குடிச் சமூகங்களில் நிலவிய வாழ்க்கை முறையிலிருந்து தமிழ்ச் சமூகம் வேறுபட்டு அமைவதையும் அந்த வேறுபாட்டால் நேர்ந்த வெவ்வேறு வகையான சூழல்களையும் சுட்டிக்காட்டுகிறது. குறிப்பாக கிரேக்க, உரோம தொல் வாழ்வியல் முறையில் வேளாண்மையைவிடக் கைத்தொழில், பட்டறைத்தொழில், வாணிகம், கப்பல் தொழில் முதலானவை வேகமாக வளர்ந்தன என்கிறது. இந்தப் பட்டறைத்தொழிலில் இயந்திரப் பயன்பாடு இல்லை; முற்றிலும் மனித உழைப்பே ஈடுபடுத்தப்பட்டது. இந்த மனித உழைப்பில் அடிமைகள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டனர். ஒரு குறிப்பிட்ட இடத்தில் அடிமைகள் வாழ்வதற்கான சூழலை இந்தப் பட்டறைத்தொழில் உருவாக்கிற்று. இதன்வழி உருவான கப்பல் கட்டுதல் முதலான தொழில்களும் அதனை ஒட்டி உருவான வாணிக வளர்ச்சியும்

மேலும் மேலும் பொருள் உற்பத்திமுறையில் அடிமைகள் உருவாவதற்குக் காரணமாக அமைந்தன. ஆண்டான் அடிமை என்ற சமூகப் பிளவு மிகப்பெரிய அளவில் அங்கு வளர்ந்தது. வேளாண் வளர்ச்சிக்கு ஏற்ற சூழல் அங்கு உருவாகவில்லை. ஆனால், பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் வேளாண் வளர்ச்சி என்பது உச்சம் பெற்றது. கைத்தொழில் என்பதோ பட்டறைத்தொழில் என்பதோ முதன்மை பெறவில்லை. வேளாண் வளர்ச்சி முதன்மை பெற்றதால் அடிமைகளுடைய வாழ்வியல்முறை தமிழகத்தில் பெரிதும் கோலோச்சவில்லை. வேளாண்முறை என்பது நுணுக்கமானது மட்டுமன்றிக் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட மேற்பார்வையில் நிகழ்வது, நிலையான அடிமைகளைத் தொடர்ந்து பயன்படுத்துவதற்கு ஏற்ற வாய்ப்பற்றது. இதனால், இங்கு வணிக வளர்ச்சியும் கைத்தொழில் வளர்ச்சியும் அடிமை முறையும் பின்தங்கிப் போகின்றன. அதே நேரத்தில் இந்த வேளாண்மை வளர்ச்சியானது பரம்பரை ஆட்சிக்கும் தொழில் வகுப்புப் பிரிவுகளுக்கும் வர்க்கங்கள் உருவாவதற்கும் ஒரு வகையில் காரணமாக அமைந்ததனையும் இந்த நூல் சுட்டிக்காட்டுகிறது.

கணமுறையில் சிறு மக்கட் பேரவையில் கணத் தலைவர்கள் இருந்தனர். இவர்கள் கணத்தின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நாளடைவில் தலைவர்களின் மகன்களுக்குத் தேர்தலில் முன்னுரிமை வழங்கப்பட்டது. இந்த தலைவர்கள் கணத்திற்கான பொதுச் சொத்து அனைத்திற்கும் பொறுப்பாளர்களாகவும் திகழ்ந்தனர். தொடர்ச்சியாகப் பிரபுத்துவம் உருவாகிற்று. பொதுச்சொத்து குடும்பச் சொத்தாக மாறிற்று. இராணுவத் தளபதியும் வாரிசு உரிமை பெற்றவராக அமைந்தார். நிரந்தரத் தலைவர்கள் உருவாகினர். அரசன் உருவாகினான். இவ்விதப் பொதுப் போக்குகள் தமிழகத்திலும் நிலவின என்று குறிப்பிடும் இந்த நூல், வேளிரைப் பிரபுக்களாகவும் சேர சோழ பாண்டியரை வேளிர்க்கான வேந்தர்களாகவும் தொடர்புபடுத்துகிறது. அதாவது, சேர சோழ பாண்டியர்களில் வேந்தன் என்ற நிலையில் ஒருவன் இருக்க, அவர்களுக்குக் கீழே வேளிர் பலர் இருந்தனர்; அரசர்கள் பலர் இருந்தனர் என்கிறது இந்த நூல். இந்தத் தொடர்புபடுத்தத்தில் தொடர்ச்சியாகக் கிரேக்க உரோம வாழ்வியலில் நகர அரசுகள் உருவாகின. தமிழகத்தில் வேளாண்மை சமூகம் முதன்மை பெற்றதால் இங்கு நகர அரசுகளைவிட நகர்மைய அரசுகள் தான் உருவாகின என்கிறது. அதாவது, சிற்றூர்கள் பேரூர்கள் அரசு உருவாக்கத்தில் முதன்மை பெற்றன என்கிறது.

வேளாண் வளர்ச்சிக்கும் பரம்பரை ஆட்சி முறைக்கும் உள்ள தொடர்பினை விளக்குவதற்குப் பிற்கால உரோம ஜெர்மானியச் சமூகங்களில் நிகழ்ந்த வேளாண் வளர்ச்சியையும், அதே காலத்தில் உருவான பரம்பரை மன்னர் ஆட்சியையும் இந்த நூல் தொடர்புபடுத்திக் காட்டுகிறது. இந்தப் பரம்பரை ஆட்சியானது ஒரு முடியாட்சி போன்று இல்லை. ஒரு வரம்புக்கு உட்பட்ட மக்கள் மன்றத்தின் ஆளுகைக்கு உட்பட்ட ஆட்சியாகவே இருந்தது என்கிறது. மக்கள் மன்றங்கள் வலுவிழந்து, பேரரசுகள் உருவாகிவிட்ட சூழலுக்குரியதாகக் கிரேக்க உரோமச் சமூகங்கள் திகழ, தமிழ்ச் சமூகம் நகர்மைய அரசுகளுக்கு உரியதாக இருக்கின்றதே தவிர பேரரசுக்கு உரியதாக இல்லை. இதனால், கண அமைப்பின் நீட்சியாக மக்களுடைய ஆளுகை தமிழக அரசுகளில் இருந்தன என்கிறது. குறிப்பாகத் தமிழக அரசுகளின் ஆளுவோர் தெரிவு செய்யப்பெற்ற முறையையும் கவனத்தில் கொள்கிறது.

அரசன் பரம்பரை வழியாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றாலும் அவனுடைய ஆட்சிக்குட்பட்ட பல்வேறு துறைகளை நிர்வகிக்கின்ற தலைவர்கள் மக்களால் தேர்வு செய்யப்பட்டவர்களாக உள்ளனர் என்பதனை இந்த நூல் தெளிவுபடுத்துகிறது. அதாவது, மெகஸ்தனிஸ் குறிப்பிடுகின்ற கருத்தையும் அகநானூற்று 77ஆம் பாடலில் இடம்பெறுகின்ற குடவோலைமுறை தொடர்பான குறிப்பையும் இந்த நூல் கவனத்திற்கு உட்படுத்துகிறது. இந்தக் குடவோலை முறையால் மக்களின் பிரதிநிதி அரசு அதிகாரத்தில் இடம் பெறுவதைச் சுட்டிக்காட்டி, அது கண அமைப்பின் தொடர்ச்சி என்கிறது. கண அமைப்பு அழிந்துவிட்டாலும் அதனுடைய தன்மைகள் சங்க காலத்தில் தொடர்ந்தன என்கிறது. முடியாட்சி தன்மைக்குரிய அரச அதிகாரம் ஒரு வரம்பிற்கு உட்பட்டதாகவே திகழ்ந்தது என்கிறது.

இந்த நூல் சுட்டும் மற்றொரு கருத்து மிகுந்த கவனத்திற்குரியது. அதாவது, வாணிக வளர்ச்சி, பேரரசுகளுடைய உருவாக்கம் ஆகியவை பொருள் முதல்வாதச் சிந்தனையோடு தொடர்புபடுத்திச் சிந்திக்கத் தக்கவை என்கிறது. உரோம ஐரோப்பியச் சமூகங்களில் பேரரசுகள் உருவாகிய காலத்தில்தான் பொருள் முதல்வாதச் சிந்தனைகள் வீழ்ச்சி

பெற்றன என்கிறது. வட இந்தியாவில் சிறு குறு நகர் மைய அரசுகள் வாணிக நகர அரசுகளாக வளர்ச்சி அடைவதற்குள் மதம் சார்ந்த பெரிய அரசுகள் உருவாகிவிட்டன.

இதனால், ‘சிறு குறு நகர அரசுகளில் இருந்த சுதந்திரமான சிந்தனைகளும் பொருள் முதல்வாத மெய்யியலும் சமண பௌத்த மத சிந்தனைகளும் வழக்கற்றுப்போகத் தொடங்கின' (ப.45) என்கிறது. தமிழகத்தில் பரம்பரை ஆட்சி முறை இருந்தாலும் அது மூத்த மகன் ஆளுதல் எனும் தாய முறைக்கு உரியதாக இல்லை என்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரே குடியைச் சார்ந்த பலர் வெவ்வேறு நிலப் பகுதிகளில் அரசாண்டதை எடுத்துக்காட்டுகிறது. பாண்டியர் கொற்கை, மதுரை போன்ற இடங்களிலும் சோழர் உறையூர், பூம்புகார் போன்ற இடங்களிலும் சேரர் வஞ்சி, கருவூர் போன்ற இடங்களிலும் ஒரே நேரத்தில் ஆட்சி செய்தனர். இதனால்தான் ‘பஞ்சமர்' எனப் புறநானூறு பாண்டியர்களைக் குறிப்பிடுகிறது என்கிறது. மேலும், 'சேரன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வடக்கிருந்தபோது அவனது தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் அவனது மூத்த மகன் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் அவனது நடுமகன் சேரன் செங்குட்டுவன் அவனது தாயாதித் தம்பி சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதன் அவனது கிளை வம்சத்தைச் சேர்ந்த பொறையர் குல அரசர்கள் பாலைபாடிய பெருங்கடுங்கோ மற்றும் மாந்தரன் பொறையன் கடுங்கோ என ஆறு பேர் ஆண்டு வந்தனர். ஆனால், அவனது தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் மட்டுமே வேந்தனாக இருந்துள்ளான். மீதி ஐந்து பேரும் பிற நகர அரசுகளின் அரசர்களாக இருந்தனர்'(ப.142) என்று எடுத்துக்காட்டுகிறது.

சுருங்கச் சொல்வது என்றால் கண அமைப்பிலிருந்து வளர்ச்சி அடைகிற அரச முறையை இந்த நூல் நகர அரசு நகர்மைய அரசு என்றும் வாணிக அரசு என்றும் பேரரசு என்றும் அடையாளப்படுத்துகிறது எனலாம். இவற்றில், நகர்மைய அரசுகள்தான் தமிழ்ச் சமூகத்தில் சங்க காலத்திலும் நிலவியதாக இந்த நூல் சுட்டுகிறது. இதனால், பொருள் முதல்வாதக் கருத்தியலானது பெரு வழக்குப் பெற்றது என்கிறது. இந்திய வடபுலத்திலும் உரோம ஐரோப்பிய நாடுகளிலும் வாணிக வளர்ச்சி மதநிறுவன வளர்ச்சி ஆகியவற்றால் அங்கு பொருள் முதல்வாதச் சிந்தனைகள் வீழ்ச்சி பெற்றுவிடுகின்றன என்கிறது. சங்கச் சமூகத்தில் கடவுள் நம்பிக்கை இருந்தாலும் அந்தக் கடவுள் நம்பிக்கையானது மனிதர்கள் வாழ்க்கையில் உயர்ந்து நிற்கின்ற நிலையைச் சுட்டுவதாக இருக்கிறது. தனி ஒரு கடவுளைப் போற்றுகின்ற தன்மை பக்தி இலக்கியக் காலத்தில்தான் உருவாகிறது என்கிறது. இயற்கையைவிட ஆன்மாவை இந்த உலகிற்கு அப்பாற்பட்ட ஒன்றினை முதன்மைப்படுத்திப் போற்றும் பாங்கு ஏனைய சமூகங்களில் கண அமைப்பு வீழ்ச்சியுற்றதும் வழக்குப் பெற்றுவிடுகிறது. ஆனால், தமிழகத்தில் பக்தி இலக்கியக் காலத்தில்தான் அது உருவாகிறது என்கிறது. இத்தகு கருத்தாக்க முறைதான் இந்த நூலுக்கான வலிமை. உலகத் தொல்லினங்களின் வளர்ச்சிப் போக்குடன் ஒப்பிடத்தக்க இயல்புகளைத் தமிழ்ச் சமூகம் பெற்றிருப்பினும் காலப்போக்கில் தனக்கெனச் சில தனித்தன்மைகளை உடையதாக வளர்ந்துள்ளது.

இந்த வளர்ச்சிக்கும் பொருள்முதல்வாதச் சிந்தனைக்கும் செவ்வியல் இலக்கிய உருவாக்கத்திற்கும் தொடர்புபடுத்தி ஆராய்வதன் தேவையை இந்த நூல் உருவாக்கியுள்ளதாகவும் கருத இயலும். நூல் நெடுக நீரோட்டம் போல் அமைந்துள்ள மீள் வருகையைத் தவிர்த்துவிட்டால் இந்த நூல் தமிழ் ஆய்வுலகிற்குப் புதியதொரு பார்வையை வழங்கியது என்று கூறலாம். இந்த நூல் சமூக வளர்ச்சியை அதன் இயங்கியல் அடிப்படையில் படிமுறை வளர்ச்சிப் போக்கில் விளக்குவதாக அமைகிறது. இந்த நோக்குநிலையில் இருந்து கருத்துகளை உள்வாங்கிச் செல்லும் வாசகரின் மனத்திற்கு நூலில் ஆங்காங்குச் சுட்டப்படும் காலக்கணிப்புகள் இடையூறு செய்கின்றன என்பதும் உண்மைதான்.

**துணையன்**

1. கணியன்பாலன், 2024, என்சிபிஎச், சென்னை. தொல்பழங்காலமும் தமிழக நகர, அரசுகளும்,

*குறிப்பு: புதுதில்லி ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகச் சிறப்புநிலைத் தமிழ்த்துறையின் திங்கள்வட்ட நூல்மதிப்புரை அரங்கில் (24.03.2025) வாசித்ததன் மேம்பட்ட வடிவம் இது. படித்துக் கருத்து வழங்கிய ஆய்வாளர் எம். தீபன் அவர்களுக்கு நன்றி.*


●

**கட்டுரையாளர்: பேராசிரியர், சிறப்புநிலைத் தமிழ்துறை, ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகம், புது டில்லி.**


## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 360/-




₹ 400/-




₹ 220/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!










**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**மே மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

| | | |
|---|---|---|
| 2392 | 1526 | 8819 |
| 2391 | 1921 | 5752 |
| 5417 | 2679 | 5753 |

தனி இதழ் ₹ **45.00 /** ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**, / ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**

*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*


### கிளைகள்

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

நூல் அறிமுகம்

# மடியில் தங்கியிருக்கும் மரணம்!








இலட்சக்கணக்கான மனிதர்களின் தினசரிப் பிழைப்பிற்கான ஆதாரமாக இருக்கும் பட்டாசுத் தொழில் பற்றிய நுட்பமான தகவல்களுடன் மனதை உருக்கும் உயிர்வதைக் காட்சிகளுடன் 'கரிக்காசு' என்ற பெயரில் ஒரு நாவல் வந்திருக்கிறது. குழந்தைகள் மட்டுமின்றி பெரியவர்களையும் மகிழ்விக்கிற பலவிதமான வாணவேடிக்கைகளின் ஆதாரமான உழைப்பைப் பற்றி விலாவாரியாக விளக்குகிறது நாவல்.

சிவகாசி பகுதியில் உள்ள சிறிய கிராமத்தில் எளிய மனிதர்கள் அனுபவிக்கும் துயரத்தைச் சொல்லி வாசகர்களைப் பதைபதைக்க வைக்கிறது நாவல். மாறன், அல்லி தம்பதியினர் அகிலா, பாரதி என்ற இருபெண் குழந்தைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் உறவினருடன் சேர்ந்து பட்டாசுத் தொழிற்சாலையில் வேலை செய்கின்றனர்.



ஜனகப்பிரியா




**வெற்றி மொழி வெளியீட்டகம் | விலை: ரூ.800/-**

பட்டாசுத் தயாரிக்கும் வேலையில் தவிர்க்க இயலாமல் விபத்துகள் நடப்பதுவும் பல உயிர்கள் தங்களின் தினசரி நடைமுறையில் தம்மை இழந்து போவதைக் கண்டும் கேட்டும், ஆபத்துகள் நிறைந்த இத்தொழிலை விட்டுவிட இயலாத கட்டாயத்தில் இப்பகுதியில் தங்களின் தினசரி வாழ்வை நடத்துகின்றனர்.

இத்தகைய ஆபத்துகள் நிறைந்த இத்தொழிலை விட்டுவிட்டுப் போவதற்கு மாற்றுத்தொழில் ஏதும் இவர்களுக்குக் கிடைக்காத சூழல். காலையில் வீட்டை விட்டுப் போனால் வேலை முடிந்து வீடு திரும்புவது உறுதி இல்லை. சில சமயங்களில் வாரத்திற்கு இரண்டு மூன்று விபத்துகள்கூட நடந்து விடுவதுண்டு.

இந்த நாவலில் வருகிற மாறனின் குடும்பம் தன் தலைவனை இழந்து துயரத்தில் சிக்கிக் கொள்கிறது. விபத்தில் உடல் கருகி மாறன் இறந்து விடுகிறான். இதன் பிறகும் இத்தொழில் செய்துதான் தன் இரண்டு பெண் குழந்தைகளுடன் எஞ்சிய காலத்தைக் கடத்த வேண்டியதாகிறது அல்லிக்கு.

விபத்தில் காயங்களுடன் உயிர் பிழைத்தவர்களுக்கு சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை தரப்படுகிறது. விபத்தில் சிக்கியவர்களின் உறவினர்கள் மருத்துவமனையில் அழுது புலம்பியவாறு காத்திருக்கின்றனர். பத்திரிகைக்காரர்கள் செய்தி சேகரிக்கக் கூடுகிறார்கள். உயிர்பிழைக்க வைக்கும் முயற்சிகள் தோல்வியடைந்து உடல்கள் உறவினர்களுடன் உடற்கூறு ஆய்விற்காகக் காத்திருக்கின்றன. உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் பெற்றுத்தரும் முயற்சிகளில் தொழிற்சங்கப் பொறுப்பாளர்கள் ஈடுபடுகின்றனர்.

அரசு அதிகாரிகள் விரைந்து இறந்த உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்கும் பொறுப்பை நிறைவேற்ற செயல்படுகின்றனர். இறந்தவர்களுக்கு ஐந்து லட்ச ரூபாய் அளிக்க அரசு உறுதியளிக்க வேண்டுமென்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உறவினர்களுடன் சேர்ந்து போராட்டத்தை முன்னெடுத்துப் பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள். அதிகாரிகள் உறுதியளிக்க இயலாது என்று கை விரிக்கிறார்கள். நிவாரணத் தொகை அறிவிக்காமல் உடல்களை வாங்க மறுக்கின்றனர்.

வேறுவழியில்லாமல் ஐந்து லட்சம் தருவதற்கு வாக்குறுதி தருகிறார்கள். இப்போது இறுதிச் சடங்குச் செலவுகளுக்காக தலா இருபதாயிரம் ரூபாய் தருவதைப் பெற்றுக் கொண்டு உடல்களை வாங்கிக் கொள்கிறார்கள். வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை, மாவட்ட ஆட்சியரைச் சந்தித்து முறையிடுகிறார்கள். அவரும் ஐந்து லட்சம் தன்னால் தரஇயலாது என வந்தவர்களை அனுப்பி வைக்கிறார். சில நாட்கள் கழித்து ஒரு லட்சம் காசோலை வழங்கப்படுகிறது. பட்டாசு ஆலை உரிமையாளர்கள் இறந்தவர்களின் குடும்பம் நிவாரணத் தொகையைப் பெற அலைவதைக் கண்டும் காணாமல் இருக்கிறார்கள்.

முதலாளிகள் தங்களுக்கு இழப்பு ஏற்படுமென்றால் தொழிலாளர்களைத் தங்களுடன் சேர்த்துக் கொண்டு போராட்டங்களை முன்னெடுக்கிறார்கள். சீனாவிலிருந்து விலை மலிவாகப் பட்டாசுகள் இறக்குமதியாவதைக் கண்டு, அதை நிறுத்த வேண்டுமென்று அரசாங்கத்திடம் கோரிக்கை வைக்கிறார்கள். தங்கள் ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களிடம் சீனப் பட்டாசு இறக்குமதியால் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு மிகவும் குறைந்துவிடும் என்பதாக தொழிலாளர்களுடன் பேசி, அவர்களையும் இணைத்துக் கொண்டு வேலை நிறுத்தப்

போராட்டம், ஆர்ப்பாட்டம் என்றெல்லாம் முதலாளிகளின் தரப்பில் ஏற்பாடு செய்தார்கள்.

தொழிற்சாலைகளில் நடைமுறைப்படுத்த அரசுத் தரப்பில் கூறப்பட்டிருந்த விதிமுறைகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை முதலாளிகள் கண்டுகொள்வதில்லை. இந்த அலட்சியத்தினால் பல விபத்துகள் நடக்கின்றன. வேலை நடைமுறைகளில் தொழிலாளர்களின் கவனமின்மையும் சில சமயங்களில் விபத்துகளுக்குக் காரணமாகின்றன. விபத்துகள் நடப்பதற்கான வாய்ப்புகளை நாவல் மிகவும் விரிவாகப் பேசுகிறது.

நாவலின் நிறையப் பக்கங்கள், பல பட்டாசு வகைகள் தயாரிக்கும் தொழில்நுட்பம் பற்றிச் சொல்கின்றன. எந்த வகையான வெடிகள் தயாரிப்பதில் விபத்துகளுக்கு அதிகமும் வாய்ப்புகள் உள்ளன என்பதையும் தொழிலாளர்களின் வழியாகவே வாசகர்கள் அறிந்து கொள்வதற்கு வாய்க்கிறது. இதற்கு முன் நடந்த விபத்துகளைப் பற்றித் தொழிலாளர்களே விவரமாகப் போகிறார்கள்.

இந்தத் தொழிலாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு குறித்து தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் போராட்டங்களைப் பற்றியும் அவற்றில் அக்கறை காட்டாமல் ஒதுங்கியிருக்கும் தொழிலாளர்களைப் பற்றியும் இதற்கென அரசாங்கம் அறிவித்திருக்கும் விதிமுறைகள் பற்றியும்கூடத் தெரிந்து கொள்ளாமலிருப்பதையும் நாவல் விளக்கமாகப் பேசுகிறது. முதலாளிகள், சில அதிகாரிகள் கூட்டுறவினால் தொழிலாளர்களுக்குத் தொழில் செய்யும் இடங்களில் கிடைக்காமல் போகிற சலுகைகளைப் பற்றியும் சுட்டப்படுகின்றது, தொழிலாளர்களின் நலன் சீர்கெட்டுப் போவதற்கு வாய்ப்பாக, தொழிற்சாலைகளையும் உற்பத்தியையும் குத்தகை முறையில் தனிநபர்களிடம் ஒப்படைத்துவிட்டு ஆதாயத்தை மட்டும் குறையாமல் பார்த்துக் கொள்கிற முதலாளிகளைப் பற்றியும் சட்டங்களின் வரையறைக்குள் வராமல் தப்பித்துக் கொள்கிற குத்தகைதாரர்களைப் பற்றியும் அறிந்து கொள்ள வாய்க்கிறது.

சில இடங்களில் தொழிலாளர்களில் யாரேனும் பகுதி பகுதியாக உற்பத்தியைக் குத்தகை முறையில் எடுத்து, கடினமாக தனது உழைப்பையும் செலுத்தி தொழிலாளர்களைவிட கொஞ்சம் அதிகமாகச் சம்பாதிக்கும் அவர்களின் மனநிலை சில சமயங்களில் முதலாளிகளின் சார்பாக இருப்பதையும் நாவல் கவனப்படுத்துகிறது.

குடும்ப உறவுகளும் கூட சின்னச் சின்ன பொருளாதாரக் காரணங்களால் சிதைந்து போவதையும் உறவுகள் போலிமை கவிந்ததாக மாறி மனஉளைச்சல்களை உண்டாக்குவதையும் நாவல் கவனித்திருக்கிறது. விவசாயம் சார்ந்த கிராமப்புறங்களில் போதிய அளவில் வேலை வாய்ப்புகள் இல்லாத நிலையில் பல புதியவர்களும் பட்டாசு ஆலைகளை நோக்கி இழுக்கப்படுவதையும் காணமுடிகிறது. நெருக்கடியான சூழலில் அரசாங்கமும் அப்பகுதியில் மாற்றுத் தொழில் வாய்ப்புகளை உருவாக்க முனைவதில்லை.

மிக எளிமையான மொழியினால் விவரிக்கப்படுகிற சம்பவங்கள் வாசிக்கிறவர்களின் கவலையை அதிகரிக்கச் செய்கிறது. அனைத்துப் பிரச்சனைகளையும் அதிகபட்சம் கவனம் செலுத்தி வாசகர்கள் அறியத் தருகிறது. இதனால் தன் சக்திக்கு மீறிய அளவாக 800 பக்கங்களைக் கொண்டதாகியிருக்கிறது.

இந்தத் தொழிலாளர்களின் தினசரி வாழ்க்கை இந்தளவு ஆபத்துகளைக் கொண்டிருந்த போதிலும் அந்த வேலையை நோக்கி இப்பகுதித் தொழிலாளர்கள் ஈர்க்கப்படும் முரணை நாவல் கடினமான வலியுடன் நம்முன் வைக்கிறது.

விபத்தில் சிக்கிக் கருகிய உடல்களின் காட்சிகள், வாசகர், நேரில் காண்பதைப் போன்று விரிவான துயரத்தை பதிவுகள் தெரிவிக்கின்றன. மருத்துவமனையில் சிகிச்சைக்கு வைக்கப்பட்டிருக்கும் உடல்களின் இயற்கை உபாதைகளைக் கழிப்பதற்கான ஏற்பாடுகளினால் படுகின்ற அவதிகளை நாவல் புகைப்படக் காட்சிகளாக, அதையும் தாண்டி திரைப்படக் காட்சிகளைப் போல் விவரிக்கிறது நாவல் மொழி. சிறுநீர் கழிப்பதற்கான இரப்பர் குழாய்களை ஆண் குறிகளுடன் இணைக்கும் போது, அந்த உடல்கள் பட்டுமாயும் வேதனைகளை வாசகன் உணர்கிறான். ஒரு உடலில் ஆண்குறி கருகி இல்லாமல் போயிருக்க, அதுஇருந்த இடத்தில் குழாயைப் பொருத்தவரும் காட்சி, அதை வாசிக்கிறவரின் மனதைக் கலங்கடிக்கிறது.

பாத்திரங்களின் வழியாகவே நாவலின் பெரும்பகுதி அமைந்துள்ளது. அதனால் எந்தச் சிரமமும் இல்லாமல் வாசகருடன் இணைந்து கொள்கிறது.


●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்




₹ 130/-





₹ 690/-




₹ 330/-




₹ 115/-




₹ 550/-




₹ 400/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.

☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | email: info@ncbh.in

கட்டுரை




# ‘துரை’த் தமிழ்: காலனியத்தின் மறுபக்கம்

**கோ.பாலசுப்ரமணியன்**

ஒரு சமூகத்தின் வரலாற்றை, அந்தச் சமூகத்தை ஆண்டவர்களின் வரலாறாக மட்டுமன்றி அந்தச் சமூகத்தின் பண்பாட்டு வரலாறாகவும் அச்சமூகத்தில் வெளிப்பட்டிருந்த கலைகளின் வரலாறாகவும், பயன்படுத்திய மொழியின் வரலாறாகவும் காணும்போதுதான் அது பல பரிமாணங்களைக் கொண்டதாக அமைந்து, பல்வேறு தரப்பட்ட மக்களின் உண்மையான வரலாறாகிறது. வரலாற்றுப் பக்கங்களில் இன்னும் எத்தனையோ ஏடுகள் படிக்கப்படாமல் புதைந்து கிடக்கின்றன. இப்பக்கங்கள் வரலாற்றையே திருத்தி எழுதவும் உதவக்கூடும். தமிழகத்தை ஆண்ட, பிற மொழி பேசிய ஆட்சியாளர்கள் தமிழ் மொழியை எவ்வகையில் கையாண்டார்கள்? தங்கள் தாய்மொழியல்லாத பிரிதொரு மொழியைப் பேசும் சமூகத்தைத் தங்களது ஆட்சி ஆளுகைக்குள் கொண்டுவரும் அதிகார வர்க்கத்தினர் அந்த மொழியை எப்படிக் கற்றுக் கொண்டார்கள்? எவ்வாறு பயன்படுத்தினார்கள்? தங்கள் மொழியை அந்த மக்கள் மீது திணித்தார்களா என்பதெல்லாம் அடிப்படையான கேள்விகள். பிறமொழி பேசிய ஆட்சியாளர்களின் மொழிக் கொள்கை, மொழிப்பயன்பாடு பற்றிய விரிவான பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

தமிழ் நிலப்பரப்பிற்குள் அந்நியர்களாக வந்த ஆங்கிலேயர்கள் இந்த பெரும் மக்கட் கூட்டத்தை அடக்கி ஆள முடிந்ததில் மொழியின் பங்கு என்ன? அவர்கள் தமிழ் மொழியை நிர்வாகத்திலும் தனிப்பட்ட வாழ்விலும்




வெள்ளை நாக்குகளும் தமிழ்க் காதுகளும்
ந.கோவிந்தராஜன்
க்ரியா வெளியீடு | விலை: ரூ.650/-

எவ்வாறு பயன்படுத்திக்கொண்டனர் எனும் கேள்விகளுக்கான விடைகளில் தமிழச் சமூக வரலாற்றின் சில பக்கங்கள் துலக்கம் பெறும்; தமிழ் மொழியின் மற்றுமொரு பரிமாணத்தையும் காண இயலும். காலனியக் காலகட்டத்தில் தமிழை முன்னிலைப் படுத்தி அதிகாரமும் தமிழ்ப் புலமையும், மொழியாகிய தமிழ் எனும் இரு ஆய்வு நூல்களைத் தமிழ் ஆய்வுலகிற்குப் பங்களித்திருக்கும் ந. கோவிந்தராஜன், வெள்ளை நாக்குகளும் தமிழ்க் காதுகளும்- மொழியில் உதித்த பேரரசு எனும் நூலில் மேற்கண்ட கேள்விகளுக்கு விடையளிப்பதற்கு உதவும் வகையில் காலனியத்திற்கும் தமிழுக்குமான உறவை ஆய்ந்து இதுவரை எழுதப்படாத வகையில் மொழி அரசியலையும் சில விளிம்புநிலை சமூகத்தின் அடையாள உருவாக்கத்தையும் வெளிக்கொண்டுவந்துள்ளார்.

## மொழியைக் காலனியப் படுத்தல்

19-ஆம் நூற்றாண்டில் சென்னை ராஜதானியின் தமிழ் புழங்கிய பகுதிகளில் கோலோச்சிய அதிகாரிகளும் (துரைகள்) அவர்களது இல்லத்தரசிகளும் (துரைசானிகளும்) தங்களது பணியாளர்களிடம் தமிழ் எனும் ‘மொழி ஆயுதத்தை’ எப்படிக் கையாண்டனர், அதை எவ்வாறெல்லாம் பயன்படுத்தினார்கள் என்பதை நாடக இலக்கியம் போல சுவைபட வெள்ளை நாக்குகளும் தமிழ்க் காதுகளும். எனும், 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயருக்கும் அவர்களின் பணியாளர்களுக்கும் இடையிலான உரையாடல்களுக்கு மாதிரியாக அமைந்த சம்பாஷணை நூல்கள் எனும் மாதிரி உரையாடல் நூல்களை (11 நூல்கள்) எடுத்துக்கொண்டு அவற்றை உள்ளடக்கப் பகுப்பாய்வு செய்து ‘ஒரு வெள்ளை நாடகம்’, ‘வெள்ளைக் கறுப்புக் காட்சிகள்’ ஆகிய முதல் இரண்டு இயல்களும் எழுதப்பட்டுள்ளன. காலனியம் ’தனக்குச் சொந்தமில்லாத ஒரு நிலப்பரப்பின்’ மொழி எனும் வளத்தை தனதாக்கிக் கொண்டதன் மூலம் ‘தமிழ் மொழியைக் காலனியப்படுத்திக் கொண்டுவிட்டது’ (ப.30) என்பது ஆசிரியர் எடுத்துக்கொண்ட ஒரு கருதுகோள் எனலாம். அப்படிக் காலனியப் படுத்திய மொழி, ஒரு மொழிக்கான சொற்பட்டியலைத் தயாரிப்பதன்வழி அம்மொழியை ஒரு சரக்காக மாற்றிக்கொள்கிறது’ என்றும் இதற்கு விலை மதிப்போ, பரிமாற்ற மதிப்போ இல்லையெனினும் லாபம் தரும் சரக்கு எனும் கொள்கையை முன்னிறுத்துகிறார் (ப.31). தாய்மொழிக்குப் பிறகு ஒருவர் தேவை கருதி மட்டும் கற்றுக்கொள்ளும் எந்தவொரு மொழிக்கும் இது பொருந்தும். காலனியப்படுத்தி, சரக்காகக் கருதிய மொழியறிவை விரிவுபடுத்திக்கொண்டு அம்மொழியைப் பேசும் மக்கட் கூட்டத்திடம் தங்களது அதிகாரத்தை நிலைநிறுத்தப் பயன்படுத்தும்போது அம்மொழி அதிகாரத்தின் மொழியாக மாறிவிடுகிறது. ஒரு அதிகார அமைப்பு தனக்கான அதிகாரத்தைப் படிநிலை உறவுகள், அவ்வுறவுகளுக்குள் இயங்கும் விதிகளின் வழியாக ஏற்படுத்தும் ஒழுக்க நடவடிக்கைகள் ஆகியனவற்றின் மூலமாக மேலாதிக்கம் செலுத்தி நிறுவிக்கொள்கின்றன. இங்கு மொழியதிகாரம் உரையாடல்கள் வழியாகக் கட்டமைக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, துரையும் துரைசானியும் கேள்வி கேட்பவர்களாகவே இருப்பதைக் கவனிக்கலாம். உரையாடலில் ஏவல் செய்யத் தகுதி உள்ளவர்களும் குறுக்கீடு செய்பவர்களும் அதிகாரம் உள்ளவர்களே. அதேவேளை கீழ்ப்படிநிலையில் உள்ளவர்கள் எப்பொழுதும் ’பணிதல்’ எனும் செயல்பாட்டிலேயே இருப்பர்.

சம்பாஷணை நூல்கள் ஆங்கிலேயர்களாலும் சுதேசிகளாலும் 18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து எழுதப்பட்டவை. இவை ‘உரையாடல்கள் வழி மொழி கற்றலுக்கான’ கருவி நூல்களாகப் பயன்பட்டுள்ளன. கல்கத்தாவின் வில்லியம் கோட்டைக் கல்லூரியில் (1800-1854) சம்பாஷணை நூல்களும் பாடநூல்களாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. இருப்பினும் பிரான்சிஸ் ஒயிட் எல்லீஸால் (1777-1819) சென்னையில் தொடங்கப்பட்ட புனித ஜார்ஜ் கல்லூரியில் (1812-1854) சம்பாஷணை நூல்களுக்கு அவர் இருந்தவரை இலக்கண நூல்களுக்கே முன்னுரிமை அளித்துள்ளார் என்பதும் சம்பாஷணை நூல்களுக்கு முக்கியத்துவம் தரப்படவில்லலை என்பதும் கவனிக்கத்தக்க செய்தி. அவ்வகை நூல்களில் முக்கியமானவையாக 20-க்கும் மேற்பட்ட நூல்களின் பட்டியல் தரப்பட்டுள்ளது. ’சம்பாஷணை நூல்கள் அதிகாரிகளின் வாழ்க்கையை மட்டுமல்ல அவர்களுக்குப் பணிவிடை செய்தவர்களின் வாழ்க்கையையும் சொல்கின்றன. சுரண்டல்களும், லாபமும், அங்கீகாரமும் அவற்றில் படிந்து இருக்கின்றன. போர்களில் மட்டுமல்ல மொழியிலும் ஒரு பேரரசு உதிக்கத் தொடங்கியது(ப.39).

சம்பாஷணை நூல்கள், “பெரும்பாலும் ஓர் அதிகாரி தன் பணியாளர்களிடம் பேசுவதற்கான ’உடனடி வாக்கியங்களைக் கொண்டிருக்கும்…………… துரையுடன் சம்பாஷணையில் பங்குபெறும் பணியாளர்களின் தகுதிகளுக்கேற்ப அவர்களது பேச்சு அமைந்திருக்கிறது. துரையும் தன் எதிரில் இருப்பவர் தகுதிக்கேற்பவே சம்பாஷணைகளில்

சொற்களைப் பயன்படுத்துகிறார்…… ஒரு வேலையாளை அமர்த்திக் கொள்ளும் போது அவரிடம் கேட்க வேண்டிய கேள்விகள், பேசும் முறைகள் குறித்த சம்பாஷணை, ஊர் கணக்குப்பிள்ளையிடம் சம்பாஷணை, நிலத்தை பற்றி விவசாயியிடம் சம்பாஷணை, ஒரு முன்ஷியோடு (ஆசிரியர்) சம்பாஷணை என பலவகை சம்பாஷணைகள் பயிற்சிக்காக இந்த நூல்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிகாரியும் சுதேசியும் பேசிக் கொள்வது மட்டுமல்ல; இரண்டு வெவ்வேறு பகுதிகளில் உள்ள சுதேசிகள் எப்படி பேசிக் கொள்வார்கள் என்பதையும் 1845-இல் சென்னை புனித ஜார்ஜ் கல்லூரியிலிருந்து வெளிவந்த சம்பாஷணை நூல் பதிவு செய்துள்ளது. கடன் கொடுத்தவனுக்கும் கடன் வாங்கியவனுக்குமிடையில்; இரண்டு கூலிக்காரர்களுக்கிடையில்; வியாபாரிக்கும் கடன்காரருக்குமிடையில், நடக்கும் உரையாடல்கள் மாதிரிகள் தரப்பட்டுள்ளன என்று எடுத்துக்காட்டுவது, துரைகளும் துரைசானிகளும் மக்களுடன் பேசிய அல்லது உறவாடிய களங்களைக் (domains) காட்டுகிறது. இலங்கையில் புழக்கத்தில் 'கூலித் தமிழ்' என்று ஒன்று இருந்ததையும் அந்நூலில் 'அதிகாரத்தின் தொனி' தூக்கலாக இருந்ததையும் சுட்டிக் காட்டுகிறார் நூலாசிரியர்.

## நாடகக் காட்சிகள் காட்டும் அதிகாரம்

கோவிந்தராஜன் இந்த சம்பாசணை நூல்களின் உரையாடல்களைப் பல நாடகக் காட்சிகளாகக் கண்டு அவற்றை நம் கண்முன் கொண்டுவந்துள்ளார் என்பதை நூலுக்கு வைத்துள்ள தலைப்பு முதல், இயல்களின் தலைப்பு வரை அனைத்திலும் உணர முடியும். 'ஒரு வெள்ளை நாடகம்', 'வெள்ளைக் கறுப்புக் காட்சிகள்', 'மிகைவெள்ளைக் காட்சிகள்', ஒரு (பின்) காலனியக் கருத்து (மறுத்து)ரைத்தல் எனும் பெருந்தலைப்புகளுக்குள் அமைக்கப்பட்டுள்ள இயல்கள் ஒவ்வொன்றும் நாடகக் காட்சிகளை நினைவூட்டுவனவே. எடுத்துக்காட்டுகள்: துரையும் துரைசானியும் பங்களாவில் இருக்கிறார்கள் ; துரை தமிழ் படிக்கிறார்; துரை உணவு மேசையில் அமர்கிறார்; துரைசானி ஆயாவுடன் பேசுகிறாள்; துரை கச்சேரிக்குப் போகிறார்.

நாடகக் காட்சிகளை இவ்வாறு விவரிக்கிறார்: "இந்த வெள்ளை நாடகம் துரைகளுடைய பங்களாக்களிலும் அவர்களுடைய உணவு மேஜைகளிலும் கச்சேரிகள் என்றும் கோட்டுகள் என்றும் அழைக்கப்பட்ட நீதிமன்றங்களிலும் நடக்கின்றன. நாடகத்தில் பல காட்சிகள் வருகின்றன. எல்லா காட்சிகளிலும் துரைகளும் துரைசானிகளும்தான் முதன்மை மாந்தர்கள். அவர்கள் எப்போதும் அதிகாரம் மிக்கவர்களாக இருக்கிறார்கள். எப்போதும் எதையாவது ஏவிக் கொண்டே இருக்கிறார்கள். அதட்டலான தொனியிலேயே பேசுகிறார்கள்……… இந்த வெள்ளை நாடகத்தில் துணை மாந்தர்களும் பலர் உள்ளனர். …….காட்சிகளுக்குத் தகுந்தார் போல் வந்து துரைகளிடமும் துரைசானிகளிடமும் கட்டளைகளை ஏற்றுச் செல்கின்றார்கள். கொஞ்சமாக பேசுகின்றார்கள். எப்போதும் பணிந்தே இயங்குகின்றனர். குனிந்தே பேசுகின்றனர். அவர்கள் பேசும் வசனங்களே அவர்களுடைய உடல் மொழியை மனதில் திரையிடுகின்றன…. இந்த வெள்ளை நாடகம் இந்திய நாடக மரபு காத்திரமாகப் பின்பற்றிய புனித மொழியில் நிகழவில்லை. உயர்ந்தவருக்கு ஒரு மொழியும் தாழ்ந்தவருக்கு ஒரு மொழியும் கொடுக்கவில்லை. சுதேசிகளும் தமிழில் பேசினர். துரைகளும் துரைசானிகளும் தமிழிலேயே பேசினர் (ப.81). துரைகள் பேசுவதாகக் காட்டும் 'துரைத் தமிழ்' கேள்வி வாக்கியங்களும் கட்டளை வாக்கியங்களுமாகவே உள்ளன; பணியாளர்களின் வாக்கியங்கள் உடன்பாட்டு வாக்கியங்களே. அதிகாரிகளின் மொழி ஆங்கிலமாக இருந்தும் இங்கு தமிழே அதிகாரம் செலுத்துவதற்குப் பயன்பட்டுள்ளது. யார், எவரிடம், எப்போது, எப்படிப் பேசுகிறார் என்பதில்தான் அதிகாரம் வெளிப்படுகிறதே ஒழிய 'அதிகார மொழி' என்று ஒன்றில்லை எனும் மொழியியல் உண்மை தெளிவாகிறது. சிவிலிகைத்(பல்லக்கு) தூக்கிகளுடனான உரையாடல் மாதிரிகள் குறைவாக உள்ளதைச் சுட்டிக்காடும் ஆசிரியர் 'லேசாகத் தலை காட்டும் இவர்கள் ஒருவேளை காலனிய ஆவணங்களில் உறங்கிக் கொண்டிருக்கலாம்' என்று கூறுவதிலிருந்து விளிம்பு நிலையிலும் விளிம்பானவர்களின் இல்லாமையைக்' கவனப்படுத்துகிறார். இந்நாடகக் காட்சிகளுக்குச் சில அரிய படங்களையும் உட்படுத்தியிருப்பது காட்சிகளை மேலும் தெளிவு படுத்துகிறது. நூலில் எடுத்தாளப்பட்டுள்ள உரையாடல்கள் நூலைப் படிப்பதில் சுவாரசியத்தைக் கூட்டுகின்றன.

## உண்ணுதல் எனும் காலனிய நிகழ்த்துதல்

கோவிந்தராஜன், 'உணவு மேஜையில் உண்ணுதல் என்பது ஒரு காலனிய நிகழ்த்துதல். காலனியத்தை நிகழ்த்துதலும் கூட. உணவும் உண்ணுதலும் வெள்ளை நாடகத்தின் மையக்காட்சிகள்' (ப.169) என்று வரையறுக்கிறார். உணவு தயாரிப்பதற்கான குறிப்புகள் அடங்கிய "சமையற்காரனுக்குச் சொல்லத்தகுவது" எனும் நூலில் சமையலர்களுக்குப்

புரியும் வகையில் ஆங்கில உணவு வகைகளும் தமிழில் ஒலிபெயர்த்து, தமிழ் எண்களைப் பின்பற்றி கொடுக்கப்பட்டிருப்பதிலிருந்து சமையற்காரர் மொழி ஒன்று உருவாகி உள்ளது என்பது ஆசிரியரின் கருத்து. அக்காலத்தில் தேநீர் அருந்துவது துரைகளாலும், துரைசானிகளாலும் ஒரு கௌரவக் குறியீடாகக் கருதப்பட்டிருந்ததைப் படிக்கும்போது இப்போது தேநீர் வெகுஜனப் படுத்தப்பட்டிருப்பதையும் அது ஏழைகளின், உழைப்பாளிகளின் பெரு விருப்பத்திற்குரிய சிக்கனமான பானமாக விளங்கும் கால மாற்றத்தையும் எண்ணிப்பார்க்காமல் இருக்க இயலவில்லை.

'குசினி' என்று அழைக்கப்பட்ட சமையற்கட்டையும், சமையற்காரர்களையும் பற்றி விரிவாக விளக்கும் கோவிந்தராஜன் சமையலர்களைக் குறித்து கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: “தென்னிந்தியாவில் சமையற்காரர்களை மைஸ்திரி (maistry) என்று அழைக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரை குசினிக்காரர்கள் 'ராமசாமி' என்று அழைக்கப்பட்டனர். இலங்கையில் குசினிக்காரர்கள் 'அப்பு' என்று அழைக்கப்பட்டனர். வேறு பெயர்களில் இருந்தவர்களை அழைப்பதற்குக் கடினமாக இருந்ததால் பொதுப் பெயராக 'ராமசாமி' என்று அழைத்து அதற்கு 'சமையற்காரர்' பொருளை ஏற்றி விட்டார்களோ என்னவோ? அல்லது ஒரு வர்த்தக நிறுவனத்தின் பெயரான ஜெராக்ஸ் என்பது நகலெடுப்பதற்குப் பொதுப் பெயராக மாறியது போல 'ராமசாமி' என்ற பெயரில் ஒரு பிரபலமான சமையற்காரர் இருந்திருப்பாரோ என்னவோ? அவரது பெயரில் சமையற்காரர்கள் எல்லோரும் ராமசாமி என்று அழைக்கப்பட்டிருக்கலாமோ? இன்றைக்கு 'ராம(ர்)சாமி' இந்திய அளவில் எப்படி உருவாக்கப்பட்டிருக்கிறார்; ராமசாமி(பெரியார்) தமிழ்நாட்டில் எதற்கான அடையாளமாக அறியப்பட்டிருக்கிறார் என்பதையும் இங்கே எண்ணிப் பார்க்காமல் இருக்கமுடியவில்லை.

வெள்ளைக்காரர்களின் சமையற்காரர்கள் பறையர் சமூகத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள் என்பதற்கு உரையாடல்களையும், கேப்டன் சார்லஸ் கோல்டு என்பவர் 1791, 1798 ஆகிய ஆண்டுகளில் வரைந்த ஓவியங்களுக்கு எழுதிய குறிப்புகளையும் ஆதாரமாகக் காட்டியுள்ளார் ஆசிரியர், “மாட்டிறைச்சியைத் தொடுவதன் மூலம் மற்றவர்கள் யாரும் கைகளை அசுத்தப்படுத்திக் கொள்ள விரும்ப மாட்டார்கள். இவர்களைத் தவிர ஆங்கிலேயர்களின் சமையல்காரர்களாக இருப்பதற்கு நிச்சயமாக வேறு யாரும் பொருத்தப்பட மாட்டார்கள்” (ப.193) என்று குறிப்பிட்டுள்ளதை எடுத்துக்காட்டுகிரார் ஆசிரியர். தமிழின் இரட்டை வழக்கின் -எழுத்துத் தமிழை உள்ளடக்கிய உயர் வழக்கு ஒன்று; பேச்சுத்தமிழ் மற்றொன்று- பேச்சுதமிழை ஜி.யு. போப் 'கொச்சைத் தமிழ்' என வகைபடுத்தி அதற்கு எடுத்துக்காட்டுகளாக அரிச்சந்திர விலாசம் எனும் நூலில் வரும் வெட்டியான் பேச்சைத் தந்திருப்பதையும் கவனப்படுத்தியுள்ளார். இந்தியச் சாதிய வேறுபாடுகளையும் தீண்டாமையையும் ஆங்கிலேயர்கள் தங்களது தனிப்பட்ட வாழ்க்கையில் எவ்வகையிலும் புகுத்திக்கொள்ளவில்லை என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

**பண்பாட்டு மூலதனச் சுரண்டல்**

'நாடகத்தின் வரலாற்றுப் பக்கங்கள்' எனும் துணைத் தலைப்பில் கோவிந்தராஜன் ஆங்கிலேயர்களால் ஆவணப்படுத்தப்பட்ட மொழிக் கணக்கெடுப்பு, சேகரிக்கப்பட்ட வாய்மொழிக்கதைகள், பழமொழிகள், மொழிபெயர்ப்புகள், சங்கேதச் செயல்பாடுகள் முதலானவற்றைக் கட்டுடைத்து காலனியத்தின் வெவ்வேறு முகங்களை வெளிக்கொணர்ந்துள்ளார்.

லிங்காயத் சமுதாயத்திலிருந்து கிருத்துவராக மாறிய அன்னா லிபிரேட்டா டி சௌசா எனும் ஆயா கூறிய கதைகளை (மரபு வழியில் கேட்ட கதைகள்) அன்னாவின் உடைந்த (அரைகுறை) ஆங்கிலத்திலிருந்து ‘நல்ல ஆங்கிலத்தில்’ மாற்றி எழுதி, தனதாக்கிக்கொண்டு புகழ்பெற்று, அதற்கான உரிமைத் தொகையையும்(royalty) தான் மட்டுமே பெற்றுக்கொண்ட துரைசானி, மேரி ஃபிரிர். தென்னிந்திய வாய்மொழிக்கதைகளை முதலில் தொகுத்து வெளியிட்டவர் எனும் ‘பெருமைக்குரியவராகக்’ பெயரெடுத்துக்கொண்டவரும் இவரே. மேய்வ் ஸ்டோக்ஸ் எனும் துரைசானியும் ‘துங்குனி’ ‘முனியா’ எனும் இரு ஆயாக்களிடமிருந்து சேகரித்த கதைகளை அந்த ஆயாக்களின் பெயர்களைக் கூட குறிப்பிடாமல் விட்டுவிட்டதையும் பதிவு செய்துள்ளார். உரிய அங்கீகாரமோ, உரிமைத்தொகையோ கொடுக்காமல் ‘தங்களுடையதாக்கிக்’ கொண்ட இச்செயல்பாட்டைப் பண்பாட்டு மூலதனச் சுரண்டல் என்று கோவிந்தராஜன் அடையாளப் படுத்துவது முற்றிலும் சரியே.

**கிரியர்சனின் இந்திய மொழிகளின் கணக்கெடுப்பு– பேராசை ?**

முதன்முதலாக இந்திய மொழிகளை கணக்கெடுக்கும் மிகப்பெரிய பணியை ஜார்ஜ்

ஆபிரகாம் கிரியர்சன் (1851-1941) மேற்கொண்டார். இவரது பங்களிப்பைக் குறித்து 'காலனிய அறிவாக்கம்' எனும் பொருண்மையில் ஜாவீத் மஸ்ஜித் 2019-இல் எழுதிய இரண்டு நூல்களை அடிப்படையாகக் கொண்டு, கோவிந்தராஜன் "கற்றலின் கேட்டலே நன்று" என்று தலைப்பிட்டு மிக விரிவாக அலசியுள்ளார். வினா நிரல், கதையை மொழிபெயர்த்தல், புதுமையான கிராமபோனைப் பயன்படுத்தி ஒலிகளைப் பதிவுசெய்தல் ஆகிய முறைகளைக் கையாண்டு, இந்திய மொழிகளைக் கணக்கெடுத்து 11 தொகுதிகளை (19 பிரிவுகளாக) வெளியிட்டதையும் விளக்கியுள்ளார். இந்திய மொழிகளைக் குறித்த அறிவாக்கத்தில் இந்தியர்கள் பலர் பங்கெடுத்துள்ளனர் என்பதும் குறிக்கப்படுகிறது. தமிழ் மொழியைக் கற்றுக்கொள்வதிலும் , மொழி மற்றும் நாட்டுப்புறக் கதைகளைப் பதிவு செய்தலிலும், பிற தரவுகளைச் சேகரித்தலிலும் கிராமபோன்களின் தாக்கத்தை மிக விரிவாகப் பேசும் ஆசிரியர் " (காலனியம்) எந்த மொழியை (அல்லது மொழிகளை) ஆதாரமாக வைத்துக் கொண்டு வளர்ந்ததோ அந்த ஆதாரத்தையும் வெறுமையாக்கியது"(ப்.313) என்று சுட்டிக்காட்டுகிறார். 'இந்தத் தொகுதிகள் கிட்டத்தட்ட எழுநூற்று இருபத்து மூன்று தென்னாசிய மொழி வகைகளைக் குறிப்பிடுகின்றன. அவற்றுள் மிக முக்கியமானதாகக் கருதப்படும் இருநூற்று அறுபத்து எட்டு மொழி வகைகளுக்கு அகராதி விவரங்களையும் இலக்கணக் குறிப்புகளையும் இந்தத் தொகுதிகளில் காண முடியும்" என்று பட்டியலிடும் கோவிந்தராஜன் 'அவரது (கிரியர்சன்) கணக்கெடுப்புத் திட்டம் பேராராய்ச்சித் திட்டம் என்றல்ல, ஒரு பேராசைத் திட்டம் என்றே கூற வேண்டும். ஆனால் அந்த பேராசையையும் பிரிட்டிஷ் அரசாங்கம் நிறைவேற்றிக் கொண்டது. காலனியப் பேராசையின் இன்றளவும் நின்று வாழும் அடையாளமாக அவை திகழ்கின்றன" (ப.266) என்று கருத்துரைத்துள்ளார்.

காலனியம், அதன் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளைக் கட்டுப்பாட்டுடன் ஆள்வதற்கு அம்மக்கட் கூட்டத்தின் மொழி(கள்), பண்பாட்டு வேறுபாடுகள், வரலாறு, நம்பிக்கைகள், மக்கட் பிரிவுகள் உள்ளிட்ட அனைத்தையும் புரிந்து கொள்ள பல்வேறு திட்டங்களைச் செயல் படுத்தியது என்பது இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால் அத்திட்டங்களில் முழு ஈடுபாட்டுடனும், கண்பார்வை மங்கி வந்த நிலையிலும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயலாற்றிய கிரியர்சன் போன்றவர்களைப் "பேராசைக்காரர்கள்" என்று முத்திரை குத்துவது சற்றே நெருடலாக உள்ளது.

### முன்ஷி எனும் தமிழாசிரியர்கள்

'முன்ஷி', 'முனிஷி', 'மூன்ஷி' என்று காலனியர்களால் அழைக்கப்பட்ட முதல்நிலைப் பணியாளர்களான தமிழாசிரியர்கள் குறித்து சம்பாஷணைகள் தாராளமாக உள்ளதாகத் தெரிகிறது. துரை தமிழ் படிப்பதைப் பற்றி விரிவாக விளக்கும் கோவிந்தராஜன், புனித ஜார்ஜ் கோட்டையில் தமிழ் கற்பித்த நடவடிக்கைகளையும் விளக்குகிறார். ஜூலியா மைட்லெண்ட் எனும் துரைசானியின் குறிப்புகளை மேற்கோள் காட்டி, தமிழ் கற்பித்த முன்ஷிகள் அவ்வளவு மதிக்கத் தக்கவர்களாக இருந்திருக்கவில்லை என்பதையும் ஊகிக்கிறார். ஒருபுறம் தமிழை விரும்பிக் கற்றுக்கொண்டு, தமிழின்மீது காதல்கொண்டு பெயரையே தமிழில் மாற்றிக்கொண்ட வீரமாமுனிவர் போன்றவர்களை அறிந்த நமக்கு ஜூலியா போன்றவர்களுக்குத் 'தமிழ் அச்சமூட்டும் மொழியாகவும் தமிழ் ஒலிகள் இனிமையற்றனவாகவும்' இருந்திருக்கின்றன எனும் உண்மையும் தெரியவருகிறது. முற்றிலும் வேறுபட்ட ஒரு மொழிக் குடும்பத்தின் மொழியை, மொழி கற்றுக்கொள்வதில் விருப்பமே இல்லாத ஒருவர் கற்றுக்கொள்ளும் கட்டாயம் ஏற்படும்போது அம்மொழிமீது வெறுப்பு ஏற்படுவது இயல்பே.

எல்லீஸ், போப் முதலானவர்கள் தங்களது தமிழாசிரியர்கள் மீது மிகுந்த மதிப்பு கொண்டிருந்தனர்; இருப்பினும் தமிழாசிரியர்கள் ஒரு கட்டத்திற்கு மேல், குறிப்பாக கிராமபோனின் வரவுக்குப் பிறகு, கேலிக்குரியவர்களாக சித்தரிக்கப்பட்டுள்ளனர். ஹாமில்டன் ஐட்கின் என்பவர் தமிழாசிரியர்களை மூன்று வகையாகப் பிரித்திருப்பது ஆங்கிலேயர்களுக்குத் தமிழ் பயிற்றுவித்தலின் படிநிலை வளர்ச்சியைக் காட்டுவதாக உள்ளது. முதல் வகையினர்- பண்டிதர்களாகவும் தமிழ் கற்பிப்பவர்களாகவும் இருந்தனர். இவர்கள் பெரும்பாலும் புனித ஜார்ஜ் கோட்டைக்கல்லூரி ஆசிரியர்கள். இவர்களுக்கு நல்ல மதிப்பிருந்தது. இரண்டாம் வகையினர்- பண்டிதர்களாக இருந்து தமிழ் மட்டும் கற்பிப்பவர்களாக மாறியவர்கள். கற்பிக்கும் ஆசிரியர்கள். இவர்கள் கற்றுக்கொள்பவருக்குக் கீழ்ப்படியும் நிலையே இருந்துள்ளது. மூன்றாம் வகையினர்- இளைஞர்கள்; ஆங்கிலம் கற்றவர்கள்; மரியாதையை விரும்புவர்கள். 'அவர்களைப் (ஆங்கிலேயர்களை) போலவே நன்றாக ஆங்கிலம் பேசி அவர்களையே சற்று அச்சப்பட வைத்தவர்கள் இவர்கள். 'வெள்ளை அதிகார'த்தின் விளைவால் உருவான 'கருப்பு அதிகாரம்' இவர்கள்.

## விளிம்புநிலை மனிதர்களின் வரலாறு

'மொழியும் காலனிய உறவுகளும்' என்னும் இயலில் கோவிந்தராஜன் இந்த சம்பாஷணைகள் பற்றிய தனது பார்வைகளைத் தொகுத்துக் கூறுகிறார். ''சம்பாஷணை நூல்களின் அதிக வரவு, மொழி வரலாற்றில் மட்டுமல்ல பிரிட்டிஷாரின் தமிழ்நாட்டு வரலாற்றிலும் இன்னும் நிறைய பக்கங்களை எழுதக் கூறுகின்றன அப்படி எழுதுவதில் சிக்கல் இல்லாமல் இல்லை. ஒர் ஆவணக் காப்பகத்தில் பாதுகாத்து அடுக்கி வைக்கப்பட்டுள்ள வெள்ளைத் துரைமார்களின் ஏடுகள் அல்ல இவை. தகவல்களைத் திரட்டியும் கோர்த்தும் எழுதுவதற்கு. இவை அனைத்தும் ஒரு நாடகம். துரைகள் அன்றாடம் நிகழ்த்திய வெள்ளை நாடகம். நாடகத்தின் ஒவ்வொரு காட்சியிலும் (சம்பாஷணையிலும்) ஒரு வரலாறு மறைந்து இருக்கிறது. இந்த நாடகத்தில்தான் மறைந்து (மறந்தும்) விட்ட வரலாற்றைத் தேட வேண்டியிருக்கிறது. வரலாறே தன்னை நாடகப் பக்கங்களாய் மறைத்துக் கொண்டிருக்கிறது. அந்த நாடகத்தின் பிரதிகளாய்தான் சம்பாஷணை நூல்கள் தெரிகின்றன. அவற்றை இப்போது வாசிக்கும் போதும் அந்த நாடகம் மீண்டும் உயிர் பெற்று நம்முன் நிகழ்கிறது. எழுத வேண்டிய வரலாற்றுக்கான தரவுகளை அந்த வெள்ளை நாடகம் நிறையவே கொண்டிருக்கிறது. இதைக் காலனியப் பணியாளர்களின் வரலாறு என்றும் கூறலாம்(ப.390-91)

துரையின் சமையல்காரர்கள் பெரும்பாலும் பறையர் சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்திருப்பதைச் சுட்டிக்காட்டும் கோவிந்தராஜன், "பழைய வரலாறுகள் அழுத்தி வந்த பிறப்பின் தீட்டை வைத்து துரைகள் அவர்களைப் புறக்கணித்துவிடவில்லை. இதுவே ஒரு சமநிலை(ப.395...

காலனியப்படுத்தப்பட்டவன் தனது சுயத்தையும் அடையாளத்தையும் காலனியப்படுத்தியவனிடம் இருந்து பெறுகிறான்(ப.395).

கோவிந்தராஜன், காலனி நீக்கம் (de-colonization) தேவையா எனும் முக்கியமான ஒரு கேள்வியை எழுப்பி, தான் அதற்கு எதிரானவன் அல்ல என்று கூறுவதோடு, வரலாற்றுப்பக்கங்களில் எந்த இடமும் கொடுக்கப்படாமல் இருந்த விளிம்புநிலை மனிதர்களுக்குக் காலனியக் காலகட்டத்தில் கிடைத்த அடையாளமும் அங்கீகாரமும் இல்லாததாகி ஒன்றுமில்லாததாகி விடக்கூடுமே எனும் அச்சத்தையும் வெளிப்படுத்துகிறார்.

காலனி நீக்கம் செய்தால் சிலர் அடையாளம் இல்லாமல் போய்விடுவார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக 'முன்ஷி' எனும் தமிழ் ஆசிரியர்களைக் காட்டுகிறார். "தமிழ் கற்பித்தல் என்னும் தொழில் பண்டைய தமிழ்ச் சமூகத்தில் எப்படி பார்க்கப்பட்டது? அப்படி ஒரு தொழில் அரசர்களால் அங்கீகரிக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டிருந்ததா? வடமொழி வல்லுநர்களுக்குக் கொடுக்கப்பட்ட தானங்களும் நிவந்துகளும் எந்தத் தமிழ் வல்லுநர்களுக்கும் (வல்லுநர்க்கும்) கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை... இக்கல்வெட்டுகளும் இலக்கியங்களும் இவை பற்றி மௌனம் காக்கின்றன... தமிழ் அரசர்கள் தமிழ்ப் பள்ளிகளுக்கான வெளியைக் கொடுக்கவில்லை... காலனி நீக்கம் செய்யப்படாத போதே தமிழாசிரியர் வரலாற்றை அறிய முடிகிறது. அது கேலிக்கும் கிண்டலுக்கும் உள்ளாகி இருந்தாலும் அந்தக் கேலியும் கிண்டலும்தான் தமிழாசிரியர்களுக்கான 'வைராக்கியத்தை'யும் கொடுத்திருக்கிறது'' ப.401.

காலனிய அதிகாரிகளின்(துரைகளின்) தமிழ்ப் பயன்பாடு குறித்து, தரவுகளையும், தக்க சான்றாதாரங்களையும் அடிப்படையாகக் கொண்டு விமர்சனப் பார்வையுடன் கூடிய ஆய்வு நூலாக, ஆற்றொழுக்கான நடையில் எழுதப்பட்டுள்ள வெள்ளை நாக்குகளும் தமிழ்க் காதுகளும் நூலில் முத்தாய்ப்பாக, "(காலனியம்) வன்முறையும் மாயக்கவர்ச்சியும் ஒரு சேர உடையது. போர்களும் கொலைகளும் கொள்ளைகளும் ஒருபுறமும் சுயத்தின் எழுச்சியும் அடையாள உருவாக்கமும் அங்கீகாரமும் புதைக்கப்பட்ட அறிவு மரபுகளின் வெளிப்படலும் நவீனமும் நவீனத்தால் வரலாற்றில் ஓரங்கட்டப்பட்ட குரல்களின் ஒலிப்புகளும் இன்னொரு புறமும் காலனியத்தில் உள்ளன'' என கோவிந்தராஜன் முடித்திருப்பது இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமான ஒரு முன்வைப்பு. வரலாறு ஒவ்வொரு கட்டத்திலும் சில பல வடுக்களையும், ஒரு சில படிப்பினைகளையும், புதிய புரிதல்களையும் விட்டுச்செல்கிறது. வரலாற்றின் எந்தப் பக்கத்தையும் புறக்கணித்துவிட முடியாது. சமத்துவமான, ஆரோக்கியமான சமூக உருவாக்கத்திற்கு யார் காரணமாக இருந்திருந்தாலும், அவர்கள் 'அந்நியர்களாக'வே இருப்பினும் நல்லதை ஏற்று அல்லதை 'நீக்கி' முன்செல்வதே நம்முன் உள்ள பாதை.

●

**கட்டுரையாளர்: மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்**

# மஜூலா சிங்கப்புரா




நினைவோவியம் / சிறுகதைகள்/ மலையரசி சீனிவாசன் / ஆம்பல் பதிப்பகம், சென்னை. இ.ரூபாயில் 200/-

எழுத்தாளர் மலையரசி சீனிவாசன் சிங்கப்பூரிலேயே பிறந்து வாழ்ந்து வருபவர். இவரது தந்தையார் திருமிகு முருகு. சீனிவாசன் பெரியார் பெருந்தொண்டர். தமிழவேள் சாரங்கபாணி போன்றவர்களுடன் தமிழ்ப் பணியாற்றியவர். இவரது துணைவர் திருமிகு வீ.கலைச்செல்வம் பெரியாரியர். இப் பின்னணியில் குடும்பத் தலைவியாக இருந்து எழுத வந்தவர் மலையரசி. ஏற்கெனவே ‘முகில்’, ‘கலர் பென்சில்’ ஆகிய இரண்டு கதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். தற்போது ‘நினைவோவியம்’ எனும் சிறுகதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது.

மலையரசியின் முன்னையத் தொகுப்புக் கதைகள் பெரும்பாலும் அளவில் குறுங்கதைகளாக அமைந்திருந்தன. ஆனால் இத்தொகுப்பில் சிறுகதைகளாக மலர்ச்சி பெற்றுள்ளன.

சிங்கப்பூரில் தமிழ் இலக்கியம் வளர்முகநிலையில் இருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. மரபும், புதுமையும் போற்றும் பல இலக்கிய அமைப்புகள் எழுத்தையும் பேச்சையும் போட்டி போட்டுக்கொண்டு முன்னெடுக்கின்றன. சிங்கப்பூர் அரசும் தமிழ்மொழி மாதம், இலக்கியத் திருவிழா, விருதுகள்.. என ஊக்கம் தருகிறது.

அண்மைக்கால சிங்கப்பூர்த் தமிழ் இலக்கியப் போக்குகளைப் பார்க்கும் எவருக்கும் இரண்டு முகங்கள் எளிதில் தென்படும்.



முனைவர் இரா.காமராசு



ஒன்று சிங்கப்பூரிலே பிறந்து வளர்ந்து வாழும் மக்கள் பிரிவினரின் இலக்கிய முயற்சிகள். மற்றொண்டு பணி நிமித்தமாக சிங்கப்பூரில் குடியேறியிருக்கும் தமிழ் மக்களின் எழுத்துக்கள். இந்தச் சூழல், பின்னணி பற்றிய புரிதலே இவ்விலக்கிய நோக்குகளை அறிய உதவும்.

இக்கதைகளின் தோற்றுவாய் குறித்து, "சிங்கப்பூரில் பிறந்து, இங்கேயே வளர்ந்த பொழுதுகளில், சந்தித்த மனிதர்களையும், கண்டு உணர்ந்த நிகழ்வுகளின் மூலம் கிடைத்த இனிமையான அனுபவங்களையும் கதைகளாக எழுதுவது பெருமகிழ்ச்சியைத் தருகின்றது" என ஆசிரியர் முன்னுரையில் கூறுகிறார்.

தாய்த் தமிழகத்தில் குழந்தைகளின் பெயர்களை நோக்க இக்கதைகளில் இடம்பெறும் மாந்தர்களின் தமிழ்ப் பெயர்கள் குதூகலம் தருகின்றன.பொன்னி, சங்கவி, கைலாசம், மரகதம், கன்னல், ஆவணி, இளவரசன், ரதி, தாமரை, கீர்த்தனா, ஆறுமுகம், மணிமேகலை, சித்தார்த்தன், பூர்ணிமா, அமுதநாயகம், சாவித்திரி, ஆசைத்தம்பி, மீனாட்சிசிந்தரம், குகன், பாலகுமரன், தங்கவேலு, கோவிந்தன், வனிதா, கனகசபை, சுந்தரலிங்கம், கீதா, காமாட்சியம்மன், ஆதி.... இப்படி

புலம்பெயர்ச் சூழலில் மொழிக்காப்பில் சிறிய செய்கைகள் கூட முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்து விடுகின்றன. அப்படித்தான் இந்தத் தமிழ்ப் பெயர்களும் என்பதைக் கவனம் கொள்ள வேண்டி இருக்கிறது.

இக்கதைகளில் சிங்கப்பூரின் நிலவியலும் மக்களின் வாழ்வியலும் பதிவாவது இவற்றைச் 'சிங்கப்பூர் இலக்கியம்' என்ற வகைமைக்குள் வைத்து எண்ணத் தூண்டுகிறது. இத்தொகுப்பில் பதினாறு சிறுகதைகள் உள்ளன. தலைப்புக்கு ஏற்ப இவை 'நினைவு எழுத்தோவியங்களாக' அமைந்துள்ளன.

சிங்கப்பூர் எனும் சிறிய நாட்டின் தோற்றம், வளர்ச்சி, மாற்றங்கள், மக்கள் வாழ்க்கை, பல்தேசிய நிலைமைகள் ஆகியவற்றின் நினைவுகூருகையாக இக்கதைகள் அமைகின்றன. முதியவர்களும் குழந்தைகளுமே இக்கதைகளை ஆள்கிறார்கள். தமிழர், சீனர், மலாயர் ஆகிய மூவின மக்களும் இந்து, இசுலாம், கிறித்தவம், பௌத்தம் ஆகிய பல்சமயக் கூறுகளும் இக்கதைகளில் விரவிக் கிடக்கின்றன. சிங்கப்பூர் உருவான 1965 தொடங்கி ஐம்பது ஆண்டுகளின் வாழ்வும், வளர்ச்சியும், வரலாற்றுத் தெறிப்புகளும் இக்கதைகளில் இடம் பெற்றுள்ளன.

கதைகளின் வடிவமும், சொல்முறையும் மரபானவைதான். ஆனால் எல்லாக் கதைகளிலும் ஊடும் பாவுமாக மனித நேயமே விரவிக்கிடக்கின்றன. இளையோருக்கு நடத்தைகளைப் பயிற்றும் இலக்கியக் கையேடாக இக்கதைகள் விளங்குகின்றன.

போகிறப் போக்கில் காலச்சக்கரத்தின் தடங்களை ஆங்காங்கே கதைகளில் பதிவுசெய்துவிடுவது ஆசிரியரின் சிறப்பு எனலாம்.

மலேசியாவிலிருந்து சிங்கப்பூர் பிரிவதை 1965 ஆகஸ்ட் 09 ல் லீக்வான்யூ கண்ணீர் மல்க அறிவிப்பது, மக்களின் இடப்பெயர்ச்சி, 1937இல் இந்திய வர்த்தகர் சங்கம் அமைவது, 1954இல் பெரியார் சிங்கப்பூர் வருவது, 1924 ல் மறுசீரமைப்பு செய்யப்பட்ட சுல்தான் பள்ளி வாசல், சீனப் பெருநாளில் பட்டாசு வெடிக்கத் தடைவருவது, பின்னர் ஓரிடத்தில் ஒரு சில மணி நேரம் பட்டாசு வெடிக்க அனுமதி தருவது, 1955இல் விகாச தினத்திற்கு விடுமுறை அறிவிப்பது, 2015 ல் சிங்கப்பூர் சுதந்திர நாளின் 50 ஆம் ஆண்டு கொண்டாடப்படுவது, 1975 ல் முதல் முதலாக தேசிய நாள் அணிவகுப்பு நடைபெறுவது, சிங்கப்பூரின் ஆசிரியர்தினம், தமிழவேள் சாரங்கபாணி – தமிழர் சீர்திருத்தச் சங்கம், சிங்கப்பூர் குடியுரிமை விண்ணப்பம்... எனப் பல நிகழ்வுகள் கதைகளில் இடம் பெறுகின்றன.

ஓர் ஊரின், நகரின் அடையாளங்களாக நிற்பவை வீதிகளும் கட்டடங்களும் தான். மலையரசியின் சிறுகதைகளில் சிங்கப்பூரின் வீதிகளும் கடைத்தொகுதிகளும், அடுக்குமாடி குடியிருப்புகளும் காட்சிப் படுத்தப்படுவது சிறப்பு.

புக்கிட் ஹோஸ்வீ, காமன் வெல்த் சாலை, கேலாங்பாரு, சிரம்பான், சாங்கி, தஞ்சாங்பகார், பாசிர் பாஞ்சங், சிராங்கூன்சாலை, ஊட்ரம் சாலை, சிலிகி சாலை, கார்டன்ஸ் பைதபே, ரேஸ்கோர்ஸ் சாலை, சுங்காய் தெங்கா சாலை, அவ்லோக், மார்கெட் ஸ்திரீட், சவுத் பிரிஜ் சாலை, ராஃபிஸ்ள் எம்.ஆர்.டி., காண்டோமினியம், பாட்லிசாலை, இராமகிருஷ்ணாமிஷன், ஃபேரர் பார்க் திடல், ஒஃபியர் சாலை, லூர்துமாதா தேவாலயம், புக்கிட்ஹோசுவீ, அப்பர் டிக்சன் சாலை, பப்ளோ சாலை.. என சாலைகள், குடியிருப்புகள், வட்டாரங்கள், கடைத் தொகுதிகளின் பெயர்கள் மிக இயல்பாக கதைக் களங்களோடு இயைந்து வருவது பாராட்டத்தக்கது.

தமிழர்களின் பொங்கல், கிறித்தவர்களின் கிறிஸ்துமஸ், இசுலாமியர்களின் பெருநாள், பௌத்தர்களின் விசாக நாள் ஆகியவற்றின் அடிப்படைகளாக விளங்கும் அன்பும், நேயமும், பகிர்வும் மிக நேர்த்தியாக நெருடல் இல்லாமல் ஆசிரியரால் முன் வைக்கப்படுகின்றன.

தமிழர்களும் சீனர்களும் மலாயர்களும் இசுலாமியர்களும் கிறித்தவர்களும் அவரவர் நெறியில் நின்றும், அதே வேளை பிறரை அரவணைத்தும் (Inclusive) வாழும் முறைமை மிக அழகாகப் பல கதைகளில் வெளிப்படுகின்றன.

முதியோரின் மன நிலை, உணர்வுகள், மறதி முதலியச் சிக்கல்கள், அதீத அன்பு, எதிர்பார்ப்பு, முதியோர்களைக் கையாளும் வழிகள், மனநிறைவுகொள்ளும் முதியோர்கள், மரபை அடுத்த தலைமுறைக்குக் கையளிப்பது, இணையராகவும், நண்பர்களாகவும் முதியோர் நேசம் ஆகிய பல கூறுகளும் கதைகளில் கவனம் பெறுகின்றன.

அடுத்து, கதைகளில் குழந்தைகள் அதிகம் இடம் பெறுகிறார்கள். நேரடியாக இன்றைய குழந்தைகளும், குழந்தைப்பருவ நினைவு மீட்டலாகக் குழந்தைகளும் பல கதைகளில் இடம் பெறுகிறார்கள். சமச்சீர் வளர்ச்சி குன்றிய சிறப்புக் குழந்தைகளின் ஆற்றல்களும், அவர்தம் நேசமும்சுட்டி, அவர்கள் குறித்தப் பொதுசமூகப் புரிதலின் அவசியத்தையும் சில கதைகள் வெளிப்படுத்துகின்றன.

நாய், பூனை போன்ற வளர்ப்பு விலங்குகள் வழி உயிர் நேயம் குறித்த அக்கறை தூண்டப்படுகிறது.

சர்க்கரைப் பொங்கல், காய்கறிச் சாம்பார், சிவப்பு உறையுடன் மாண்டரின் ஆரஞ்சு, அகர் அகர் வட்லப்பம், நோன்புக்கஞ்சி, பிரியாணி, தென்காசி சாப்பாடு, மீன் தலைக் குழம்பு, Hot Cross Buns... என உணவுப் பண்பாடு பல கதைகளில் மிளிர்கிறது.

இந்திய தொழில் வழி சாதி முறை எப்படி அயல் மண்ணில் மாறிப் போகிறது என்பதை 'சுழல் நாற்காலி' அற்புதமாகச் சித்தரிக்கிறது. வேளாண்மை தொழிலில் இருந்து கப்பலேறி சிங்கப்பூர் சென்ற தங்கவேலு, முடிதிருத்தும் கடையில் சேர்ந்து தொழில் பழகி 'கோவிந்தன் முடி திருத்தகம்' அமைத்து மேன்மை உறுவது, 'சாதி' எனும் கற்பிதத்தை உடைக்கிறது. இக்கதையில் இன்று காணாமல் போன கத்தியைச் சுனைத்தீட்டும் 'லெதர் வார்' வருவது அருமை. இது தமிழ்நாட்டிலும் அருகிவிட்டப் புழங்கு பொருள்.

அதே போல 'அவர்களின் மாலைப்பொழுது' கதையில் வயது கடந்து விட்ட ஆணும் பெண்ணும் வாழ்விணையராக எண்ணும் போது, தமிழ், சீனரென்ற பாகுபாடு நினைவுக்கு வருகிறது.

"நீங்கள் சீனர் நான்..." என்றாள் கவலையுடன்.

"நீங்கள் பெண். நான் ஆண். அவ்வளவுதான்" என்றான்.

"அடுத்த நொடியே டேவிட் கையிலிருந்த மலர்க் கொத்தை நாணத்துடன் பெற்றுக் கொண்டாள்"

என ஆசிரியர் முடித்து வைப்பது மனித நேயத்தின் ஒளிக்கீற்று.

'ஆவணி' கதையில் 'குடும்பமாக சாப்பிடுவது' எனும் ஆசிரியர் தரும் செய்கையை (Task) நிறைவேற்ற 'ஆவணி' எனும் சிறுமி படும்பாடு கவித்துவப் பிணைப்பு. பொருள் தேடும் உலகில் பல குடும்பங்களின் நிலை இதுதான். ஒரு பெற்றோர் குழந்தைகள், பெற்றோர் இல்லா பிள்ளைகள், பெற்றோர் பிரிந்த பிள்ளைகள்.. ஒட்டுமொத்தச் சமூகத்தையும் நாடிப்பிடித்துப் பார்க்கும் கதை.

எழுத்தாளர் மலையரசி சீனிவாசன் கதைகள் சமூகச் சார்புமிக்கவை. யதார்த்த அழகு மிக்கவை. எதிர்காலத்துக்கானவை. மொழிச் சிதைவில்லாமல் இலக்கியம் வழி மொழிப்பயிற்சித் தருபவை. சிங்கப்பூரின் இன்றையத் தமிழ் வாழ்வின் ஒரு சோற்றுப்பதம். மலையரசி அருமையான தாய்! தாயின் மனமும், முகமும் நல்லவை தானே நாடும்? இக்கதைகளும் நேர் நடத்தைக் கோரும் நேயமிக்கவையாகவே மலர்ந்துள்ளன.

●

**கட்டுரையாளர்: பேராசிரியர் – தலைவர், நாட்டுப்புறவியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்**


கட்டுரை

# பத்மநாபசுவாமி கோவிலும் தென் திருவிதாங்கூர் தொன்மங்களும்

2011 ஜுன் ஜுலை மாத தமிழ் பத்திரிகைகளும் இதழ்களும் திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி கோவிலின் பாதாள அறைகளில் அளவற்ற தங்கக் குவியல்கள் இருப்பது பற்றிய பரபரப்பான செய்திகளைப் போட்டி போட்டுக் கொண்டு வெளியிட்டன. இவை பெரும்பாலும் ஊகங்களின் அடிப்படையில் உருவானவை அல்லது ஏதோ ஒரு பார்வையில் வைக்கப்பட்டவை.

தமிழகத்தில் தொல்லியல் வரலாற்று ஆய்வாளர்கள் இது பற்றிய ஆழமான கருத்தைச் சொல்லவில்லை. முக்கியமாக இது பற்றிய அறிதலும் ஆய்வும் இல்லை என்பதை ஒத்துக்கொண்டு சிலர் பேசினார்கள். கேரளம், கொச்சி ஊரினரான ஜேக்கப் என்பவர் பத்மநாபசாமி கோவில் பொக்கிஷத்தை நாட்டு நலனுக்குச் செலவழிக்க வேண்டும் என பொதுநல வழக்கு தொடுத்தார். ஆனால் அது தள்ளுபடி ஆயிற்று.

திருவனந்தபுரம் கோவிலில் பொக்கிஷம் இருப்பது என்னும் செய்தி சுந்தரராசன் என்பவர் தொடுத்த நீதிமன்ற வழக்கின் மூலம்தான் வெளிப்பட்டது என்று சொல்லப்பட்டது. ஆனால் அது ரகசியமான விஷயம் அல்ல, பத்மநாபசுவாமி கோவிலின் ஐந்து தலை நாகத்தின் பாதுகாப்பில் நிறைய தங்கங்கள் இருக்கின்றன என்னும் வாய்மொழிக் கதை காலம் காலமாக சொல்லப்பட்டு வருவது. அது ஒரு சிலருக்குத் தெரிந்த விஷயம்.



அ.கா.பெருமாள்



என் அம்மா 30களில் திருவனந்தபுரத்தில் வளர்ந்தவர். இந்தப் பொக்கிஷக் கதையை அப்போதே அவர் கேட்டிருக்கிறார். திருவனந்தபுரம் ஆரியசாலை சந்தைக்கடையில் இந்தக் கதையைச் சொல்வதைக் கேட்டிருக்கிறார். இதுபோன்று பலர் சொல்ல நானே கேட்டிருக்கிறேன். தென் திருவிதாங்கூர் கதைப்பாடல்களில் போகிற போக்கில் கோவில் பொக்கிஷத்தைப் பற்றி சொல்லும் விஷயங்களைத் தொகுத்தால் இது ரகசியம் அல்ல என்பது தெரியும்.

பத்மநாபசுவாமி கோவிலின் உள்ளே தரை மட்டத்திலிருந்து ஆறடி ஆழத்தில் ஆறு பொக்கிஷ அறைகள் உள்ளன. இவற்றில் சில அறைகள் 1990 இல் 2 முறையும் 2002ல் 5 முறையும் திறந்தார்கள். ஒரு அறை மட்டும் திறக்கப்படவில்லை.

2011இல் இந்த அறைகளைத் திறந்து ஆய்வு செய்ய உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. ஐந்து பேர்கள் கொண்ட குழுவினர் இந்த ரகசிய அறைகளைத் திறந்து ஆய்வு செய்தனர். ஆறு ரகசிய அறைகளுக்கு A முதல் F வரை அடையாளம் இடப்பட்டு ஆராய்ந்தனர். B அறை திறக்கப்படவில்லை

B தவிர்த்த ஐந்து அறைகளிலும் இருக்கும் தங்கம், வெள்ளி, வைரம், வைடூரியம் ஆகியவற்றின் மதிப்பு ஒரு லட்சம் கோடி என கணக்கிடப்பட்டது. இந்த அறைகளில் தங்க நாணயங்கள், வைர வைடூரிய ஆபரணங்கள், வெள்ளிப் பாத்திரங்கள் ஆகியன இருந்தன. யானையின் மீது தங்க மகாவிஷ்ணு 270 சென்டிமீட்டர் நீளமுள்ள தங்க மாலை போன்றவைகளும் இருந்தன.

இவை பழைய செம்புப் பெட்டிகளிலும் மண் பானைகளிலும் செப்புக் குடங்களிலும் வைக்கப்பட்டுள்ளன. கார்த்திகைத் திருநாள் ராமவர்மா காலத்து (1772) நகைகள் ஏராளம் உள்ளன. இவை தவிர கோவில் சடங்குகளுக்கும் விழாக்களுக்கும் தேவையான வெள்ளிப்பாத்திரங்கள் நிரம்ப உள்ளன என்று பட்டியலிட்டார்கள்.

இந்த அறைகளில் B அறையைத் திறந்தால் நாடு அழிந்து விடும் என்ற நம்பிக்கையும் பழமையானது. இந்த அறையின் முன் வாசலில் இரண்டு பாம்புகளின் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. இது எச்சரிக்கையாக உள்ளது என்று ஊகித்தனர். இந்த அறை மார்த்தாண்ட வர்மா காலத்தில் நாக பாச மந்திரங்கள் ஓதி மூடப்பட்டன என்று கூறப்பட்டது. இதைத் திறக்க வேண்டும் என்றால் அந்த மந்திரம் அறிந்த புரோகிதர்கள் வேண்டும் என்ற நம்பிக்கை அந்த அறையைத் திறக்க மறுத்தது.

1930 ல் B அறையைத் திறப்பதற்கு முயற்சி நடந்தது. அப்படிச் செய்தவர்கள் பாம்புகளால் தாக்கப்பட்டனர் என்ற கதையும் வழங்கியது. பாம்புகள் கூட்டம் கூட்டமாய் அங்கே தங்கியிருந்தன. சீத் சீத் எனச் சப்தம் எழுப்பின என்னும் கதைகளும் வழங்கின. இருபதாம் நூற்றாண்டு கடைசியில் கூட இந்தக் கதை வழங்கப்பட்டதைச் சொன்னார்கள்

இந்த மர்ம அறைகளைத் திறக்க வேண்டும் என்று வழக்கு தொடுத்த சுந்தர்ராஜன் அறைகள் திறக்கப்பட்ட ஒரு மாதத்தில் உயிர் இழந்தார். இன்னொருவரின் அம்மா இறந்தார். இதன் பிறகு குறிப்பிட்ட அந்த மர்ம அறை திறக்கப்பட்டால் திருவனந்தபுரம் அழிந்துவிடும் என்ற நம்பிக்கை வலுப்பட ஆரம்பித்தது.

தமிழ் பத்திரிகைகளில் குமுதம் வார இதழும் தீராநதி மாத இதழும் இது பற்றிய செய்திகளை ஊகங்கள் கலந்து வெளியிட்டன. நானும் தீராநதியில் ஒரு கட்டுரை எழுதினேன். 2013 இல் பத்மநாபசாமி கோவில் உரிமை திருவாங்கூர் அரச குடும்பத்திற்கு என்னும் நீதிமன்ற தீர்ப்பு வந்தது. இதனால் அந்த அறையைத் திறக்க அனுமதி கிடைக்கவில்லை. இதன் பிறகு B அடையாள அறை பலப்படுத்தப்பட்டது.

இவ்வளவு பொக்கிஷம் திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்கு மட்டும் எப்படி வந்தது? பத்மநாப சுவாமி கோவிலில் இவற்றை யார் குவித்து வைத்தார்கள், சேகரித்தார்கள், இதன் மர்மம் என்ன? இந்தியாவின் வேறு சமஸ்தானங்களிலும் பெரிய கோவில்களிலும் இது போன்ற பொக்கிஷ அறைகள் இருந்ததாகத் தெரியவில்லையே. ஏன் என்பதற்கான விடை இன்னும் கிடைக்கவில்லை.

பத்மநாபசுவாமி கோவில் பற்றிய வாய்மொழிக் கதைகள் தென் திருவிதாங்கூர் கிராமங்களுடனும் (இன்றைய கன்னியாகுமரி மாவட்டம்) தொடர்புடையன. திருவனந்தபுரம் கோவிலுக்குச் சொந்தமான வயல்களும் தோட்டங்களும் நாஞ்சில் நாட்டில் நிறையவே இருந்தன. இவற்றைப் பராமரித்தவர்களிடம் வழங்கிய கதைகள் இந்தக் கோவிலுடன் தொடர்புடையன. இவை முழுமையாகச் சேகரிக்கப்படவில்லை. இந்தக்

கதைகள் மட்டுமல்ல கதைப்பாடல்களிலும் இது போன்ற செய்திகள் உள்ளன.

பத்மநாபசுவாமி கோவிலுக்கும் புலையருக்கும் உள்ள தொடர்பு பற்றிய கதை வாய்மொழியாகப் பேசப்படுகிறது. நாஞ்சில் நாட்டில் இரவி புதூர் என்ற ஊரின் குளத்தின் கரையில் வழிபாடு பெறும் இடைகரை புலை மாடசாமி தொடர்பான வாய்மொழி கதை இது தொடர்பானது.

ஒருமுறை அனந்தன் காடு வழியாகச் சென்ற புலைப்பெண் ஒருத்தி காட்டில் அழுது கொண்டு கிடந்த ஒரு குழந்தையைக் கண்டாள். அதை எடுத்து வீட்டிற்கு எடுத்துச் சென்றாள். குழந்தையை நீராட்டி அரவணைத்து பாதுகாத்தாள். சில நாட்கள் கழிந்தன.

ஒரு நாள் அவள் அந்தக் குழந்தையுடன் காட்டு வழி சென்றபோது அசரீரி கேட்டது. அப்போது குழந்தை மரப்பொம்மையாகிவிட்டது. அவள் பயந்து போய் அது மாயக் குழந்தை என்று நினைத்து ஒரு மரத்தடியில் வைத்தாள். அது கிருஷ்ணனின் கல் உருவமாக மாறியது. இந்த விஷயத்தை அவள் நாட்டு அரசனிடம் சொன்னாள். பின்னர் அங்கே கோவில் உருவானது.

ஒருமுறை வில்வ மங்கலம் நம்பூதிரி ஒருவர் கிருஷ்ண விக்கிரகத்திற்குப் பூசை செய்து கொண்டிருந்த போது ஒரு குழந்தை வந்தது. அவரது பூஜைக்கு இடையூறாக அட்டகாசம் செய்தது. அவர் குழந்தையை விரட்டினார். குழந்தை வீட்டை விட்டு வெளியே செல்லும்போது என்னை அனந்தன் காட்டில் வந்து பார்ப்பாய் எனச் சொல்லிவிட்டு ஓடிவிட்டது.

நம்பூதிரி பூஜை விக்கிரகத்தைப் பார்த்தார். காணவில்லை. அங்கே வந்த குழந்தை கிருஷ்ணனே என்று உணர்ந்தார். அவனைத் தேடிப் புறப்பட்டார். அனந்தன் காடு எங்கே இருப்பது என்பது அவருக்குத் தெரியாது. தற்செயலாக இரண்டு புலையர்கள் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டார். ஒருவன் " நீ இப்படி எல்லாம் பேசினால் அனந்தன் காட்டில் விட்டு விடுவேன்" என்றான். நம்பூதிரி அவனிடம் அனந்தன் காடு எங்கே இருக்கிறது. என்று கேட்டார். அவன் வழி சொன்னான்.

நம்பூதிரி அனந்தன் காட்டு வழியே நடந்தார். அங்கே புலைப்பெண் ஒருத்தியின் மடியில் தன்னைத் தொந்தரவு செய்த குழந்தை இருப்பதைப் பார்த்தார். நம்பூதிரியைக் கண்டதும் அந்த குழந்தை கிருஷ்ண விக்ரகமாக மாறியது. அவருக்கு அது புரிந்தது. அந்த இடத்திலேயே கோவில் கட்டுவதற்கு அரசரிடம் வேண்டினார். கோவில் உருவானது. கோவிலுக்குத் தேவையான தங்க நாணயங்களை அரசன் அங்கு சேமித்து வைத்தான்.

பத்மநாபசுவாமி கோவிலின் கருவறையில் மூலப் படிவத்தின் பின்னே ஒரு துவாரம் இருந்தது. அதன் வழியே கடல் நீர் கசிந்து வந்தது. முதிய பூசகர் ஒருவர் அந்த துவாரத்தை கல்லால் அடைத்து வைத்தார். ஒரு சமயம் இளம் நம்பூதிரி ஒருவர் அந்தக் கல்லைப் புடுங்கி விட்டார். நீர் கசிந்தது. அவருக்கு அந்த நீர் எங்கிருந்து வருகிறது என்று கண்டறிய ஆசை. நீண்ட நூலில் மூலப்படிவத்தில் இருந்த மோதிரத்தைக் கட்டி துவாரத்தில் இட்டார்.

மோதிரம் துவாரம் வழி சென்றது. நூலும் போய்க் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் நூல் அறுந்துவிட்டது. நம்பூதிரி அந்த செய்தியை யாரிடமும் சொல்லவில்லை. இரண்டு நாட்கள் கழிந்தன. ஒரு நாள் சங்கு துறை கடற்கரையில் மீனவன் பெரிய மீன் ஒன்றைப் பிடித்தான். அதை வீட்டிற்குக் கொண்டு சென்று அறுத்த போது மோதிரம் இருப்பதைக் கண்டான். அதை அதிகாரியிடம் கொடுத்தான். அரசனுக்குச் செய்தி தெரிந்தது. மோதிரம் கோவிலின் மூலப் படிவத்திற்கு உரியது என்று அறிந்தனர். இதன் பிறகு அந்த துவாரம் நிரந்தரமாக அடைக்கப்பட்டது.

இந்தக் கோவிலின் கீழே பாற்கடல் உள்ளது. பால் அடிக்கடி கோவில் மண்டபத்தில் பொங்கி வழியும் என்று நம்பிக்கை உண்டு. 1563 ஆம் ஆண்டு ஆதித்தவர்மா காலத்தில் கோவிலின் ஒற்றைக் கல் மண்டபத்தில் ஒரு துவாரத்திலிருந்து பால் பொங்கியது. ஒரு முறை அல்ல இரண்டு மூன்று முறை. 1628 ஆம் ஆண்டு இது போன்ற ஒரு நிகழ்ச்சி நடந்தது. இது போன்ற கதைகள் நிறையவே வழங்கின.

அனந்தபத்மநாபன் பாற்கடல் மீது பள்ளி கொண்டு கிடக்கிறான் என்னும் நம்பிக்கை இது போன்ற கதைகளுக்குக் காரணமாக இருந்திருக்கலாம். இதன் காரணமாக கோவிலின் சில பகுதிகள் பெரிய கல்லால் மூடப்பட்டன.

இந்தக் கோவில் வளாகத்தில் உள்ள அம்பாடி கோவிலில் ஒரு மேடையில் மரத்தாலான அனுமான் சிலை உள்ளது. அம்பாடி கோவிலுக்கு வருகின்றவர்கள் இந்த

அனுமனையும் வழிபடுகின்றனர். இந்த அனுமான் ராமேஸ்வரத்திலிருந்து வந்தவன் என்பது நம்பிக்கை.

அர்ஜூனன் தீர்த்த யாத்திரை சென்ற போது ராமேஸ்வரம் கடற்கரையில் நின்றான். ராமன் கட்டிய பாலத்தைப் பார்த்தான். அங்கே ஒரு சிறு குரங்கு நின்று கொண்டிருந்தது குரங்கு அர்ஜுனனிடம் "இந்தப் பாலத்தை வானரப் படைகள் கட்டின என்பது உனக்குத் தெரியுமா" என்றது.

அர்ஜுனன் குரங்கைப் பார்த்து "இந்தப் பாலத்தைக் கட்ட வானரங்கள் தேவையா என்னுடைய பாணம் போதுமே" என்றான். குரங்கு "நீ கட்டும் பாலத்தில் நான் போக முடியுமா?" என்று கேட்டது. அர்ஜுனன் இதோ பார் என்று சொல்லிவிட்டு வில்லை வளைத்துப் பாணத்தைச் செலுத்தினான். பாலம் கட்டினான்.

அந்தக் குரங்கு பாலத்தின் மீது நடந்ததும் பாலம் உடைந்தது. கடலில் விழுந்தது. அர்ஜுனன் திகைத்தான். அப்போது அங்கே குரங்கைக் காணவில்லை. ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான். அவன் "அர்ஜுனா வானரங்கள் பக்தியுடன் கட்டியது இந்தப் பாலம். அவர்களிடம் ஆணவம் இல்லை, அன்பு இருந்தது. உன் பாணம் அகங்காரத்தின் அடையாளம், அது உடைந்து விட்டது " என்றான்.

அர்ஜுனன் பதில் சொல்லவில்லை. திகைத்து நின்றான். சிறுவன் நின்ற இடத்தில் இப்போது அனுமான் நின்று கொண்டிருந்தான். அருகே கிருஷ்ணன் அவன் அர்ஜுனனிடம் "நான் அனந்தன் காட்டுக்குப் போகிறேன். அங்கே கோவில் கொண்டு இருப்பேன். அனுமனும் என்னுடம் வருகிறான். நீ அங்கே வந்து என்னைப் பார்க்கலாம்" என்றான்.

இந்தக் கதை வாய்மொழியாக மட்டுமல்ல தென் திருவிதாங்கூரில் வழக்கில் இருந்த தர்ம ராஜாவின் ராமேஸ்வர யாத்திரை பூதங்களின் கதை என்னும் கதைப் பாடல்களிலும் வருகிறது. வாய் மொழியாகவும் பேசப்படுகிறது. இது போன்று பத்மநாபசுவாமி கோவில் தொடர்பான வேறு கதைகளும் தென்திருதாங்கூர் பகுதிகளில் வாய் மொழியாக உள்ளன. வேறு கதைபாடல்களிலும் மேலோட்டமாகக் குறிப்பிடப்படுகின்றன.

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில் மிகப் பழமையானது என்பதற்குப் புராணங்களில் இருந்து மேற்கோள் காட்டுகின்றனர். பத்மநாபன் என்ற அவதாரம் பற்றி வேத வியாசரின் 18 புராணங்களில் குறிப்புகள் வருகின்றன.

வராக புராணத்தில் பாரதத்தின் தெற்கு பகுதியில் மலையா மலை என்னும் மலையின் அருகே ஒரு கடல் உண்டு. அங்கே பாம்பின் மேல் பள்ளிகொண்ட பத்மநாபன் இருக்கின்றான். அவரைத் துதிக்கின்றேன் என்று செய்தி வருகிறது. பிரம்ம புராணத்தில் அனந்த சயனம் என்பது நகரத்தின் பெயராகக் குறிப்பிடப்படுகிறது.

பிரம்மானந்த புராணத்தில் விஷ்ணுவின் நகரமாக அனந்தம் நகர் என்ற பெயர் சொல்லப்படுகிறது. கிபி 10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கருநாகப்பள்ளி லட்சுமி தாச நம்பூதிரி என்பவர் சுக சந்தேசம் என்ற நூலில் இக்கோவிலைக் குறிப்பிடுகிறார். இந்தக் கோவிலுக்கு வைஷ்ணவ ஆச்சாரியரான யமுனாச்சாரியார் வந்திருக்கிறார் என்று வைஷ்ணவ குரு பரம்பரை பிரபாவம் கூறும் என்னும் செய்திகளை கோவிலில் வரலாற்றை எழுதியவர்கள் கூறுகின்றனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியமான பதிற்றுப்பத்து என்ற நூலில் நாலாவது பத்தில் காப்பியாற்றுக் காப்பியன் என்பவன் விஷ்ணுவை வர்ணிக்கின்றார். இதன் உரையாசிரியர் இங்கு குறிப்பிடப்படும் விஷ்ணு திருவனந்தபுரம் திருமாலே என்கிறார்.

சிலப்பதிகாரத்தில் ஆடக மாடம் என்று குறிப்பிடப்படுவது திருவனந்தபுரம் தான். நம்மாழ்வார் திருவனந்தபுரம் கோவிலை விரிவாகவே பாடி இருக்கிறார். இப்படியான பழமையான இந்தப் கோவில் பற்றிய செய்திகள் சிலவற்றைப் பார்ப்போம்.

திருவனந்தபுரம் பத்மநாத சுவாமி கோவில்பற்றி நம்மாழ்வார் 11 பாடல்கள் பாடியிருக்கிறார். இவரது பாடல்கள் திருவாய்மொழி பத்தாம் பத்தில் செருமிடர் என்னும் தலைப்பில் வருகின்றன. இவரது பாசுரங்களில் கேசவன் பாம்பணை மேல் பள்ளி கொண்டிருக்கிற அனந்தபுரம் கடல் சூழ்ந்தது நிறைய மரங்கள் உடைய பொழில்கள் உடையது வயல்கள் சூழ்ந்தது என்னும் செய்திகள் உள்ளன. அனந்தபுரம் ஊர் பெயரை பத்து இடங்களில் நம்மாழ்வார் கூறுகிறார். நம்மாழ்வார் எட்டாம் நூற்றாண்டவர். அதனால் இக்காலத்திற்கு முன்பு இக்கோவில் பிரபலமாக இருந்திருக்கிறது என்பதை ஊகிக்கலாம்.

இவ்வளவு பழமையும் பிரபலமுமான இந்தக் கோவிலில் 24 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இந்தக் கோவிலில் உள்ள கல்வெட்டுக்களைத் திருவிதாங்கூர் தொல்லியல் தொகுதிகளில் (1, 2, 3, 4) காணலாம். இந்தக் கோவில் தொடர்பான கல்வெட்டுகள் திருவட்டாறு ஆதிகேசவப். பெருமாள் கோவில், கேரளபுரம் சிவன் கோவில், கன்னியாகுமரி பகவதி கோவில் ஆகியவற்றிலும் காணப்படுகின்றன. இந்த மூன்று கோவில்களும் இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ளன.

இந்தக் கல்வெட்டுக்கள் தமிழ் மொழியில் வட்டெழுத்து, சமஸ்கிருத மொழியில் மலையாள எழுத்து, சமஸ்கிருத மொழியில் கிரந்த எழுத்து மலையாள மொழியில் மலையாள எழுத்து ஆகியவற்றில் உள்ளன. தமிழ் மொழியில் வட்டெழுத்து வடிவில் அமைந்த கல்வெட்டுக்கள் ஒன்பது அளவில் உள்ளன.

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் கருவறை கல்வெட்டு திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவிலுக்குப் பராக்கிரம பாண்டியன் நிபந்தம் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது (1070). இதில் பாண்டியனின் அந்தப்புற மகளிர் கோவிலுக்கு ஆபரணங்களை நிவந்தமாகக் கொடுத்த செய்தி வருகிறது. இந்தப் பாண்டியன் குலோத்துங்கன் காலத்தவன் வேணாட்டு வீர ராம கேரளவர்மனின் 1208 ஆம் ஆண்டு தமிழ்க் கல்வெட்டு இக்கோவில் மூலவருக்கு நிபந்தம் அளித்ததைக் கூறும் ஆதித்தவர்மா என்ற சர்வாங்கநாதன் (1374, 1373) வீர ரவி குலசேகர பெருமாள் (1601) கோதை மார்த்தாண்ட வர்மா (16 ஆம் நூற்) ஆகியோரின் கல்வெட்டுக்கள் இக்கோவிலில் உள்ளன வேணாட்டு அரசன் ஒருவன் கோபுர அதிஷ்டானம் கட்டியதை ஒரு கல்வெட்டு கூறுகிறது (1565).

திருவிதாங்கூர் சமஸ்தானத்தை நிறுவிய அனுஷம் திருநாள் மார்த்தாண்ட வர்மா (1728 - 58) இக்கோவிலில் பல கட்டுமானங்கள் செய்திருக்கிறான். இவனது கல்வெட்டுக்கள் 4 அளவில் உள்ளன (1729, 1731 1731, 1739) சித்திரை திருநாள் கட்டுமானம் செய்ததை ஒரு கல்வெட்டும் (1934) ஒற்றைக்கல் மண்டபத்தில் தகடு வேயப்பட்டதை ஒரு கல்வெட்டும் (1990) கூறுகின்றன.

இந்தக் கோவில் சிலப்பதிகார காலத்தது என்றாலும் பெரும்பான்மையான கட்டுமானம் பதினெட்டாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் தான் நடந்திருக்கிறது. கோவிலின் கிழக்கு சுற்றுச் சுவர் 20 அடி உயரமுடையது. மற்ற பக்கங்கள் 15 அடி உயரம். அண்மை காலத்தில் வரை கோவிலைச் சுற்றி உள்ள பகுதிகளில் தமிழர்கள் நிறைய பேர் இருந்தனர் என்று கோவிலைப் பற்றி விரிவாக எழுதிய ராணி அஸ்வதித்திருநாள் கவுரி லட்சுமிபாய் (Sree Padmanaba swamy Temple 2023 Page 262) கூறுகின்றார்.

இந்தப் கோவில் கிழக்கு நோக்கியது. திராவிடப் பாணி மரபினது. மதுரை நாயக்கர் செல்வாக்கும் உண்டு ஸ்ரீ கோவில், பலிக்கல் மண்டபம், கொடிமரம் மண்டபம், குலசேகர மண்டபம் என பல மண்டபங்களைக் கொண்டது.

வீர ரவிவர்மா காலத்துத் தமிழ்க் கல்வெட்டு (1600) இந்த அரசன் கோவில் பணி செய்ததைக் குறிப்பிடுகிறது. இதே நூற்றாண்டில் கோத மார்த்தாண்டவர்மா என்பவன் திரு அம்பாடி முகமண்டபத்தை அமைத்திருக்கிறான். 16 ஆம் நூற்றாண்டில் வீர ரவி வர்மா காலத்தில் கோவிலின் சில பகுதிகள் நெருப்பால் அழிந்தன.

அனுஷம் திருநாள் மார்த்தாண்ட வர்மா காலத்தில் கோவிலில் பெரும்பாலான பணிகள் நடந்தன. தீபசாலை, அலங்கார மண்டபம் கருவறை, பிரகாரம், போன்றவை பழுது நீக்கப்பட்டன. 1732இல் கோவிலில் கும்பாபிஷேகம் நடந்தது.

இந்தக் கோவிலின் ஒற்றைக்கல் மண்டபத்தின் தரை ஒரே கல்லால் ஆனது. இது திருவனந்தபுரம் திருமலை என்ற இடத்திலிருந்து கொண்டு வரப்பட்டது என்பதற்குத் தனிக்கதைகள் உள்ளன.

கோவில் கோபுரம் ஏழு நிலைகளைக் கொண்டது. 100 அடி உயரம், கோவிலின் எதிரே பத்ம தீர்த்தம் என்னும் பெயருடைய குளம் உள்ளது. கோவில் கருவறையில் பத்மநாபன் அனந்த சயனம் கொண்டிருக்கிறான். இவரது இடது கையில் தாமரை நாபியில் பிரம்மா 10008 சாளக்கிரமங்களைக் கொண்ட இந்த கடுசர்க்கரை படிமம் 18 அடி நீளமுடையது.

திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவிலுக்கு உரிமையான நஞ்சை, புஞ்சை நிலங்கள் தென் திருவிதாங்கூர் பகுதிகளில் உள்ளன. குறிப்பாக நாஞ்சில் நாட்டில் நிறையவே வயல்கள் இருந்தன. இவற்றைப் பராமரித்த குத்தகைக்காரர்களிடம் இந்த கோவில் பற்றி வாய்மொழி கதைகள் வழங்கின.

வில்லிசை கலையில் பாடப்படும் கதைப்பாடல்கள் சிலவற்றிலும் இந்தக் கோவிலின் தோற்றம் பற்றிய கதைகள் வருகின்றன.

இந்தக் கோவில் பற்றி ஒன்பதுக்கு மேற்பட்ட கதைப்பாடல்களில் செய்திகள் வந்தாலும் பெருமாள் சாமி கதை அல்லது திருவரங்கநாதன் அனந்தபுரம் வந்த வரலாறு, சோமண்டி கதை, பூதங்களின் கதை ராமேஸ்வரம் யாத்திரை ஆகியவற்றில் நேரடியான செய்திகள் வருகின்றன.

திப்பு சுல்தான் படையெடுப்பு தொடர்பான திவான் வெற்றி என்ற கதைப்பாடலில் இந்தக் கோவிலுடன் தொடர்புடைய பிராமணர்கள் நாஞ்சில் நாட்டில் குடியேறியது குறித்த செய்திகள் வருகின்றன. ராம கீர்த்தனம் என்னும் ராமாயண கதை பாடலில் இந்த கோவிலுடன் தொடர்புடைய அனுமன் குறித்த ஒரு கதை வருகிறது.

பெருமாள் சாமி கதை 1909ல் (பாலம் பதிப்பு திருநெல்வேலி) அச்சில் வந்திருக்கிறது. ஆறுமுகப்பெருமாள் நாடார் திருந்திய பதிப்பு ஒன்று வெளியிட்டுள்ளார் (1969 நாஞ்சில் அச்சகம் நாகர்கோவில்). சோமாண்டி கதையும் பூதங்களின் கதையும் ஏட்டு வடிவில் உள்ளன.

பெருமாள்சாமி கதை வருமாறு; திருவரங்கம் கோவிலில் பூசை செய்த தர்ம சிந்தனை உடைய பூசகன் ஒருவனை மற்ற பூசகர்கள் பொறாமையால் துன்புறுத்தினார். அந்தப் பூசகன் திருவரங்கம் கோயிலை விட்டு வெளியேறினான். அப்போது ரங்கநாதன் சேத்திர பாலன், ஈஸ்வர பாலன், சங்கிலி பூதம் ஆகிய மூன்று பூதங்களுடன் புறப்பட்டார் பூசகனும் உடன் வந்தான்.

அரங்கநாதனும் பூசகனும் பூதங்களும் திருவரங்கத்திலிருந்து. புறப்பட்டு சீர்காழி, உறையூர், தில்லை, மதுரை திருவில்லிபுத்தூர், திருநெல்வேலி என பல இடங்களைக் கடந்து திருக்குறுங்குடி வந்தனர். அரங்கநாதன் அங்கே பூதங்களையும் பூசகனையும் இருக்குமாறு சொன்னார்.

அரங்கநாதன் திருவிதாங்கூர் எல்லைக்குள் நுழைந்து திருவட்டாறு வந்தார். அங்கிருந்து திருவனந்தபுரத்திற்கு அருகில் உள்ள அனந்தம் காட்டிற்குச் சென்றார் அங்கே குழந்தையாக மாறி இலுப்பை மரம் ஒன்றிலே மறைந்திருந்தார் திருக்குறுங்குடியில் இருந்த பூசகன் அரங்கனைப் பிரிய மனமில்லாமல் அனந்தன் காட்டுக்கு வந்தான். அங்கே அவரைத் தேடிக் கண்டுபிடித்தான். அவருக்குப் பூசை செய்ய விரும்பினான் அந்தக் காட்டில் இருந்த ஈழுவ சாதியினன் ஒருவனிடம் சிரட்டையில் தீயைப் பெற்று முறைப்படி வழிபாடு செய்தான்.

அரங்கன் அனந்தன் காட்டுக்கு வந்ததைக் கனவிலே கண்ட திருவிதாங்கூர் மன்னன் இலுப்பை மரத்தை அடையாளம் கண்டு வந்தான். அந்த இடத்தில் பெரிய கோவில் ஒன்றைக் கட்டினான். இந்தக் கதை சிறு மாற்றங்களுடன் நாஞ்சில் நாட்டில் வழங்குகிறது. சோமாண்டி கதையும் பூதங்கள் கதையும் பெருமாள் சாமி கதையுடன் தொடர்புடையன.

அரங்கநாதனால் திருக்குறுங்குடி மலையில் தாபிக்கப்பட்ட பூதங்களின் கோவிலில் பூசகன் ஒருவன் பூசை செய்தான். அவனது மகனை மூன்று பூதங்களில் ஒன்று கொன்றுவிட்டது. அதனால் பூசகன் பூதங்களைப் பழி வாங்கினான். ஆனால் பூதங்கள் அவனைக் கொன்றன. அவனுக்கு உதவி செய்த வேளாளப் பிரமுகரையும் கொன்றன. மறுபடியும் அங்கே கோவில் கொண்டன. இந்தப் பூதங்களின் கோவிலில் இருந்த பெருமளவு தங்க ஆபரணங்களைப் பூதங்கள் பாதுகாத்தன.

இந்தக் கதைகளுக்கெல்லாம் மூலமான கதை வைஷ்ணவ பாரம்பரியத்தில் வழங்குகிறது. இந்தக் கதை திருமழிசையாழ்வாரின் கதையுடன் தொடர்புடையது. காஞ்சிபுரத்தில் கிழக்கே உள்ள ஒரு சிறு கிராமத்தில் பார்க்கவர் என்ற முனிவர் இருந்தார். அவருடைய மனைவி கனகாங்கி. இவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதற்கு கை கால் முதலிய உறுப்புகள் இல்லை. அதனால் வருத்தப்பட்ட முனிவர் அந்தக் குழந்தையை பிரம்புப் புதரில் போட்டு விட்டு சென்று விட்டார்.

அந்தக் குழந்தை திருமாலின் அருளால் முழு வடிவம் பெற்று அழுது கொண்டிருந்தது. அப்போது அந்த வழியே, திருவாளன் பங்கயச்செல்வி என்னும் தம்பதியர் வந்தனர். அவர்கள் குழந்தையை வளர்த்தனர். அந்தக் குழந்தை தெய்வத்தன்மை வாய்ந்தது என்பதைக் கண்டு கொண்டனர்.

அந்தக் குழந்தை பல கலைகளைக் கற்று முதிர்ந்த ஞானியைப் போன்று திகழ்ந்தது. சைவ தத்துவத்தில் ஈடுபாடு உடையதாக இருந்தது. சிவவாக்கியர் என்ற பெயரைப் பெற்றது. திருவாளன் தம்பதியருக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதற்குக் கணிகண்ணன் என்று பெயரிட்டனர்.

கணிகண்ணன் சிவவாக்கியரின் சீடனாக அமர்ந்து கல்வி கற்றான்.

சிவவாக்கியர் ஒரு முறை திருமயிலை சென்றபோது பேயாழ்வாரைச் சந்தித்தார். ஆழ்வார் சிவவாக்கியாருக்கு நாராயணனின் திருமந்திரத்தை முறைப்படி கற்பித்தார். சிவவாக்கியர் திருமழிசை ஆழ்வார் ஆனார்.

அவரது சீடன் கணிகண்ணனுடன் காஞ்சிபுரத்தில் இருந்தார். அங்கு அவரது வீட்டில் வயதான பெண்ணொருத்தி பணிவிடை செய்தாள். அவளது சேவையைக் கண்ட ஆழ்வார் உனக்கு என்ன வரம் வேண்டும் கேள் என்றார். அந்த முதிய பெண் எனக்கு இளமை வேண்டும் என்று கேட்டாள். ஆழ்வார் வரம் கொடுத்தார். அவள் இளம் அழகியாக மாறிவிட்டாள்.

அந்த அழகியைப் பார்த்த அந்த ஊர் மன்னன் அவளைத் தனக்கு இரண்டாம் மனைவியாக வைத்துக் கொண்டான். அவளுக்கு இளமை வந்த வரலாற்றைக் கேள்விப்பட்டு கணிகண்ணனிடம் உன் ஆசிரியரிடம் சொல்லு எனக்கும் இந்த இளமை வரவேண்டும் என்றான்.

கணிகண்ணன் அரசனிடம் என் குருநாதர் உன் மனைக்கு வர மாட்டார். உன்னைப் பாட மாட்டார் என்றான். அதனால் அரசன் நீ என் நகரை விட்டு சென்று விடு என்றான். இதைக் கேள்விப்பட்ட திருமழிசையாழ்வார் நானும் உன்னிடம் வருகிறேன் என்றார். மட்டுமல்ல அரங்க நாதனைப் பார்த்து

> **கணிகண்ணன் போகின்றான் ; காமரும் பூங் கச்சி**
> **மணிவண்ணா நீ கிடக்க வேண்டா - - துணிவுடைய**
> **செந்நாப் புலவனும் போகின்றேன் நீயும் உன்றன்**
> **பைந்நாகப் பாய் சுருட்டி கொள்**

என்றார். உடனே ரங்கநாதனும் அவருடன் புறப்பட்டான். இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட அரசன் ஆழ்வாரைப் பணிந்தான். ஆழ்வார் தன் பாடலை மாற்றி, பாய் விரித்துக்கொள் என்று பாடினார்.

இந்தக் கதையின் பின்னணியில் பெருமாள் சாமி கதை உருவானது மட்டுமல்ல பெருமாள் சாமிக்குக் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோவிலும் இருக்கிறது.

இலந்த விளை என்ற ஊரில் உள்ள பெருமாள் சாமி கோவிலில் அரங்கநாதன் ஐம்பொன் விக்ரகமாக இருக்கிறான். அமர்ந்த கோலம் நான்கு கைகள் இரண்டு கைகளில் சங்கு சக்கரம் பிற இரண்டும் அபய வரத முத்திரைகள் காட்டுகின்றன. இங்கே இவர் நாட்டார் தெய்வமாகவே இருக்கிறார். இங்கே பெருமாள்சாமிக்கு வேறு ஊர்களிலும் கோவில்கள் உள்ளன.

இந்தப்பெருமாள் சாமிக்கு ஆடு கோழி பலி கொடுக்கப்படுகிறது. கொடை விழாவின் போது சாமி ஆடுபவர் சாமிக்கு அருள் வந்து ஆடுகிறார். நாட்டார் தெய்வக் கோவில்களில் விழாவும் பூசையும் எப்படி நடக்கிறதோ அப்படியே இங்கு நடக்கிறது.

சோமாண்டி கதையிலும் பூதங்கள் கதையிலும் அரங்கநாதன் பெரும் செல்வத்துடன் ஸ்ரீரங்கத்தில் இருந்து வந்தான். அதைப் பூதங்கள் பாதுகாக்கின்றன என்ற தகவல் உள்ளது. பொதுவாக இந்த மூன்று பூதங்களும் பெரும் பொக்கிஷங்களைப் பாதுகாப்பன என்னும் வாய் மொழிக்கதைகள் அதிகம் உண்டு. இந்தக் கதைகளை எல்லாம் பத்மநாபசுவாமி கோவிலுடன் பொருத்திப் பார்க்கலாம்.

●

**கட்டுரையாளர்: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்.**

**<u>உங்கள் நூலகம் இதழுக்கு கட்டுரைகள் அனுப்புவோர் கவனத்திற்கு...</u>**

- **கட்டுரைகள் 1300 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்கவேண்டும்**
- **யுனிக்கோட் (Unicode) எழுத்துருவில் தட்டச்சு செய்து அனுப்பவேண்டும்.**
- **கட்டுரையாளரின் புகைப்படம் இணைத்து அனுப்பவேண்டும்.**
- **தெளிவான முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் இருக்க வேண்டும்.**
- **ஆசிரியர்குழுவின் முடிவின்படியே கட்டுரைகள் தெரிவுசெய்யப்படும்.**
- **தேர்ந்தெடுக்கப்படாத கட்டுரையாளர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும்.**

கட்டுரை

# பழந்தமிழ் இலக்கியத்தில் விளிம்புநிலையினர் : சில விசாரணைகள்

முனைவர் **சீ. சரவணஜோதி**




பழந்தமிழ் இலக்கியத்தில் விளிம்புநிலையினர். முருகேசபாண்டியன்.ந., சென்னை: என்சிபிஹெச், விலை:ரூ.100/-, தொடர்புக்கு: 044 – 26251968.

'பழந்தமிழ் இலக்கியத்தில் விளிம்புநிலையினர்' என்ற நூலின் மூலம் ந. முருகேசபாண்டியன் நிகழ்த்துகின்ற விசாரணைகள் ஆய்வுலகில் கவனம்கொள்ள வேண்டியதாகும். அவர், பழந்தமிழ் இலக்கியத்தில் கட்டமைக்கப்பட்ட அறமும் விதிகளும் என்ற கட்டுரையின் மூலம் அரசியல் சார்ந்ததாகச் செய்துள்ள விசாரணை முக்கியமானது. இலக்கியப் படைப்புகளில் ஒடுக்கப்பட்டோர் பற்றிய பதிவுகள் நிராகரிக்கப்படுவது என்பது நுண்ணரசியலாக இயங்குவதை, தமிழ் இலக்கிய வரலாற்றில் காணமுடிகிறது. குறிப்பாகப் பழந்தமிழ் இலக்கியப் படைப்புகளில் வருணப் பாகுப்பாட்டின் வரம்பிற்குள் உட்படாத, தீண்டத்தகாதவர்கள், ஆண், பெண் அடிப்படையில் ஒடுக்கப்பட்ட உடல்களாக புறக்கணிக்கப்பட்டனர். 'பாலினம், பிறப்பு குறித்த கற்பிதங்களைத் தகர்க்கின்ற ஆவேசமான மொழியில் சித்தர்களின் சொல்லாடல்கள்' அமைகின்றன என்கிற நூலாசிரியரின் மதிப்பீடு, சமூக அக்கறை சார்ந்தது.

மனித உடல் ஆன்மீகத் தேடலுக்கானது. உடலைப் புனிதமாகச் சித்தரிக்கின்ற சமயம், ஆணுடல் பெண்ணுடல் அல்லது அரவாணி உடல் ஆகியவற்றை இலக்கியங்களில் கீழானதாக் கட்டமைத்திருக்கிறது. அரவாணி உடல் இறைவனின் அம்சமாகவும் உருவாக்கம் செய்யப்படுவதும் விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறது. கடவுள், சமயம், மன்னன் என்று இலக்கியப் போக்காக கட்டமைக்கப்பட்ட சிற்றிலக்கியம் தமிழகத்தில் நிலவிய அரசியல் பொருளாதார நிலைமையை எடுத்துரைக்கின்றது. ஆனால் இங்கு விசாரணை செய்யப்பட வேண்டியது விளிம்புநிலையினரின் வாழ்க்கை, சமய சமரசத்திற்குட்பட்ட நிலை, மொழி, அரசியல் ஆகியவையாகும். தூது, பள்ளு போன்ற இலக்கிய உரையாடல்களின் வழி சமயம், மொழி, மன்னன் ஆகிய கருத்தியல்கள் எதிர் விசாரணை செய்யப்பட வேண்டியவை என்ற கருத்து கவனத்திற்குரியது.

சமூகத்தில் நிலவும் மதிப்பீடுகளை விசாரணைக்குட்படுத்திய பட்டினத்தார், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கவிதை எழுத முன்வராத பெண்கள் நிலை, குறித்த வைதீக சமய அரசியல் அடிப்படையில் ஒற்றைத்தன்மையைச் செலுத்தி அதிகாரம் செய்வதை விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்கிறார் முருகேசபாண்டியன்.

**இலக்கியத்தில் ஒடுக்கப்பட்டோருக்கான இடம்**

செய்யுள் வடிவத்திற்கும் அதிகாரத்திற்குமானத் தொடர்பைக் கூறும்போது, "தமிழ்ச் சமூகத்தில் ஒடுக்கப்பட்டோர் என்பதை வறையறுக்கும் போது, சாதி, பாலினம், பொருளாதாரம் முக்கிய இடம் வகிக்கின்றன. பிறப்பு அடிப்படையில் மனித உடல்கள் பேதப்படுத்தப்பட்டிருப்பது அனிச்சைச் செயல்போல் சமூகத்தில் கற்பிக்கப்பட்டிருக்கிறது. பால் அடிப்படையில் பெண் உடல் தீட்டு என்று பெண் சமூகம் நம்புமளவிற்குக் கற்பிக்கப்பட்டுள்ளது. மலை, காடு போன்ற பகுதிகளில் வாழ்ந்த சித்தர் மரபினர், மருத்துவம், சோதிடம், சிற்பக்கலை போன்ற கருத்தியலைச் செய்யுள் வடிவில் கட்டமைத்தனர். செய்யுள் வடிவம் என்பதே அறிவு சார்ந்த அதிகார மையமாக உருவானது. இந்தப் போக்குச் சோழர் காலத்தில் உச்சம் பெற்றது. பின்னர் வந்த மராட்டியர், நாயக்கர் காலத்தில் வலுவடைந்தது" என்கிறார் முருகேசபாண்டியன்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் காப்பிய காலம், பக்தி இலக்கிய காலம், சிற்றிலக்கிய காலம் என்ற பகுப்பு முழுமையும் வைதீக சமயம் சார்ந்த குரல்களாக ஒலிப்பதை அறிய முடிகிறது. ஒடுக்கப்பட்டோர்க்கான வாழ்வியலை விதிகளாக வரையறுக்கப்பட்டதன் வழி, வைதீக சமயம் மேல்தட்டு மக்களுக்கான இலக்கியப் பதிவு அரசியலை முன்வைத்தது. சங்ககாலம் தொட்டு குடும்ப, போர் மற்றும் பொருளுக்காகப் பிரிந்த தலைவன் வருகைக்காகப் பெண் காத்திருத்தல் மேன்மையாக கருத்தப்பட்டது. இக்காலகட்டத்தில் ஆரியப்படை கடந்த பாண்டிய நெடுஞ்செழியன் "கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பாலொருவனும் அவன் கண்படுமே" என்ற எதிர்ச் சொல்லாடலை முன்வைக்கிறார். சாதி, பால் என்ற ஏற்றத்தாழ்வுகளைக் கல்வியால் மட்டும் மாற்ற முடியும் என்ற கூற்று சங்க காலத்திலேயே எழுந்தது.

இளங்கோவடிகள் பொற்கொல்லனைப் பற்றி கூறும்போது, 'விலங்கு நடை செலவின்' என்கிறார். அரச மாபினரான இளங்கோவடிகளுக்கு, உடல் உழைப்பினரான பொற்கொல்லர் விலங்கிற்கு நிகராகவே கருதப்படுகிறார். மணிமேகலையில் சுடுகாட்டைப் பற்றி கூறும்போது வேறுபாடுகள் நிறைந்த சுடுகாட்டைக் காணமுடிகிறது. சித்தர்கள், சமய இலக்கியங்கள் முன் வைக்கும் கருத்தின் வழி ஒடுக்கப்பட்ட இடம் இலக்கியங்களில் மறைந்து கிடைப்பதை அறிய முடிகின்றது.

தமிழ் இலக்கண நூல்களுள் திவாகர நிகண்டு முன்வைக்கும் அரவாணியின் தோற்றம், இயல்பு, பேச்சு போன்றவற்றின் மீது கூறப்பட்டுள்ள பதிவுகள் முக்கியமானவை.

1. பெண்டகன் - பெண் தன்மை மிக்கவன்
2. பேடி - ஆண் தன்மையற்று பெண்ணுருவம் மிக்கவள்
3. நபுஞ்சகன் - ஆண், பெண் அல்லாதது
4. சண்டன் - பால் உணர்வற்றவன்

பொருள் தருவது மட்டுமின்றி, நச்சுப் பேச்சும் நல்லுரை ஓர்தலும், வார் அணி கொங்கையை வலிய நலிந்தும், இரங்கியும், அழுதும், அயர்ந்தும், அருவருத்தும் போன்ற குணங்களை நிகண்டு நூல் முன்வைப்பதன் வழி அக்காலச் சமூக அமைப்பில் அரவாணிகள் குறித்த பார்வையை அறியமுடிகிறது.

"ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன்" என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் ஆண், பெண், அலி மூவரும் சமம். இந்தக் கருத்தின் வழி அரவாணிகளின் அங்கீகாரம் வளர்ச்சியடைந்தமையக் காணமுடிகிறது. எனவே, கால மாற்றத்தில் அரவாணிகள் பற்றிய புரிதல் விரிவடைந்துள்ளமையை அறிய முடிகிறது. நடப்புக் காலத்தில் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அரவாணிகளுக்கான இட ஒதுக்கீடு, வேலை வாய்ப்பு என்று முன்னுரிமை கொடுத்தது கவனத்தில்கொள்ள வேண்டியதாகும். தற்போது தமிழ்நாட்டின் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அரவாணிகளுக்குக் கல்விக்கடன், அரவாணிகளில் சிறந்த எழுத்தாளருக்கு விருது, வீட்டாரால் ஒதுக்கப்படுபவர்களுக்கு 'அரண்' என்ற இல்லம் என்று அரவாணிகள் நலன்களுக்கான செயல்பாடுகளைக் காணமுடிகிறது. அரவாணிகள் என்பதற்கு மாற்றாகக் கலைஞர் அறிமுகம் செய்த

திருநங்கை, திருநம்பி போன்ற சொற்கள் பின்னர் புழக்கத்திற்கு வந்துள்ளன.

பொருளாதாரக் கட்டுமான பின்புலத்தில் தான் ஒரு சமுதாயமும் வலுவான அரசியல் ஆதிக்கம் பெறுகின்றது. சமூகத்தில் நிலவும் உற்பத்தி உறவுகள் ஆள்வோர்க்கும் ஆளப்படுவோர்க்கும் இடையிலான உறவுகளைத் தீர்மானிக்கின்றன. இப்பொருண்மைகளின் பின்னணியில் சங்ககால மூவேந்தர்கள், களப்பிரர், பல்லவர், சோழர், நாயக்கர், ஐரோப்பியர், டச்சுக்காரர், பிரஞ்சுக்காரர், குறுநில மன்னர்கள், பாளையக்காரர்கள் ஆகிய அதிகார மையங்களின் வழி இலக்கியங்களின் வடிவங்களும், வகைமையும், பாடுபொருளும் நகர்த்தப்பட்டிருக்கிறது என்பதை உய்த்துணர வேண்டும்.

அதிகார மையங்களின் வழி உருவான உடல்கள், பாரி, பேகன், அதியமான், அவ்வையார், நாயன்மார்கள், ஆழ்வார்கள் என்பன போன்றவர்கள் சமூக விழுமிய உருவாக்கத்தின் கூறுகள். சமகாலத்தில் கதைகளின் வழியாக அறத்தின் ஆதிக்க சக்தியாக சமயங்கள் ஊடுருவதைக் காணலாம். உலா, பரணி, பிள்ளைத்தமிழ், பள்ளு, கலம்பகம், தூது, குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியங்கள் தனக்கான அதிகார உடல்களையும் அடிமைக் கருத்தியலையும் முன்னெடுத்து நகர்ந்தன. அதிகார உடல் புனிதமாக்கப்படுவதும் அதற்கு இணங்க மறுக்கும் உடல் அல்லது அதிகார எதிர் நிலை உடல்கள் அடிமையாக்குவதும் சமய சங்கிலிகளால் இறுக்கிக் கட்டப்பட்டுள்ளன.

சமயங்கள், உற்பத்தி உறவுகளின் தாய்மையாகக் கற்பிக்கப்பட்டன. அதனால் தான் நானூறு ஆண்டுகளுக்கு மேல் செல்வாக்குப் பெற்றிருந்த சிற்றிலக்கியம், தமிழ் இலக்கிய வரலாற்றில் தனித்த இடம் பிடித்தது. தமிழ்விடு தூது இலக்கியக் கட்டமைப்பின் வழி தமிழ் மொழிக்கான அதிகார உடல் தேவைப்பட்டது என்பதை உணரவேண்டும். வேற்று மொழி அரசியல் சூழலில் சமஸ்கிருதம், தெலுங்கு ஆதிக்கம் பெற்றது. 'விறலிவிடு தூது' மூலம் நாயக்கர்கள் பெற விழைந்த பொருளியல் வளத்தை அறிய முடிகிறது. இதே காலத்தில் கிறித்தவர்கள் காட்டிய பொருளாதாரப் பின்புலத்தில் மக்கள் மதம் மாற்றம் அடைந்ததையும் காணமுடிகிறது. இந்தச் சூழலில்தான் மொழிக்கான அதிகார உடல் தேவைப்பட்டது. புலவர் யார் என்று தெரியாத 'தமிழ் விடு தூது' மூலம் தமிழ் மொழிக்கான அதிகாரப் பேச்சுக் கட்டமைக்கப்பட்டது. நாயக்கர் கால அரசு அதிகாரத்தின் மீது ஏற்பட்ட வெறுப்பு, வரி வசூலால் மக்கள் பட்ட அவதி, தெலுங்கு, சம்ஸ்கிருதம் போன்ற மொழிகளுக்குக் கொடுக்கப்பட்ட முன்னுரிமை போன்ற காரணங்களால் மக்கள் தன்னெழுச்சியாகத் தமிழ் மொழி குறித்த அரசியலைத் தமிழ்விடு தூது படைப்பின் வழி முன்னெடுத்தனர்.

சமூக உறவுகளையும் உற்பத்திகளையும் அதிகார மையங்கள் உருவாக்க முனைந்தாலும் சில நேரங்களில் மக்களின் எழுச்சியே வெற்றி பெறும் என்பதை வரலாறு பல இடங்களில் உணர்த்திச் செல்கின்றது. இந்த வகையில் சிற்றிலக்கியத்தின் மொழி, சமய அரசியல், பொருளாதார நிலை போன்றவற்றை இலக்கிய நுண் வாசிப்பின் வழி உய்த்துணர வேண்டும்.

## இருபதாம் நூற்றாண்டில் ஆணின் துய்ப்பு நிலமானப் பெண்ணுடல்

மதங்களின் பிடியில் சிக்கியிருந்த தமிழக நிலப்பரப்பு, பதினொன்றாம் நூற்றாண்டு அளவில் அரசியல் மேலாதிக்கப் போர்களில் சிதலைமடைந்து கிடந்தது. இக்கால கட்டத்தில் வைதீக சமயம் பெண்ணுடலைத் தீட்டு என ஒதுக்கியது. சோழப்பேரரசு, தஞ்சை பெரிய கோயிலுக்கு ஆடலில் சிறந்த நானூறு பெண்களைத் தேவரடியார்களாக உருவாக்கியிருந்தது.

குடும்பப் பெண்கள் கல்வி கற்காத சூழலில், தேவரடியார்கள் தமிழுடன் சமஸ்கிருதமும் கற்றிருந்தனர். இவர்களே சொந்தமாகப் பாடல் எழுதி பாடியும் வந்தனர். நுண்கலைகளில் வல்லவராகத் தேவரடியார் பெண்கள் சிறந்து விளங்கினர். ஏனைய பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்ட சூழலில், "சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்" என்ற பாடல் மூலம், நாவினாலும் மனதினாலும் தொடர்ந்து பயிற்சி செய்தால் கல்வியைக் கற்றுக்கொள்ளலாம் என்ற அவ்வையின் கூற்று மொழித் திணிப்பிற்குச் சவுக்கடி போன்றது. தேவையான இடங்களில் தேவையான மொழியைப் பயிற்சி செய்தல் போதுமானது. இதற்காகக் கல்விப்புலங்களில் கட்டாயமாக அதிக மொழிகளைப் பெருக்க வேண்டிய அவசியமில்லை. பெண் கல்வி மறுக்கப்பட்ட அன்றையச் சமூகத்தில் சமயங்களின்

உள் அரசியலை கட்டுடைத்த பெண் அவ்வையார் ஆவார்.

கி.பி. பதினைந்தாம் நூற்றண்டில் உத்தரநல்லூர் நங்கை என்ற பெண் கவிஞர் பாய்ச்சலூர் பதிகம் என்னும் நங்கை பதிகத்தில், 'ஓதிய நூலும் பொய்யே உடலுயிர் தானும் பொய்யே' என்ற கருத்தை முன்வைக்கிறார். வைதீக சமயங்கள் கட்டமைத்த அனைத்து ஆகமங்களும் சமூகத்தில் நிலவிய நோய் என்பதை நங்கையாரின் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. பிறப்பின் அடிப்படையில் உடல்களுக்கு ஏற்றத்தாழ்வுகளைக் கற்பித்த வைதீக சமயத்திற்கு எதிராகப் பெண்களும் சாதியும் என்ற எதிர்நிலை வாதத்தைச் சமகாலத்தில் நாம் முன்வைக்க வேண்டியிருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டைப் பொறுத்தவரை ஆண்களின் துய்ப்பு நிலமாக பெண்ணுடலைக் கட்டமைத்தது வைதீக சமயம். இரண்டு முக்கியமான கருத்தியலைச் வைதீக சமயம் சமூதாயத்தில் முன்வைத்தது.

1. பெண்ணுடல் தீட்டு; ஆணின் பாலியல் துய்ப்புக்கானவள் பெண்.

2. சாதி ஏற்றத்தாழ்வுகள்; ஆணுடல், பெண்ணுடல் இரண்டும் அதிகார மையங்களுக்கு அடிபணிய வேண்டும்.


சமூக அமைப்பில் கல்வி பெண்களுக்குப் பெரிதும் மறுக்கப்பட்டது. எனவே, பெண்ணுடல் ஆணின் துய்ப்பு நிலமாக மாறிய கருத்தியல், ஒருவகையான கட்டமைப்பு .இதனடிப்படையில், பெண்களின் குரல் எதார்த்தலிருந்து தொடங்கிக் கவிதை மொழிவரை பெண்கள் வெளியில் வர இயலயவில்லை. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருப்பத்தொன்றாம் நூற்றாண்டிலும் பெண்மொழிப் புனைவாக்கம் செய்யப்பட்டது. நவீன மொழி வளர்ச்சியில் பெண் சமய அரசியலில் இருந்து விடுபட முடியவில்லை. பெண்ணுடல் ஆணின் துய்ப்பு நிலமாகச் சமகாலத்திலும் நிலவுவது மட்டுமின்றிப் பெண் குரல் நசுக்கப்படுவதையும் காணமுடிகிறது. பெண் கவிஞர்களின் மொழி, நவீன வாசிப்பில் உயித்தெழும் சூழலில்கூடப் பெண்ணுடல் ஆணின் துய்ப்பு நிலமாகப் பரவிக்கிடப்பதைப் பார்க்க வேண்டும். பல நூறாண்டுகாலமாகக் 'கணவனின் கால்களைப் பெண் தொழுது வணங்கி, பெய் என்றால் மழை பெய்யும்' என்ற சிந்தனை மரபில் தொடங்கி, 'ஔவையின் மகள் நான், எனது மொழியை நானே பிரசவித்துக்கொண்டு வெளியே வருகிறேன்' என்ற பெண் மொழி வரை வளர்ந்தாலும் பெண்ணுடல் நசுக்கப்படுவது, சமூக அமைப்பில் தொடர்கின்றது.

**நிறைவாக**

ந.முருகேசபாண்டியன் விளிம்பு நிலை குறித்த விசாரணையில், 'தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்ட அறங்களும் விதிகளும் பாகுபாடுடைய சமூகத்தை உருவாக்கியது' என்ற கருத்தை முன்வைக்கிறார். பெண், சாதியினால் நசுக்கப்பட்டோர், கல்வியற்றோர் போன்றோர் ஒடுக்கப்பட்டவர்களாகச் சமூகத்தில் பரவியிருந்தனர். அரவாணிகள் சமூகத்தில் ஆரம்பத்தில் சிறப்புப் பெற்று, சமயங்களுக்குள் நசிவு பெற்று, பின்னர் வளர்ச்சி பெறுகிற நிலையை இலக்கியத்தில் காணமுடிகிறது. மொழி, சமயம், சமூக மதிப்பீடு, சித்தர் மரபு போன்றவை விளிம்புநிலை மீட்டுருவாக்கத்தின் காரணிகளாக அமைந்தன. ஆணுடல், பெண்ணுடல் மீது நிகழ்த்தப்பட்ட சமய அரசியல், விளிம்பு நிலை உருவாக்கத்தில் முக்கியக் காரணிகள் என்ற முருகேசபாண்டியனின் மதிப்பீடு, ஆய்விற்குரியது. சமணம், வைதீகம், உருவாக்கிய மக்கள் வாழ்வியல் முறை போன்றன விளிம்பு நிலையின் உச்சபட்ச வளர்ச்சிக்கு வழிவகுத்திட்டவை. விளிம்பு நிலை என்பது சமூக அமைப்பில் காலந்தோறும் உருவாகிக்கொண்டே இருக்கும். இவற்றின் ஊடாக மக்கள் வாழ முயற்சிக்கின்றனர். விளிம்புகளற்ற சமூக அமைப்பை உருவாக்குவதில் அரசியல் அதிகாரம், சமய அதிகாரம் எதிரெதிர் நிலையில் இருந்தால் மட்டும் சாத்தியமாகும். தற்காலத் தமிழ்நாட்டு அரசியலில் சமய அதிகாரத்திற்கும் அரசியல் அதிகாரத்திற்கும் இருக்கும் எதிர் நிலை வாதங்கள் இருப்பதுபோல் உலகம் முழுவதும் சாத்தியமானால் விளிம்புகளற்ற சமூக உருவாக்கம், குறைய வாய்ப்புண்டு; விளிம்புநிலையினரின் வலி குறைவாக வாய்ப்புள்ளது. விளிம்புநிலையினர் குறித்து கண்டறிந்திட 'பழந்தமிழ் இலக்கியத்தில் விளிம்புநிலையினர்' என்ற நூல் அடிப்படையானதாக விளங்குகிறது; தமிழாய்வுக் களத்தில் புதிய பேச்சுகளை உருவாக்கிட முயலுகின்றது.

●

**கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,**
**தியாகராசர் கல்லூரி மதுரை.**



# உயர் தமிழ்க்குடியின் உறவுக்காரர்

முனைவர் யாழ். சு. சந்திரா

ஏழை நடுத்தர மக்கள், தங்களுக்குக் கிடைக்கும் சிறுசிறு சலுகைகள், இனாம்கள், இலவசங்களில் திருப்தி அடைந்து விடுகிறார்கள். அடிப்படை உரிமைகளுக்காகப் போராட மறுக்கிறார்கள். ஒட்டகக் கதைதான் நம் மக்களின் கதை. ஏகப்பட்ட சுமையை முதுகில் ஏற்றிவிட்டு, வெறுமனே கொஞ்சம் வைக்கோலை எடுத்து வெளியில் போட்டதும், சுமையை இறக்கியாயிற்று என்று நினைத்துக் கொண்டு ஒட்டகம் வேகமாகப் போகுமாம். அது மாதிரிதான் நாமும் இருக்கிறோம். (ப.372)

மனித சக்தியை நல்ல முறையில் பயன்படுத்தக்கூடிய ஆற்றல் பொதுத்துறைக்குத்தான் உண்டு. பொதுத்துறையைப் பலவீனப்படுத்துவது முற்றிலும் தவறு. இந்தியா போன்ற ஏழை நாடுகளுக்கு பொதுத்துறை இன்றியமையாதது. பொதுத்துறை ஈட்டும் லாபத்தைக் கொண்டுதான் மக்களின் அடிப்படை வசதி, சுகாதார வசதிகளை அரசாங்கம் செய்ய முடியும். தனியார் மயப்படுத்தினால் அவர்கள் வேகமான Automation க்குச் சென்று விடுவார்கள். வேலை வாய்ப்புகள் பெரிதும் குறைந்துபோய்விடும். ஆகையால், இப்படிப்பட்ட கொள்கைகள் ஏற்கத்தக்கவை அல்ல.(ப.371)

*இவையெல்லாம் யாரோ பொருளாதார மேதை ஒருவரின் கூற்றுகள் அல்ல!*

சைவத்தையும் தமிழையும் போற்றிப் பாதுகாக்க வேண்டிய குருபீடத்தை அலங்கரித்த ஒரு துறவியின் சொற்கள்! ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? ஆம் அந்த அதிசயத் துறவிதான் அருள்நெறித் தந்தை; அற்புதத்துறவி குன்றக்குடி அடிகளார்.

கறுத்த உருவம்; பளிச்சிடும் வெண்ணீறு ஒளிரும் திருமுகம்; அந்தத் திருமுகத்தில் மின்னும் விழிகள்; மக்கள் நலனை மட்டுமே பேசும் திருவாய்; அதற்காக மட்டுமே செயற்படும் திருக்கரங்கள். சிந்தையும் செயலும் வாக்கும் வழியும் மக்கள் நலன் என்பதாகவே இருந்தது. ஒரு நூற்றாண்டுக் கால அம்மாமுனியின் எழுத முடியாப் பெருவரலாற்றை கிருங்கை சேதுபதி பதிப்பித்தும் தொகுப்பித்தும் தமிழ்த்தாய்க்குச் சூட்டிய ஒரு மலர்தான் இந்நூல்!

ஆதீனங்கள் பேசலாமா? பேசலாம்! எப்படித் தெரியுமா? சைவமடங்களின் குருமுதல்வர்கள் சிவனியக் கடவுளர்களின் திருவிழாக்களில் ஆசியுரை வழங்கலாம்! ஈரேழு பதினாலு உலகங்களையும் படைத்த கடவுளர்களைப் பற்றி, அக்கடவுளரைப் போற்றும் சமயம் பற்றி, அச்சமயத்தின் அடிப்படையான தத்துவம் பற்றி, தத்துவங்களின் விளக்கமாக அமையும் தோத்திரங்கள் பற்றி, அத்தோத்திரங்களைப் புனைந்த அருளாளர்கள் பற்றி பேசலாம். அவற்றால் பக்தர்களுக்கு உய்தி ஏற்படும் என்று ஆசியுரை வழங்கலாம்!

ஒரு நாட்டிற்கு மொழி ஜீவநாடி. ஒரு சமுதாயத்தை அழிக்க வேண்டுமானால் சமுதாயத்தை, நாகரிகத்தைச் சீர்குலைக்க வேண்டுமானால், அவர்களுடைய மொழியை முதலில் கட்டுப்படுத்த வேண்டும். பிறமொழி நுழைவு தமிழை அடக்கி ஒடுக்கி அழித்துவிடுமோ என்ற அச்சம் இருந்த காலத்தில், தமிழ்மொழிக் காப்பிற்காக ஒரு போராட்டத்தைத் தொடங்கினார். அந்தப் போராட்டத்தினாலும், தமிழ்நாட்டிலிருந்து வேறுபல சூழ்நிலைகளினாலும் தமிழ்மொழி காப்பாற்றப்பட்டது. இப்படிக் குறிப்பிடுகிறபொழுது, அகில இந்திய தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுகின்ற சிலர் தவறான கருத்தைக் கொள்ளலாம்.

அகில உறுப்புகள் சிதைய வேண்டுமென்பது அவசியம் இல்லை. ஓர் உருவத்தில் எல்லா உறுப்புகளும் வளமாக இருத்தல் வேண்டும். அதுபோலவே, தமிழ் நன்றாக இருந்தால்தான் தேசியம் வளமாக இருக்க முடியும். தமிழ்நாடு வளமாக இருந்தால்தான் அகில இந்திய வளம் நன்றாக இருக்கும். தமிழர்கள் நன்றாக இருந்தால்தான் அகில இந்திய ஒருமைப்பாடு வளர்ந்து வளம் பெற முடியும். எனவே, அரியணையமர்ந்து ஆட்சி செய்ய வந்த பிறிதொரு மொழியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தார் பெரியார். அந்தத் துறையில் தமிழைக் காப்பாற்றித் தந்த தந்தையாகக் காட்சி அளிக்கின்றார் பெரியார். அதற்காகவும் அவர்களுக்கு நம்முடைய நன்றி.(ப.279)

என்று பேசினார் அந்த அற்புதத்துறவி! எங்கே தெரியுமா? 22.09.1950 ஆம் நாள் திருச்சி பொன்மலைப்பட்டியில் நடந்த தமிழினத் தந்தை பெரியாரின் பிறந்தநாள் விழாவில் பேசியதன் ஒரு பகுதிதான் இது!

சைவத்திருமடங்களின் தலைவர்கள் பயணிக்கலாமா? பயணிக்கலாம்! பக்தர்கள் சுமக்கப் பல்லக்கில் பவனி வரலாம்! மகாசந்நிதானமாகப் பொறுப்பேற்ற பிறகு பல்லக்கில் ஏறாத அந்த மக்கள் துறவி இலங்கைக்கும், சோவியத் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் பயணித்தார். அந்நாடுகளில் அடிகள் கண்ட பொதுவுடைமைச் சித்தாந்தமும் உழைப்பின் உன்னதமும் 'குன்றக்குடி மாடல்' என ஒருங்கிணைந்த தன்னிறைவுத் திட்டமாக மிளிர்ந்தது. அதனால்தான் அப்போதைய பாரதப் பிரதமராக இருந்த இந்திராகாந்தி அவர்கள் திட்டக்குழுவின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில், 'which relates to the excellent work done by the VILLAGE PLANNING FORUM IN KUNDRAKKUDI' எனக் குறிப்பிடுகிறார். (ப.240)

இந்தக் கடிதம் பாரதப் பிரதமரின் செய்திமடல் என்ற குறிப்போடு நூலில் இடம்பெற்றுள்ளது.

எல்லாம் சரி சமயத் தலைவர்களின் செயல்கள் எப்படி இருக்க வேண்டும்? சமய வகுப்புகள், ஆதீனச் சீடர்களுக்கு உபதேசங்கள், அவர்தம் குடும்பத்தினருக்கான வாழ்வியல் சடங்குகள் முதலியவற்றை நடத்தி வைக்கலாம்!

ஆனால் நமது அருள்நெறித்தந்தை பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று சொன்ன வள்ளுவப் பேராசனின் படைப்பான திருக்குறள் வகுப்புகளை, நடத்தினார்கள். தான் சார்ந்த சைவ சமயத்தை மட்டும் உயர்த்திப் பிடிக்காமல், அதன் அடிநாதமான அன்பே சிவமாவது என்பதனை உணர்ந்தறிந்த அந்த மாமுனிவர் எல்லாச்சமயத்தினரையும் இணைத்து உருவாக்கிய அமைப்புதான் திருவருட்பேரவை

**எம்மதமும் சம்மதமாம் என்றே**
**சமா அதான சகவாழ்வு வாழ்வோம்!**
**உறவினை வளர்ப்போம்!அமைதியைக் காப்போம்!**
**வளமார் வாழ்வை நிலமிசைச் சமைப்போம்**
**இவையே நமது இனிய கோட்பாடுகள்!**

**(தொகுதி 14, ப.67)**

என்று கவிதை பாடித் தமது கோட்பாட்டை விளக்குகிறார், மதம் கடந்த அந்த மானுடநேயர்!

1955 ஆம் ஆண்டு அருள்நெறித் திருப்பணிமன்றம் தொடங்கி மக்களை ஒருங்கிணைத்த அந்த மாமேதை, 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு தெய்வீகப் பேரவையை உருவாக்கினார். இவ்வமைப்புகளின் கிளை அமைப்புகளாக ஆலய தர்மகர்த்தாக்கள் சங்கம், உயர்நிலைப் பள்ளிக்கழகம், மாணாக்கர் அருள்நெறிமன்றம், மாதர் அருள்நெறி இயக்கம், சொல்லரசர் சொற்பயின்றி மன்றம், அரிசன நல உரிமைச்சங்கம் எனப் பலவற்றை உருவாக்கி மக்களை வழிநடத்தினார், அந்த மாமேதை!

சொல்லுதல் யாருக்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல் என்ற திருக்குறள் வழியை வாய்ப்பாக்கிச் செயல்பட்ட அந்தச் செம்மலின் செயற்பாடுகள் பலவும் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

சமயத்தை வளர்ப்பதனையே தங்கள் பெரும்பணியாகக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டுச் சைவ மடங்களின் மரபில் சமுதாயத்திற்கும் பங்காற்றியவர் நூற்றாண்டுத் தமிழரான குன்றக்குடி அடிகளார். சைவமும் அச்சமயம் பற்றிப் பெரும்பான்மையாகப் பேசும் தமிழ்மொழியையும் பக்தியின் பெயரால் உயர்த்திப் பிடித்தவை சைவமடங்கள்! ஏராளமான சுவடிகளைக் காக்கும் ஆவணக் காப்பகமாகவும் தமிழ், வடமொழி, இசை, தத்துவம் உள்ளிட்டவற்றைக் கற்பிக்கும் பல்கலைக்கழகங்களாகவும் செயல்பட்ட மடங்கள் ஓர் வரையறைக்குள் இருந்து தமது சமயம் சார்ந்த மக்களுக்குத் தொண்டாற்றின. ஆனால், எல்லைகளைத் தாண்டி - மீறி உடைத்து வெளிக்கிளம்பியவர் அருள்நெறித் தந்தை!

'நான் வலியுறுத்துவதெல்லாம் உழைப்பையும் மனித நேயத்தையும் மட்டும்தான்!' என்று ஓங்கிக் குரல் கொடுக்கிறார், அந்த அருள்மாமுனிவர். இந்தப் புரட்சிக் குரலை அவர் சமயத்தின் அமைப்பிற்குள் இருந்து கொண்டே ஒலித்ததோடு மட்டுமல்லாது செயற்படுத்தியும் காட்டினார். இந்தப் பெருஞ்செயலுக்கான பேரூக்கம் எங்கிருந்து வந்தது என்பதனை ஓர் ஆய்வாக அமைத்து எழுதமுடியாகப் பெரு வரலாறு' எனத் தொகுத்துப் பதிப்பித்துள்ளார் கிருங்கை சேதுபதி. நான்கு இயல்களாக நூலினை அமைத்துக் கொண்ட ஆசிரியர் ஒவ்வொரு இயலின் தொடக்கத்திலும் அடிகள் பெருமான் பற்றிய தொகுப்பின் பொருண்மையைத் தனது எழுத்துரையாக அமைத்துக் கொண்டுள்ளார்.

முதல் இயலில் அடிகள் பெருமகனின் வரலாற்றுப்பதிவுகள் வரிசைகட்டி நிற்கின்றன.




**வெளியீடு: என்சிபிஎச், சென்னை | விலை: ரூ.320/-**

அவற்றுள் மதுரையிலிருந்து வெளிவந்த தமிழ்நாடு இதழின் துணை ஆசிரியர், எம்.எஸ்.பி. சண்முகம் எழுதிய வாழ்க்கை வரலாறு குன்றக்குடி அடிகளார் வாழ்ந்த காலத்திலேயே 1954-ஆம் ஆண்டு எழுதப்பட்டு, வெளிவந்த சிறப்புடையது. சைவசித்தாந்தப்புரவலர் தேவகோட்டை சேவு. மெ. மெய்யப்ப செட்டியாரும் பல்கலைப்புலவர் தெ.பொ.மீ ஆகியோரது அணிந்துரையுடன் கவிமணியின் வாழ்த்துப்பாக்களுடன் அமைந்துள்ள இந்த வாழ்க்கை வரலாறு தனிப்பட்ட ஒருவரது வரலாறாக மட்டுமல்லாது, அக்காலத் தமிழ்ச் சமூகத்தின் தேவையைப் பூர்த்தி செய்த சமுதாயச் சிற்பியின் வரலாறாகக் காலப் பெருவெளியின் சுவடாக விரிகிறது.

மிகச் சாதாரண குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளுக்காகப் பால் ஊற்றிப் பணி செய்த அரங்கநாதனின் ஆளுமை வளர்ச்சியும் தூய தொண்டும் எம்.எஸ்.பி. சண்முகத்தின் கைவண்ணத்தில் மிளிர்கிறது.

தொகுப்பில் பெரும்பான்மையும் சுவைமிக்க பகுதிகள் இடம்பெறுவதுண்டு.

*ஆனால், பதிப்பாசிரியர் தேவையானவற்றை இதுவரை வாசிப்பிற்கு எட்டாதவற்றை மட்டுமே இத்தொகுப்பில் கொடுத்துள்ளமை பாராட்டிற்கு உரியது. தமிழக அரசால் நாட்டுடமையாக்கப்பட்ட அடிகளாரின் ஆக்கங்கள் பலவும் மணிவாசகர் பதிப்பகத்தால் 16 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. அந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளவற்றை தவிர்த்துள்ளார்.*

*அரங்கநாதனின் பால் ஊற்றும் பணியை,*

**பிற்காலத்தில், நாட்டவர் வாழ்வில் 'பால் வார்க்கப்' பிறந்த இம்முத்து, அந்தச் சின்னஞ்சிறு வயதில் தன் வீட்டுப்பாலை அண்ணாமலை நகரத்து அறிஞர் வீடுகளுக்கு ஊற்றி மகிழ்ந்தது.பள்ளிப் படிப்புடன் பால் வழங்கும் திருப்பணி. (ப.86)**

*என்று வருணிக்கும் திருவண்ணாமலை ஆதீனப்புலவர் கதிரேசன் தூயநெறித் தொண்டரின் செயல்பாட்டுக்கான விதத்தினை விளக்கும் விவரணம் இத்தொகுப்பின் பதிவுகளில் இடம்பெறுகிறது. அவர்தம் வாழ்வுப்பாதையின் பல்வேறு நிகழ்வுகளையும் விவரித்து குன்றக்குடி வந்து சேர்ந்த செய்திகள் உள்ளிட்டவை முதல் இயலின் சுவடுகளாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.*

*இயல் இரண்டில், அடிகள் பெருமான் உருவாக்கிய தொண்டு அமைப்புகளின் சுவடுகள், ஆன்மீகம் வளர்க்கும் அருள்வரலாறு என்ற தலைப்பில் இடம்பெறுகின்றன. இப்பகுதியில் சுவடுகள் 7 என்ற எண்ணிடப்பட்ட ஏன் திருவருட்பேரவை என்ற விளக்கத்தில் சமயங்கள் அனைத்திலும் ஒரே கடவுள்தான் நின்றருள் செய்கின்றான். சமய வேறுபாடுகள் இறைவன் அருளிய வகையாலும் நாட்டமைப்பாலும் காலத்தின் வேறுபாட்டாலும் அனுபவ வாயில்களாலும், ஏற்பட்டனவேயாம். இந்த*

*வேற்றுமைகள் ஆக்கந்தருவன; உயர்வைத் தருவன என்பதைக் கவனத்திற் கொள்வது நல்லது. இந்திய நாட்டில் விளங்கும் ஒவ்வொரு சமயமும் தத்தம் தனித்தன்மையை இழக்காமல் வளரவும், மன்பதைக்குத் தொண்டு செய்யவும் திருவருள் பேரவை துணை நிற்கும்; அரண் செய்யும்; எக்காரணத்தை முன்னிட்டும் சமய வெறுப்பையும் பகையையும் உண்டாக்க எடுக்கப்படும் எந்த முயற்சிகளையும் தடுத்து நிறுத்தும். இத்துறையில் தேவையெனில் அறவழிப் போராட்டங்களையும் நிகழ்த்தும். நாடு முழுவதும் திருவருள் பேரவை அமையுமானால் மதவெறி-மதக் கலவரங்கள் என்கிற நச்சுக் காய்ச்சல் மனித உலகத்தைத் தீண்டாமல் பாதுகாக்க உதவும்.(ப.182)*

*என்று விவரிப்பது காலங்கடந்தும் நமது தேசத்தின் தேவையாக உள்ளதே!*

*தமிழ்ச் சமூகத்தின் மேம்பாட்டை மட்டும் தமது இலட்சியமாகக் கொண்ட சமுதாயப் போராளி அடிகளாரின் ஆளுமைத் தொடர்புகள் மனிதம் பேணிய புனித வரலாறாக இயல் மூன்றாக விரிகிறது. வினோபாஜியுடன் அடிகளாரின் உரையாடல் தமிழ்த்தேசியத்தின் சான்றாக ஒளிர்கிறது! கடவுள் மறுப்புக் கொள்கையாளரான தமிழினத் தலைவர் பெரியாருடனான அடிகளாரின் உறவு தமிழன மேம்பாட்டை உள்ளடக்கிய மானுட உயர்விற்காக என்பதனைத் தொகுப்பின் சுவடுகள் வெளிப்படுத்துகின்றன. ஆகவே தான், அன்றைய முதல்வர் கலைஞர் துறவியர் பெருமானை மேலவை உறுப்பினராக்கிச் சாதனை படைத்தார் எனச் சான்று பகருகிறார் நூலாசிரியர். அதனால் தான், அறிஞர் அண்ணா மறைந்த போது,*

**அண்ணா அண்ணாவென் றழைத்திடவே வாழ்ந்துயர்ந்த எமதருமை அண்ணா எங்குற் றனைநீயே நின்னை வளர்த்த தமிழ்மறந்து சென்றனையோ! (ப.300)**

*என்று இரங்கற்பா பாடினார் அந்தக் காவியுடைக் கவிஞர்!*

*தமிழ்ச் சமூகத்திற்கு மட்டுமின்றி மானுட சமுதாயம் முழுமைக்குமான அந்தத் தொண்டரின் தூயநெறியை என்றும் நின்று வழிகாட்டும் வரலாறு என்ற தலைப்பில் நான்காவது இயலாக்குகிறார், கிருங்கை சேதுபதி! 'காந்தீயம் என்றால் அரசியல் இல்லை அன்பியல், அருளியல், சமுதாய இயல்' (ப.343) என்ற அடிகள் பெருமானின் விளக்கம் காந்தியப் புரிதலின் அடிநாதமல்லவா? இப்பகுதியின் பெருஞ்சிறப்பு அடிகளாரது வாழ்வின் ஆகச்சிறந்த தருணங்களின் புகைப்படத் தொகுப்பு!*

*சமயத்தின் கடுமையான சம்பிரதாயங்களில் இருந்து கொண்டு கனிந்த இதயத்தோடு செயற்பட்ட சிறப்பைக் கூறும் கவிஞர் சிற்பியின் எழுத்துரை நூலின் மகுடம்.*

*தேடித் தேடி நூலாசிரியர் தொகுத்துப் பதிப்பித்துள்ள இந்நூலின் சிறப்பு வாசிக்கிற நம்மையும் தேட வைக்கிறது; சுவடுகளின் வழியில் செல்ல வைக்கிறது. இதுதான் நூலின் வெற்றி!*

●

**கட்டுரையாளர்: இணைப்பேராசிரியர் & தலைவர்,**
**முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,**
**ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த),**
**மதுரை.**

கட்டுரை



வெளியீடு: காவ்யா | விலை: ரூ.480/-

# ஏழு பனைஓலையிலெ எழுதினாலும் தீராது



**பேரா சு.செல்வகுமாரன்**

அ.சங்கரியால் எழுதப்பட்டுள்ள வருக்கெச்சக்கெ புதினம் தமிழகத்தின் தென் எல்லையான குமரி மாவட்டத்தின் மேற்குப்புறம் சார்ந்த நிலவியல் சூழலில் ஒரு இந்து நாடார் சமூகக் குடும்பத்தின் வாழ்வியலை அறிமுகம் செய்வதின் வழி புதினம் தன் பயணித்தலின் வெற்றியைக் கண்டுள்ளது என்றே சொல்ல வேண்டும்.

'பத்மா' எனும் கதாபாத்திரத்தை மையமாகக் கொண்டு பேசப்படும் இந்தப் புதினத்தில் பத்மாவினுடைய தந்தையாகச் செல்லையாவும், தாயாக அன்னலட்சுமியும் விளங்குகின்றனர். பத்மாவின் சகோதரிகளாக ரோசாவும், ஷீலாவும், அண்ணனாகச் சிதம்பரமும், தங்கைகளாக மாலாவும், லலிதாவும் குடும்பம் சார்ந்த கதாப்பாத்திரங்களாக இயங்குகின்றனர். இத்தோடு முதன்மைப் பாத்திரமான பத்மாவின் உறவினர்கள், நண்பர்கள், தோட்டத்தில் வேலை செய்பவர்கள் என கதையினை யதார்த்தமாக நகர்த்திச் செல்கின்ற பல துணைமைப் பாத்திரங்களோடும் புதினம் இயங்குகின்றது.

இந்தப் புதினத்தைப் பொறுத்தமட்டில் வெறுமனே ஒரு புனைவாக்கம் என்று சொல்வதைவிட, வட்டார எழுத்துமுறை சார்ந்த அல்லது இனவரைவியல் எழுத்து முறை சார்ந்த அல்லது சுயகதை சொல்லல் முறை சார்ந்த ஒரு புதினம் என்று சொல்வதற்கான அடிப்படைப் பண்புகளை இது பெரிதும் கொண்டுள்ளது என்றே சொல்லலாம். மானுட வாழ்வில் ஒவ்வொருவரின் வாழ்வும் அல்லது அந்த ஒவ்வொருவரின் வாழ்வின் பின்னணியாக இயங்குகின்ற குடும்பமும் வேறுபட்ட சூழல்களால் கட்டமைவதனைக் காணலாம். அந்த வகையில் வருக்கெச் சக்கெ புதினத்தின் முதன்மைப் பாத்திரமான பத்மாவின் குடும்பப் பின்னணி அவளது தந்தை வழி தாத்தாவான பொன்னு பூ என்பவரால் இனம் காட்டப்படுகிறது. தனது தாத்தாவைப் பற்றிப் பத்மா சொல்கிற போது,

"பொன்னு பூ, அப்பாவோட அப்பா பெயர். அவர் அந்த ஊர் குட்டி ராஜா மாதிரி. இவரு தன்னோட பெரிய பொண்ணுக்குச் சம்மந்தம் பண்ணினது ஒரு பண்ணையார் என்கிறதுக்காக சாரட்டு வர, மேலெ வெளெயிலேருந்து கீழெ வெளெவர ஆறடி ரோடு வெட்ட அந்த சித்திரைத் திருநாள் மகாராஜா அனுமதி வாங்கி செஞ்சிருக்காரு.

பெரிய பொண்ணுக்கு சாரட்டுன்னா, இரண்டாவது பொண்ணுக்கு பிளசர் கார்

வந்திருக்கு. மூணாவது பொண்ணு கலியாணத்துக்கு பிளசர் கார்களே அணிவகுத்திச்சாம். இப்படி மூணு பொண்ணுகளையும் மூணு பணக்கார மாப்பிள்ளைங்களுக்கு கட்டிக் குடுத்தவரு" *(ப-5)*

என்பதாக அவரது வளமை பேசப்படுகிறது. இத்தகையதானதொரு பொருளாதாரப் பின்னணி இருந்திருந்தாலும் அவர் செய்த ஆடம்பரச் செலவுகள் அவரைப் பெரும் கடன்காரனாக்கிக் குடும்பம் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடுகிறது. இத்தகைய சூழலில் பொன்னு பூ மனம் தளர்ந்து இறந்து போகிறார். அவரது அஸ்தியினை வணங்க தலைகுனிந்த அவரது மனைவியும் அஸ்தியிலே விழுந்து இறந்துபோகிறார். இந்நிலையிலிருந்து பத்மாவின் தந்தை செல்லையாவின் பயணம் புதிதாய்த் தொடங்குகிறது என்றாலும் பத்மாவின் தந்தை செல்லையாவின் தொடக்ககாலம் வளமையானதாக இருந்திருந்ததால் அவர் கல்வி, வர்மம், சோதிடம், சிலம்பம் என்பவற்றோடு தமிழ், ஆங்கில மொழிப்புலமையும், நேர்மை நியாயத்தைத் தன்னகத்தே கொண்ட தனித்துவமான ஒருவராகவே புதினம் பெரிதும் இனம் காட்டுகின்றது.

ஆக பத்மாவின் பாரம்பரியமானது பொருளாதாரம், சமூகமதிப்பு என்பதான உயர் குடும்பத் தன்மையுடைய பின்னணியைக் கொண்டிருந்தாலும் முதல் தலைமுறையின் வாழ்வு தளர்ச்சியிலேயே முடிவுறுகிறது. அந்த கண்ணியில் இருந்து உருவாகும் செல்லையா, தான் விரும்பிய அன்னலட்சுமி என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு இருவரின் கூட்டு உழைப்பினாலும், குழந்தைகளின் ஒத்துழைப்பினாலும் தலை நிமிர்கிறது. எனினும் செல்லையா குறித்த பல பதிவுகள் அவரை ஒரு மகோதனமானவராய்த்தான் புதினம் இனம் காட்டுகின்றது. அறவழி நடத்தல், பக்தி, தேசபக்தி, வாசிப்பு, பிறருக்கு வழிகாட்டுதல், துயரங்களை எதிர்கொண்டு விடுதலை நோக்கிப் பயணித்தல் என அவை புதினமெங்கும் நீட்சி அடைகின்றது.

தனது நிலம் சார்ந்த கடும் உழைப்பு, வியாபாரங்கள், சிறந்த குணங்களென பலவற்றாலும் உயர்ந்த செல்லையாவின் குடும்பவாழ்வும் பின்னாளில் சக மனிதர்களின் கெடு செயல்களாலும், அன்றைய அரசு கொண்டுவந்த பட்டணம் கால்வாய் திட்டம் அவரது தோப்பின் வழியாக வந்ததன் விளைவாகவும் பேரிழப்பைச் சந்திக்க நேரிடுகிறது. தொடர்ந்து தனது முதல் இரண்டு பெண் மக்களின் திருமணத்தைச் சிறப்பாக நடத்திட அதனால் ஏற்படும் பொருளாதாரப் பின்னடைவும், திருமணத்திற்குப் பிறகு தனது மகன் கேளாதார் பேச்சைக் கேட்டு தனிக் குடும்பமாக மாறிக்கொள்வதாலும் குடும்பம் பொருளாதாரம், மன அமைதியின்மையினால் தளர்ச்சியுறுகிறது.

புதினம் பொது வாழ்வியல் சார்ந்து பேசினாலும் குறிப்பாகக் குமரி மாவட்ட இந்து நாடார் சமூகம் சார்ந்த வாழ்க்கை வட்டச் சடங்குகளையும், அவர்களின் நிலம் சார்ந்த கடின உழைப்பையும், பனை உணவுசார் தொழில்நுட்பங்களையும் அதற்குப் பரிசாக, மண்சார் விளைச்சல்களை வாரி வழங்கும் இயற்கை அன்னையின் செயல்பாடுகளையும் புதினம் காட்சிப்படுத்துகிறது. வகை வகையான கிழங்குகள், காய்கறி வகைகள் மா, பலா, வாழை எனப் பழவகைகள், செடி கொடிகள், மரங்கள், முயல், ஆடு, மாடு, கோழி என விலங்குகள் மற்றும் பறவைகள் குறித்த சித்திரிப்புகள் மிகப் பிரமாண்டமாகப் புதினத்தில் எடுத்தாளப் பெற்றுள்ளது. காச்சில் கிழங்கின் விளைச்சலைப் பற்றிப் பதிவு செய்கிறபோது,

"அந்தக் காச்சில் கிழங்கு வள்ளியெல்லாம் பட்டுப் போயிருந்துச்சு அதெ மொதல்லெ பிச்சாக்கத்தியாலெ அறுத்து பெறகு மூடு இருக்கிற எடத்திலே நாலு பக்கமா பிக்காசியாலெ வெட்டி மண்ணெ கையாலே வாரி பக்காவாட்லெ போட்டான். பெறவு கொஞ்சம் கொஞ்சமா வெட்டுகத்தியாலே மண்ணெக் குத்தி வார வார பெரிய பண்ணிக் குட்டியாட்டும் அந்தக் கெழங்கு ஒண்ணரையடி ஆழமா பருத்து இருந்துச்சி. அவ்வளவு பெரிய கெழங்கப் பார்த்ததும் கொச்சப்பாவு அசந்து போய் இங்க வாங்க வந்து பாருங்கள் என்று ஆச்சரியத்தோடு கத்தினான். அப்பாவும் மகளும் ஓடிப்போய் பார்த்து அடேயெங்கப்ப எவ்வளவு பெரிசு? வாயெப் பெளந்தாள் பத்மா.

சின்னதா ஒரு கெழங்கு நட்டதா இவ்வளவு பெரிசா வளந்திருக்கு? என்று ஆச்சரியப்பட்டு நின்றாள்." *(பக் -187-188)*

மேலும், முதலாளி, தொழிலாளிகளிடையே காணப்படும் வேறுபாடற்ற சமத்துவ நடைமுறைகளையும் பனையேறும் தொழில் செய்யும் பாலையா மற்றும் தோட்ட வேலை செய்யும் கொச்சப்பாவு கதாபாத்திரங்கள் நமக்கு புலப்படுத்துவனாக உள்ளன. இவை குமரி மாவட்டத்துக்கான தனித்தன்மையாகக் கூட இருக்கலாம் என்றே தோன்றுகிறது. இந்தச் சமத்துவத்திற்கு அய்யா வைகுண்டசாமியின் செயல்பாடுகளின் தாக்கமும் ஒரு காரணமாகலாம்.

மேலும், ஈத்தவிளை அம்மாவி அதாவது அத்தை, அம்மும்மு அதாவது பாட்டி உள்ளிட்ட பல கதாபாத்திரங்களின் வழி உறவின் ஆழங்களும் ஆங்காங்கே இனங்காட்டப்பட்டுள்ளது. ஓரிடத்தில் பாட்டியைப் பற்றி குறிப்பிடுகிற போது,

"இந்த அம்மும்மெ கொணத்தெ அம்மாகிட்டப் பார்க்கலாம். இருக்கிறதெ வச்சு வாழுற கொணம், தன்னாலெ முடிஞ்சவரெ உழச்சு சந்தோஷமா, அன்பா அரவணச்சு குடும்பத்தெக் கொண்டு போறதுன்னு அடிக்கிக்கிட்டே போகலாம்." *(ப-218)*

ரோசா அக்காவின் திருமணத்தில் மாப்பிள்ளையின் உயரம் மற்றும் நிறம் உள்ளிட்டவற்றின் மூலமாகவும், இன்ன பிற நிகழ்வுகளின் வாயிலாகவும் பெண் மனம் சார் உளவியலைப் பத்மாவின் மூலமாக அ.சங்கரி முன்னெடுத்தள்ளமையும் கவனத்திற்குரியது. ஒரு முறை அடுத்த வீட்டில் வசித்து வந்த முண்டத்தா மூத்தம்மெ இறந்த போது பத்மாவோ அவளது சகோதரிகளோ மூத்தம்மையைச் சென்று பார்க்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டிருந்தது. அது அந்தக் காலகட்டத்தின் சூழல். அதனைப் பத்மா மூலமாக உரையாடல் செய்யும் அ.சங்கரி,

"இரண்டு வீடுகளுக்கு நடுவே ஒரு சுவருதேன். அவுங்க தொழுவத்திலேருந்து கூப்பிட்டா கேட்கும் தூரம். நம்ம தொழுவத்திலே நிக்கிறவங்களெப் பார்க்கவும் முடியும். இப்படியாப்பட்ட நெருக்கமுள்ள மூத்தம்மே இப்ப இல்லெ. இனிமேலே பார்க்கவே முடியாது. இல்லக்கா. நமக்கு கடைசியா பார்க்கக்கூட முடியில்லெ. என்ன துர்பாக்கியம். ஒரே சுவருக்கப்புறம் போக முடியா சூழல்ல இருக்கிறோமே அக்கா. நம்ம மூத்தம்மெ இப்படி வேகமா போயிடுச்சேனு கண்ணீர் சிந்த அக்காவிட்டெ சொல்லி அழுதாள், பத்மா. ரோசா அவ ஆதங்கத்தெச் சொல்லத் தொடங்கினா." *(ப -270)*

என்பதாக அந்தக் காலகட்டத்தில் பெண் சமூகத்தைப் பற்றிக்கிடந்த புற இருளினை, அவலத்தைப் புதினம் அடையாளப்படுத்துகின்றது

காதல், திருமணப் பேச்சுகள், குடும்பச் சிக்கல்கள், கல்வி நிறுவனங்களின் தொலைவு போன்ற எல்லா விதமான தடைகளையும் தாண்டி பத்தாம் வகுப்பினை முடித்து, பிரீ டிகிரியினையும் முடித்து மாநிலம் கடந்து திருவனந்தபுரம் சென்று முதுகலைத் தமிழ் பயின்றதோடு அங்கேயே முனைவர் பட்டம் வரையிலுமாக படித்துக் கல்லூரிப் பேராசிரியராக உயரும் நிலையினைக் காணமுடிகிறது. இது நாடார் சமூகப் பெண் ஒருவரின் தனித்த அல்லது ஒட்டுமொத்த பெண் சமூகத்தின் வளர்ச்சிக்குக் கல்வியின் அவசியம் அடையாளம் காட்டப்படுவதாக உள்ளது.

பல்வேறு விஷயங்களை இந்தப் புதினம் பேசியிருந்தாலும் மனைவி, மக்கள் என ஒரு ஆலமரமாய், ஒரு கூட்டுக் கிளியாக வாழ்ந்த செல்லையா குடும்பத்தில் குறிப்பிட்ட காலகட்டத்தில் முதல் மூன்று பெண்மக்கள் திருமணமாகி வெளியே சென்று விடுகிறார்கள். ஆண்மகனும் திருமணமாகித் தன் மனைவி மக்கள் எனத் தனிக் குடித்தனம் அமைத்துக் கொள்கிறான். அடுத்த திருமணத்தை எதிர்கொள்ள வேண்டிய பத்மா கல்வியையும் காதலையும் கைக்கொண்டபடி திருச்சி வயலூரில் வேலை பார்த்தபடி தன் அறவழிப் பயணத்தை மேற்கொள்கிறாள். கடைசி மகள் லலிதாவின் திருமணம் பத்மாவின் தனித்த கவனிப்பு இருந்தாலும் "ஏழையாய் பிறந்தாலும் இளையவராய் பிறக்கக்கூடாது" என்பதற்கேற்ப சூழல்கள் அமைகிறது.

மீதமிருந்த சொத்துக்களில் முதன்மையானவை மருமகளின் தூண்டுதலாலும், செல்லையாவின் நேர்கொண்ட அறவழிப் பயணித்தலாலும் மகன் சிதம்பரத்தின் கட்டுப்பாட்டிற்குள் செல்கிறது.

"எல்லா சொத்துக்களையும் உயில் எழுதி வைத்துவிட்டு வந்து கையிலிருந்த பொம்மையைப் பறிகொடுத்த குழந்தை மாதிரி கண்ணில் நீர்நிறைந்து நின்றதை மனைவியும் மகளும் பார்த்தனர்." *(ப -377)*

ஆக, வீட்டின் ஒட்டு மொத்த அதிகாரத்தையும் கைக்கொண்டு திரிந்த தந்தை, தாயின் அதிகாரம் பிடுங்கப்பட்டுக் காற்றில்லாத பலூனைப் போலச் சமூக மதிப்பற்ற மனிதர்களாக மாற்றப்படுகின்றனர். எத்தனை வேலைகள் இருந்தாலும் மகிழ்ச்சியால் பூ மரமாய் பூத்திருந்த வீடு வெறுமனே கட்டைச் சுவர்களாக மகிழ்வற்ற நிலையில் பொலிவிழந்து போகிறது. இந்தப் பேரவலத்தை நூலாசிரியர் அ.சங்கரி இனம் காட்டும் இடங்கள் முக்கியமானவையாகும்.

"வீட்டின் முன்பக்கம் இருந்த அப்பாவின் ஈசிச்செயர் பின்பக்க அறையில் கிடந்தது" *(ப-367)*

"மனித வாழ்வில் அடிமேல் அடி விழுந்தாலும் தாங்கிக் கொண்டு போக வேண்டிய நிர்ப்பந்தம். எதையும் எளிதாகக் கடந்து போனாலும் உள்ளுக்குள் ஏற்படும் காயங்கள் ஆழமானவை" *(ப-374)*

இங்குப் புதிது புதிதாய்ப் பரிணமிக்கும் புதிய தலைமுறைகளின் உருவாக்கத்தில் பல தாய் தந்தையர்கள் உணர்வுகளால் சாகடிக்கப்படுவதையும், கால ஓட்டத்தில் வாழ்வு ஒவ்வொருவரையும் அதன் விருப்பிற்கேற்பத் தூக்கி வீசுவதில் மனிதன் ஒன்றுமில்லாதவனாக ஆகிப்போவதையும் ஒருவித கழிவிரக்கத் தன்மையோடு அ.சங்கரி புதினத்தில் தன் எழுத்துக்களின் மூலம் பதிவு செய்திருக்கின்றார்.

●


**கட்டுரையாளர்: பேராசிரியர்,**

**மாநிலக் கல்லூரி, சென்னை.**

கட்டுரை





# வரலாறு சொல்லலும் வரலாற்றைச் சொல்லலைப் பேசலும்




**சுஜா சுயம்பு**

தமிழ்ச்சமூக அடையாளத்தை மறுவாசிப்பு செய்து மீள்கட்டமைப்பு செய்வதற்கான தரவுகளைத் தேடித் தொடர்ந்து பயணித்துவரும் தமிழியல் ஆய்வாளர்களின் வரிசையில் முன்வைத்து எண்ணத்தக்கவர்; பொற்காலங்களையும் இருண்ட காலங்களையும் பற்றிய முழுமையான புரிதலைத் தமிழ்ச்சமூகத்துக்குத் தந்த இவருக்கு அறிமுகம் தேவையில்லை. கோவில்களும் நிலங்களும் சாதியக் கட்டுமானத்தின் வேர்களாக இடைக்காலத்தில் செயல்பட்டதைத் தோலுரித்துக் காட்டியவர்; ஊகங்களின் அடிப்படையில் கற்பனையாகப் புனையப்பட்ட, புனையப்படுகிற வரலாறுகள் பற்றிய அறிவார்ந்த கேள்விகளை எழுப்பிக் கொண்டு மாற்று வரலாற்றை உருவாக்கும் முயற்சியில் தொடர்ச்சியாகச் செயல்பட்டு வருபவர் ஆய்வறிஞர் பொ.வேல்சாமி.



தொன்மையான பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிற தமிழ் மொழியின் ஆக்கங்கள் பிற்காலச் சமூகத்திற்குக் கையளிக்கப்பட்டமை பற்றிய உரையாடலைப் பதிப்பு வரலாறு என்கிற வகையில் ஆய்வறிஞர் பேசி வருகிறார். பதிப்பு வரலாறும் அது சார்ந்த இயங்கும் அரசியலும் தமிழியலில் தவிர்க்க இயலாதது. தமிழை இற்றைப்படுத்தல் (Update) முயற்சியில் முதலில் ஈடுபட்டவர்கள் மேலைநாட்டு ஆய்வாளர்கள். மொழியைக் கற்றல்-கற்பித்தல் சார்ந்து இயங்கிய அவர்கள் சமகால சமூகத்தினருக்கும் தமிழைக் கொண்டு செல்லும் பணியைச் சில நோக்கங்களை முன்வைத்துச் செயல்படுத்தினார்கள். தமிழ் பிராமி எழுத்துகள், சிந்துவெளிக் குறியீடுகள், லெமூரியா கண்டம் முதலான முக்கியமான கருத்தியல் தொடர்பாக நிலவும் பொய்யையும் வழுவையும் வெளிச்சமிட்டுக் காட்டிய இவரது நூல்கள் தமிழியல் ஆய்வு வெளியில் புதிய அசைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

12 ஆண்டுகளாக ஆய்வறிஞர் பொ.வேல்சாமி முகநூலில் அவரது நண்பர்களோடு நிகழ்த்திய உரையாடல்களின் அச்சுவடிவமாக மூன்று நூல்கள் தமிழியலுக்குப் புதுவரவாக வந்துள்ளன. இந்த முயற்சியை அவரது ஏற்புடன் தமிழ்மாணவன் கா.விக்னேஷ் செய்துள்ளார். பழந்தமிழ் நூல்கள் நவீனமான வரலாறு, சோழர் ஆட்சியிலும் அடிமைகளா? இந்தியத் தத்துவமும் தமிழ்த் தத்துவ மரபும் என ஆய்வறிஞரின் உரையாடல்களுக்கு வடிவம் தந்திருக்கிறார் பதிப்பாசிரியர் விக்னேஷ். முதல் நூலில் மொழி, இலக்கியம் குறித்த பதிவுகளும், இரண்டாம் நூலில் வரலாறு பற்றியனவும் மூன்றாம் நூலில் அரசியல், பண்பாடு, தத்துவம், இரங்கல் மடல்கள், பிற ஆகிய பகுதிகளுமாக எட்டு பகுதிகளில் 348 பதிவுகளை வகைப்பாடு செய்து தந்திருக்கிறார் விக்னேஷ்.

இந்த மூன்று நூல்களில் உள்ள பதிவுகளின் அடிப்படையைக் கீழ்வருமாறு தொகைப்படுத்தலாம்.

- தமிழ்ச்சமூகத்தின் நினைவுவெளியிலிருந்து கரைந்து, மறைந்து போன நூல்களை, வழக்கங்களை, போக்கை மீண்டும் ஆய்வு வெளிச்சத்திற்கும் பொதுவெளிக்கும் கொண்டு வரும் முயற்சியை மேற்கொள்ளுதல்.
- சமகாலத்தோடு தொடர்புடைய ஒரு பொருண்மை அல்லது நிகழ்வோடு ஒப்பிடத்தக்க அதன் இறப்பு- நிகழ்வு- எதிர்வுகளைப் பற்றிப் பேசுதல்.
- புரிதலின்றி விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படும் சில ஆளுமைகள் அல்லது செயல்பாடுகள் பற்றிய விளக்கங்கள் தருதல்.
- வலுப்பெற்றுவிட்ட பொய்களைத் தனது ஆய்வுநிலைப்பட்ட அவதானிப்புகள் மூலம் மறுவாசிப்புக்கு உட்படுத்தி நுட்பமான வினாக்கள் மூலம் பொதுக் கவனத்திற்கு உட்படுத்துதல்.
- சமகால அரசியலைச் சமய, மத, மொழி, இன அரசியல் குறித்த உரையாடல் மூலம் சமூக இயங்கியலை மக்களின் புரிதலுக்குக் கொண்டு செல்லுதல்.

மேற்குறிப்பிட்ட இம்மூன்று நூல்களும் சிறந்த வாசிப்பு அனுபவத்தை மட்டுமல்ல நூலின் அகப்பொருள் சார்ந்த அதன் தரவுகளைச் நோக்கி நம்மைத் தேடிப் பயணிக்க வைக்கும் அரிய ஆய்வுக் கருவூலங்களாக இருக்கின்றன. *'A well-judging man will open his trunk-line of study in such a direction that while habitually adhering to it, he may enjoy a ready access to such other fields of knowledge as are most nearly related to it'* என்ற டேவிட் ஃபிட்ஸ்ஜேம்ஸ் ஸ்டீபன் (James Fitzjames Stephen) கூற்றின்படி நூலின் வாசகர்களை இயங்கச் செய்பவை ஒவ்வொரு பகுதிகளும்.

பொ.வே. அவர்களின் நூல்வழி அறிமுகம் முதுகலைக் கல்வியிலேயே எனக்குக் கிட்டியது. ஆனால் கிறிஸ்து மார்க்கம் இந்து தேசத்தில் விருத்தியான சரித்திரம் (1857) என்கிற பவர்துரை என்று அறியப்படும் ஹென்றி பவர் நூலின் பதிப்பு தொடர்பாக எழுத்தாளர் பிரதீபா ஜெயசந்திரன் மூலமாக ஆய்வறிஞரோடு உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. லௌகீக வாழ்க்கை ஆய்வின் நோக்கத்தையும் அதை மையப்படுத்திய ஆய்வுப் பரப்பையும் எவ்வளவு குறுக்கிவிடும் என்பதைப் பலரது முனைவர்பட்ட ஆய்வுப்பொருள் யானை இளைத்து எறும்பானதைப் போலச் சுருக்கம் பெற்றதை வைத்தே நம்மால் புரிந்து கொள்ள முடியும். அந்த வெளிக்குள்ளேயே இருந்து கொண்டு தமிழியல் சார்ந்த தொடர்ச்சியான உரையாடல்களை ஆய்வுகளை ஒரு முதுபெரும் ஆய்வாளராகத் தொடர்ந்து நிகழ்த்தி வருகிறார். அவரது அறிவின் பன்முகத்தன்மையை அவரது எழுத்துகளில் பார்க்க முடிகிறது. ஒவ்வொரு பகுதிகளும் வரலாற்றைப் புரட்டிப் போடுகின்ற பல கேள்விகளை மையமாகக் கொண்டமைகின்றன.

- சிற்பக் கலையின் நுட்பங்களைக் கொண்ட கலைவடிவங்களின் இருப்பிடமாகத் தமிழகம்



இருக்க அதன் இலக்கணத்தைக் கூறும் நூல் வடமொழியில் இருப்பது ஏன்?

- பரதம் என்னும் நிகழ்த்துக்கலை வடிவம் தமிழகம், ஆந்திரப்பகுதிகளில் உயிர்ப்புடன் இன்றும் உள்ளது. ஆனால் அதன் இலக்கணம் வடமொழியில் இருக்கிறது?
- ஆயிரம் ஆண்டு காலம் கல்வியில் சிறந்த தமிழர்கள் கைநாட்டுகளாக மாறியது எப்படி?

தமிழ் இலக்கிய வரலாற்று எழுதியலில் அதிகமாக கவனம் செலுத்தப்படாத இத்தகைய புள்ளிகளைச் சிந்தனையில் கொள்வது பல நூல் உருவாக்கத்திற்கும் கட்டுரைகளுக்கும் களம் அமைக்கும்.

வரலாறுகள் என்றும் பயனுடையவை. ஏனென்றால் தமது முந்தைய தலைமுறை பற்றிய செய்திகளை அவை நமக்கு அறியத் தருகின்றன. ஆனால் அவற்றுள் சில சுவையும் கொண்டவையாக அமைவது உண்டு. இன்றைய 'மக்கள் குழுக்களின் பண்பாட்டு மாளிகைகளுக்கு' முட்டுக்கொடுத்து உருவாக்கப்பட்ட பல கற்பிதங்களை இத்தகைய சுவையான வரலாறுகள் சில நொடிகளில் தகர்த்தெறிந்துவிடுவதுண்டு. சொந்த மகள், வைப்பாட்டியின் மகள், மனைவியின் சகோதரி உள்ளிட்டவர்களை கிரயம் பேசி விற்றுக் கோயில் தாசியாகவும் விபசாரிகளாகவும் மாற்றியதை காட்டுகின்ற ஒரு பகுதி சோழர் ஆட்சியிலும் அடிமைகளா? நூலின் முதல் பகுதி. தமிழகத்தில் மட்டுமல்ல மகாராஷ்டிரா மாநிலத்தின் செஜூரியில் உள்ள கண்டோபா எனும் சைவக் கோயிலோடு 250 ஆடல் மகளிர் இணைக்கப்பட்ட செய்தியை ஒரு காலனிய ஆவணம் கூறுகின்றது. அதற்காகச் சில நேரங்களில் பெண்கள் விலைகொடுத்து வாங்கப்பட்ட செய்தியையும் அந்த நூல் கூறுகின்றது (Indian Ancient and Modern, David O Allen, 1856:390). மோடி ஆவணங்களில் பயன்படாது என்று தவிர்க்கப்பட்டனவற்றிலிருந்து இத்தகைய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன என்கிற செய்தி பெரிய அதிர்ச்சியைத் தருகிறது. வரலாறு பற்றிய புரிதல் இல்லாத விளக்கெண்ணை அதிகாரிகளை நினைத்து வேதனை ஏற்படுகிறது.

இலக்கியத்தில் அறிவுப்புலத்திற்கும் பண்பாட்டைப் பேணிக் காப்பவர்களின் 'கவனத்திற்கும்' வராத பகுதிகள் பல உண்டு. உண்மையில் கவனம் பெறத்தக்கவை என்று சொல்வதைக் காட்டிலும் கண்டுகொள்ளாமல் விடப்பட்டவை என்றுதான் இத்தகைய பகுதிகளைச் சொல்ல வேண்டும். அப்படியான ஒரு பகுதி ஏலாதி 30, 31ஆம் பாடல்கள் பற்றிய பதிவு. இது நமது மரபா? என்றால் உடனே இடைச்செருகல்கள் என்பார்கள் 'பண்பாட்டின் பாதுகாவலர்கள்'; அல்லது பிறமொழியாளர்கள் தொடர்பால் வந்த கலப்பு என்பார்கள். இதுபோன்ற சில தமிழிலக்கியப் பகுதிகள் விமர்சனங்களுக்கு ஏன் உட்படுத்தப்படவில்லை? அறியப்பட்ட வரலாற்றில் இருக்கும் இத்தகைய இடைவெளியின் தூரத்தைச் சுட்டிக்காட்டுகிற பகுதிகள் பல இந்நூலில் உள்ளன. விஜயநகரப் பேரரசைக் கட்டி எழுப்பிய புக்கரும் ஹரிஹரரும் இந்துக்களாக மதம் மாறிய இஸ்லாமியர்கள்; ஐரோப்பிய வேதப்புரிதலின் ஊற்றுக்கண்ணாக விளங்கிய பாராசீக மொழிபெயர்ப்புகள் ஔரங்கசீப்பின் உடன்பிறந்த அண்ணனான தாராசுகோவின் மொழிபெயர்ப்புகள் என்பது புதிய செய்தி. பேரரசுகளின் காலங்களை வரலாற்றுப் பாடநூல்கள் வழிக் கற்று அறிந்த என்னையொத்தவர்களுக்கு அதன் போதாமையை விளக்கும் பகுதிகள் இப்படிப்பல.

பாடத்திட்டம் என்ற சொல் ஒற்றைப் பொருள் கொண்ட வெற்று மொழி அல்ல. இச்சொல் பல்வேறு பரிணாமத்தையும் பரிமாணத்தையும் நோக்கி அந்தப் பிரதியை நகர்த்துகிற ஒரு செயல்பாடு. பதிப்பு-வாசிப்பு-ஆய்வு-வெளிப்பாடு என்று பல முனைகளில் அந்தப் பிரதி அகத்திலும் புறத்திலும் பல்வேறு வளர்ச்சியைக் கண்டடைவதற்கான வழியை அது ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இன்றைய நமது பாட புத்தகங்களை விடப் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாடப்பகுதிகள் மிகுந்த நுட்பத்தோடும் கவனத்தோடும் உருவாக்கப்பட்டிருப்பதை ஆய்வறிஞரின் பதிவுகள் சில எடுத்துக்காட்டுகின்றன. 'தமிழ் மொழியை வளர்த்தவர்கள் பாதிரியார்களும் ஆங்கில அரசாங்கமும் தான்' என்ற இவரது கருத்து முற்றிலும் ஏற்கத்தக்கது. நொபிலி, வீரமாமுனிவர், சீகன்பால்கு, ராட்லர், மெக்கன்சி,

எல்லீஸ், மெக்காலே, பவர்துரை முர்டாக், ஜி.யு. போப் உள்ளிட்டவர்கள் பற்றிய இவரது பதிவுகள் அதற்குக் கட்டியமாகின்றன.

அந்த வரிசையில் 1717 இல் வெளிவந்த ஒரு நூலைப் பற்றி 2017இல் ஒரு பதிவை இட்டுள்ளார் பொ.வே. தரங்கம்பாடியில் இருந்த டச்சுப் பாதிரியார்களின் தமிழகம் பற்றிய எடுத்துரைப்புகளைக் கொண்டுள்ளது அந்நூல். மக்களின் பழக்கங்கள், நீதி முறைமை, பண்பாடு, சாதி, இந்தியப் பகுதிகளின் இயற்கை அமைப்பு முதலானவற்றைப் பற்றி எடுத்துரைக்கும் ஆவணங்கள், (Malabar -1891, History of the Madras Army -1889, A compendium of the caste and tribes found in India from the census reports for the various provinces (excluding Burmah) and the native states of the empire -1885), பயண நூல்கள் (A Journey from Madras through the countries of Mysore, Canara and Malabar -1807, Notes of a journey across the peninsula of India, from Madras to Bombay, in 1834- 1836), நினைவுக் குறிப்புகள், அகராதிகள், அடைவுகள் (Memoirs of the Right Rev. Daniel Corrier, LL D., first bishop of Madras/compiled chiefly from his own letters and journal by his brothers- 1847, A Comparative dictionary of the Non Aryan Languages of India and high Asia -1868, Personal narrative of a mission to the south of India from 1820 to 1828- 1829) பல ஆண்டு அறிக்கைகள் என 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆவணங்கள் பல இணையத்தில் காணக்கிடைக்கின்றன. ஆனால் பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இத்தகைய நூல்கள் மிக அருகியே கிடைக்கின்றன. 2017இல் இந்தப் பதிவை பொ.வெ. வெளியிட்ட போது எல்லோரும் பயன்படுத்துமாறு இந்தநூல் இல்லை. 2023இல் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட இந்த நூலை ஆர்கைவ்ஸ்.காம் (https://archives.com/) தளத்தில் ஆய்வாளர்கள் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு இப்போது உள்ளது.

அறிவைப் பரவலாக்கம் செய்வதுதான் ஒரு சமூகம் வளர்ச்சியடைய எடுத்துக்கொள்ளும் காலத்தைத் தீர்மானிக்கிறது. இத்தகைய அறிவுத்தளச் செயல்பாடுகளைத் தூண்டும் வேலையைச் சிலரால் மட்டுமே நுட்பமாகச் செய்ய முடியும். தனது கருத்தை எதிரில் உள்ளவர்மீது திணிக்காமல், சமூக இயக்கம் இப்படி இருந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி அது சார்ந்து அவதானித்து இயங்கும் ஆற்றல் உடையவர்களாக வெகுமக்களே தங்களைத் பழக்கப்படுத்திக்கொள்ளும்படிச் செய்யும் மறுபடைப்பு முயற்சி அது. அதனை பொ.வே. இந்நூல் பதிவுகளின் வழிச் செய்துள்ளார். ‘எந்த விதமான செய்தியையும் உங்கள் சுய சிந்தனையால் சீர்தூக்குங்கள்’ என்கிற அவரின் வரிகள் முக்கியமானது. இருபத்தோராம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்தில் முன்பைவிட மிகப் பெரிய அறிவியல் வளர்ச்சிகளை எல்லாம் நாம் சந்தித்து வருகிறோம். இணைய நூலகங்களின் பெருக்கம் இன்றைய கல்வியியலாளர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் மிகப்பெரிய வாய்ப்புகளை எல்லாம் உருவாக்கிவருகிறது. ஜேஸ்டர், ஏசிஎம், பிரிட்டிஷ் கவுன்சில், மின்ட்புக் (JSTOR, ACM digital library, British council online library, Mintbook) போன்ற கட்டண இணைய நூலகங்களை விடக் கட்டணமில்லா இணையநூலகங்கள் பல இலட்சக்கணக்கான தரவுகளைப் பயன்கொள்ளும் வாய்ப்புகளை நமக்குத் தருகின்றன. பதிவிறக்கம் செய்து கணினியின் இடவசதியை முடக்க வேண்டிய அவசியம் கூடத் தற்போது இல்லாமல் போய்விட்டது. கூகுள் சேமிப்பகம், தொலைதூரத் தரவு மையங்கள் (Google drive, Cloud service providers) உள்ளிட்ட முன்னேறிய அறிவியல் வளர்ச்சி இதற்கு விடையாக உள்ளது இன்று. இப்போது கூடத் தான் படிக்கும் நூல்களை அட்டை போட்டுப் படிக்கும் பேராசிரியர்கள் பலரைப் பார்க்கிறோம்; அது நூல் பாதுகாப்பு கருதிய செயலல்ல என்பது வருந்தற்குரியது. ஆனால் தன்னிடம் உள்ள அரிய நூல்களைப் படியெடுத்துக்கொள்ள விரும்புவோர்களை வரவேற்று அறிவைப் பகிரும் தன்மை முக்கியமானது (ப.68).

‘I have taken off my caste and left it with the port officer. I want to put it on again till I come back (சோ.ஆ.அ, 2024:153)’.

தமிழகத்தின் மக்கள் கணக்கெடுப்பு பற்றிய ஆவணத்தில் இடம்பெற்றுள்ள நாகப்பட்டினம் துறைமுகத்தில் நடந்த இரு வேறு சாதியைச் சேர்ந்தவர்களுக்கு இடையிலான நுட்பமான உரையாடல் இது.

சாதியை அடிப்படையாகக் கொண்ட ஏற்றத்தாழ்வுகளைத் தகர்த்ததில் மக்கள்தொர்புப் போக்குவரத்துச் சாதனங்களுக்கு மிக முக்கியமான பங்கு உண்டு. இரயில் அறிமுகம் உள்நாட்டில் இத்தகைய நிலையைச் செயல்படுத்தியது. கீழ் மேல் என்ற வேறுபாடின்றிப் போக்குவரத்துச் சாதனங்களை யார் அருகிலும் யாவரும் அமர்ந்து பயன்படுத்தும் வாய்ப்பை* அது வெகு மக்களுக்குத் தந்தது. அதேபோல தங்கள் வாழ்நில எல்லையைக் கடந்து பல்வேறு தேவைகளுக்காகப் புலம் பெயர்ந்து இடம் பெயர்ந்தவர்கள் தங்கள் பயணங்களில்

தங்கள் சாதிக் கட்டுகளை உடைத்து அதிலிருந்து விடுபட்டதை, அதனை மிகுந்த மனத்திடத்துடன் எடுத்துரைத்ததை வெளிப்படையாக எடுத்துச் செல்லும் முக்கியமான பகுதி இது. இதுவரை எழுதப்பட்ட வரலாறுகளின் வழி அதனை நாம் புரிந்து கொள்வதற்கு இடையில் புதியதாகப் பெறப்படுகின்ற இத்தகைய தரவுகளையும் நிரப்பிக் கொண்டு சிந்திப்பதற்கான வாய்ப்புகளை ஆய்வறிஞரின் இத்தகைய பகுதிகள் நமக்குத் தருகின்றன.

தமிழ்ப்பணி செய்தவர்கள் மறக்க இயலாதவர்கள். வ.உ.சி. போன்ற தமிழ்ப் பற்றாளர்கள் கொண்டாடப்பட வேண்டியவர்கள். தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்பு வரலாற்றில் இளம்பூரணர் உரையை முதன் முதலில் பதிப்பித்தவர் வ.உ.சி. என்பதை சான்றுகளுடன் விளக்கிக்காட்டுகிறார். முதுபெரும் ஆய்வாளர்களும் ஆய்வுப் புலத்தில் சருக்கிவிடும் ஆபத்தையும் சுட்டிக்காட்டும் பகுதிகள் கருத்துகளைக் கவனமாக கையாள வேண்டும் என்கிற அனுபவத்தை இளம் ஆய்வாளர்களுக்கு நிச்சயமாகத் தரும். பதிப்பகங்களின் அக்கறையின்மை - பதிப்பு நேர்மை – மறைப்புகள் – முன்னோடிப் பதிப்பாளர்களின் பணிகள் – பிரபலமாக அறியப்பட்டவர்களின் அறிவுத் திருட்டு முதலானவற்றை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டும் பகுதிகள், இலக்கியம் சார்ந்து அறியப்படாத வியக்கவைக்கும் நூல்கள் (3000 பக்கங்கள் கொண்ட கம்பராமாயண இலக்கணக் குறிப்பு நூல்) இப்படிப் பல தரவுகள், தரவுத்தளங்கள் இந்நூல்களில் உள்ளன.

பிற மதத்தைச் சார்ந்த ஆளுமைகள், தமிழியலுக்கு ஆற்றிய பங்களிப்புகள் பற்றிய எந்த ஓர்மையும் இல்லாதவர்களால் பொய்யான குற்றச்சாட்டுகளுக்கும் எதிர்ப்புகளுக்கும் ஆளாக்கப்படுவதை வலிமையான சான்றுகளை எடுத்துக்காட்டிப் பொய்யாக்குகிறார். இப்படி நினைவுகூறப்படவேண்டியவர்களின் படைப்புகள் ‘போலியானது’ என்று பொய்மாளிகை கட்டிப் புதிய பிம்பங்களை உருவாக்கும் மலினமான செயல்கள் அரசியல் பின்புலத்தோடு இன்றும் தொடர்கிறது. பொருளாதாரச் சிக்கல்களைத் திறமாகக் கையாள இயலாத அரசியலாளர்கள் மக்களைத் திசை திருப்பப் பண்பாட்டுப் போர்களை மக்கள் தங்களுக்குள் தாமே நடத்தி விடும்படியாகத் தூண்டி அவர்களைத் துண்டாடுவது உலக நாடுகளின் அரசியல் வரலாற்றில் நிகழும் தொடர்கதைதான். இந்தியா போன்ற பன்மீயப் பண்பாட்டைக் கொண்ட இனங்கள் வாழுகின்ற பகுதியில் பெரிய எதிர்ப்புகளை இத்தகைய போக்கு உருவாக்கும். மண்ணின் மைந்தர்களாக ஒரு இனத்தை/ சாதியைத் தூக்கி பிடிப்பதோடு மற்ற சில இனங்களை இனத்தூய்மைவாதம் பேசி வெளியேற்றும் போலிக் கூச்சல்களுக்கும் அது இடம் கொடுக்கிறது. சிறுபான்மை இனங்களாக வாழ்ந்து வரும் குறிப்பிட்ட சில சமூகங்களுக்கு எதிரான இத்தகைய சண்டைகளை மக்கள் உணர வேண்டும் எனச் சமூக பிரக்ஞையுடன் வெளியிடப்பட்ட பல அரசியல் பதிவுகள் இந்தியத் தத்துவமும் தமிழ்த்தத்துவ மரபும் நூலில் இடம்பெற்றுள்ளன.

இலக்கியப் பயிற்சி இல்லாத வெகு மக்களையும் இலக்கியங்களை நோக்கி நகர்த்த வேண்டுமென்றால் அதற்கு சில விடயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். இது பற்றிப் பதிப்புத் துறையைச் சார்ந்த நண்பர் ஒருவர் அடிக்கடிக் கூறுவார். ‘எளிமை’ தான் அந்தத் தத்துவத்தின் மூல மந்திரம். ஆய்வு செய்வோரை அத்துறையில் ஆழப்படுத்த வேண்டும். அதேநேரத்தில் சொற்பயன்பாட்டில் ஒரு வசீகரத்தோடு ஒரு கருத்தை எடுத்துச்சொல்லும்போது எளிமையானவர்களையும் இலக்கியம் விடாது பற்றிக்கொள்ளும். ஒரு எள்ளலும், பகடியும், கோபமும் கலந்து படிப்பவரை ஈர்க்கும்படியான தலைப்புகளுடனும் செய்திகளுடனும் இந்த மூன்று தொகுதிகளும் அமைந்துள்ளன.

சமூக ஊடகத்தின் வழிப் பகிரப்பட்ட பதிவுகளுக்குப் பயன்பாட்டு எளிமை, இன்றியமையாமை கருதி அச்சுவடிவிலான அடையாளத்தை விக்னேஷ் கொடுத்துள்ளார். ஆய்வறிஞர் எடுத்துப் பகிர்ந்த எண்ணிம வடிவிலான நூல் இணைப்புகள் (link) அவற்றின் விரைவுப் பதில் குறியீடு (QR code) வடிவில் புத்தகங்களில் தரப்பட்டுள்ளன. விக்னேஷ் அவரது கல்விப் பின்புலத்தில் சரியாக வழிகாட்டப்பட்டிருக்கிறார். அவர் சார்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் தற்போது புலப்படுத்திவரும் ஆய்வுச் செயல்பாடுகள் போற்றுதலுக்குரியது. இத்தகைய பயனுள்ள பதிவுகள் தமிழுக்கு எப்போதும் தேவை. தமிழியல் ஆய்வு நீர்த்துப் போய்விடாமல் மிகுந்த பாய்ச்சலுடன் வேகமெடுப்பதற்கு இத்தகைய ஆய்வுத் தொகுப்புகள் ஊக்கச் சக்தியாக உதவும். தொடர்ந்து தனது உரையாடலோடு கூடிய ஆய்வுப் பதிவுகளைத் தமிழ்ச் சமூகத்திற்கு ஆய்வறிஞர் பொ. வேல்சாமி கையளிப்பார் என்ற நம்பிக்கை அவரது வாசகர்களைப் போலவே எனக்கும் உண்டு.

●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**



கட்டுரை

# அறம் மற்றும் தர்மம் – ஓர் ஒப்பீடு

மகிமை பெர்னாண்டோ நிக்சன். அ

**அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை**

**மறத்தலின் ஊங்கில்லை கேடு.** (குறள் 32)

*மனித வாழ்வுக்கு ஆக்கத்தை அளிப்பது அறம் என்பது வள்ளுவனார் கூற்று. அத்தகைய அறத்தை மறப்பதை விட வேறொரு கேடில்லை என்று அவர் எச்சரிப்பதன் வாயிலாக அறத்தின் மேன்மையை நம்மால் விளங்கிக்கொள்ள இயலும். மனதில் மாசற்று இருப்பதே அறம் (குறள் 34) என்பது அறத்திற்கு வள்ளுவர் அளிக்கும் வரையறை. அந்த அறத்தைப் பின்பற்றுவதால் ஒருவர் அடையும் பயன் இன்பமாகும் (குறள் 39). வாழ்வியல் நெறி எனும் வகையில், பொது வழக்கில், அறத்திற்கு இணையாகப் பயன்படுத்தப்படும் சொல் தர்மம். பயன்பாட்டளவில் இரண்டு சொற்களும் ஒன்றாகக் கைக்கொள்ளப்படினும் கருத்தளவிலும் பரப்பளவிலும் இரண்டும் ஒரே நிறையும் பொருளும் கொண்ட கருதுகோள்களா என்று ஆய்வதே இக்கட்டுரையின் நோக்காகும்.*

**அறவியல்:**

அறவியல் என்று தமிழில் பெயர்க்கப்படும் '*Ethics*' என்கிற சொல் மேற்குலக மெய்யியலின் கிளைகளுள் ஒன்றைக் குறிப்பது. இதன் வேர்ச்சொல், குணம் அல்லது வழிகாட்டும் நம்பிக்கைகள் எனும் பொருளுடைய '*Ethos*' என்னும் கிரேக்கச் சொல்லாகும். தனிமனித வினைகளை ஆராய்ந்து அவற்றுள் கொள்ளத்தக்கன எவை? தள்ளத்தக்கன எவை? என்று வாதிப்பதும் வரையறை செய்வதும் இப்புலத்தின் உட்கிடையாகும். 'அறுதியான நன்மை' (*The Ultimate Good*) என்று ஏதும் உளதா என்று ஆய்வதே இம்மெய்யியல் பிரிவின் நோக்கமாகும். தெரிந்தும் தெளிந்தும் ஆற்றப்படும் செயல்களே இதில் ஆராயப்படும். அறிவின் துணைகொண்டு ஆற்றப்படா அனிச்சை செயல்களும் அறிவின் தேவையழிந்து ஆற்றப்படும் பழக்க வழக்கங்களும் (*Habits*) சடங்குகளும் இதில் ஆய்வுக்குரியனவாய்க் கொள்ளப்படா. தனிமனிதச் செயல்பாடுகளை வழிநடத்துபவை என்கிற அடிப்படையில் அறமும் தர்மமும் இப்புலத்துள் அடைபடுபவை.

**அறம்:**

'அறம்' எனும் சொல் 'அறுத்தல்' என்னும் வினையையொட்டி எழுந்தது. புதர் மண்டிக் கிடக்கும் நிலத்திடையோ அல்லது மரம் அடர்ந்தக் காட்டிடையோ அறுத்துக்கொண்டுச் சென்றால்தான் செம்மையான பாதை கிடைக்கும். அதுபோல, மாந்தர் தமது வாழ்வில் செம்மையுற வகுக்கப்பட்ட பாதைதான் அறம் என்று விளக்குகிறார் கரு. ஆறுமுகத் தமிழன்.

வழிநடத்தும் பாதையெனில் அது எஞ்ஞான்றும் ஒன்றுபோல் இருப்பதா, சாசுவதமானதா, சனாதனமா (காலங்காலமாக மாறாமல் தொடர்வதா) என்றால் அது அப்படியன்று. புதுவெள்ளம் ஏற்படுங்கண் ஆற்றொழுக்கு மாற்றமடைவதைப் போன்று அறமும் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மாற்றமடையும்.

**காலங்கள்தோறும் அறம்:**

சங்க காலத்தில் காதலும் வீரமுமே முதன்மை அறங்கள்.

சங்க இலக்கியத்திற்கு இலக்கணமாகத் திகழும் தொல்காப்பிய முறைப்படி, ஐவகை நிலத்தில் அன்பின் ஐந்திணைகளாய் விளங்கும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை ஆகியவையும் கைக்கிளையும் பெருந்திணையும் அக ஒழுக்கங்கள். இதில் முதல் ஐந்தும் கொள்ளப்பட வேண்டிய ஒழுக்கங்கள். ஒருதலைக் காமமாகிய கைக்கிளையும் பொருந்தாக் காமமாகிய பெருந்திணையும் அகத்திணையில் கூடா ஒழுக்கங்கள். புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பவை அந்தந்த நிலத்திற்குரிய காதல் உணர்ச்சிகள். இவற்றுடன் ஒழுகி அவர்தம் இல்லறம் நல்லறம் ஆவதே அகத்திணையின் இலக்கு.

புறத்திணையில் கல்வியும் கொடையும் நல்வழியில் பொருளீட்டலும் புகழீட்டலும் போற்றத்தக்க அறங்கள். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்கிற பொதுமை உணர்வும் தீதும் நன்றும் பிறர்தர வாரா (புறம் 192) என்ற பொறுப்புணர்வும் பேரறங்கள். தொல்காப்பியத்தின்படி, நிரை கவர்தல் துவங்கி பாடாண் திணை ஈறாய் அமைபவை புற ஒழுக்கங்கள். போரில் புறமுதுகிடல் பெருங்குற்றம்.

வள்ளுவர் காலத்திலோ கள்ளாமையும் கொல்லாமையுமே அறங்கள். கொள்ளத்தக்க அறங்கள் எவையோ அவைதாம் திருக்குறளின் அதிகாரப் பெயர்களாய் அமையப்பெற்றன என்று உரைப்பாரும் உளர்.

தமிழகத்தில் சமணமும் பௌத்தமும் கிளைபரப்பத் துவங்கிய காப்பிய காலத்தில் அரசனின் செங்கோல் வழுவுங்கால் அறமே காலனாக மாறி உரிய தீர்ப்பிடும் என்று சிலப்பதிகாரம் அறத்திற்குத் தெய்வநிலையை வழங்குகிறது. பசிப்பிணிப் போக்கலும் சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றலும் என அறத்திற்குச் சமூகநலன் என்னும் பரிமாணத்தை அளிக்கிறது மணிமேகலை.

சைவம் முதலான சமயங்கள் பெருமதங்களாய் நிலைபெற்ற பிற்காலத்தில் அறம் இறைவனை அடையும் வழியெனக் கொள்ளப்பட்டது.

**...மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்;**
**அறந்தான் அறியும் அளவு அறியாரே**

**(திருமந்திரம் 256)**

இவ்வாறு, அறத்தை அறிந்தவர்களை இறைவனே வந்தடைவான் என்று நம்பிக்கை அளிக்கிறார் திருமூலர்.

இவ்வழியே, காலமாற்றத்திற்கும் சமூகச் சூழலுக்கும் ஏற்ப இன்பத்தையும் புகழையும் பெறுவதற்குப் பாதையாக அமைந்த அறம் என்னும் கருதுகோள் பின்னாளில் இறைவனை அடையும் வழியாகவும் வளர்ச்சி அடைந்தது. கால-இட மாற்றங்களுக்கு ஏற்ப அனைவருக்கும் உரிய

பொது அறங்களும் தனிமனிதரின் இயல்புக்கும் முயற்சிக்கும் அவர்தம் தேவைக்கும் ஏற்றத் தனி அறங்களும் போதிக்கப்பட்டன. திருக்குறளே அத்தகையத் தனியற நூல்தான் எனவும் தனிநபரின் தேவைக்கேற்ப அது தன்னை நெகிழ்த்தித் தந்துதவும் தன்மையுடையது என்றும் கூறுகிறார் வ. சுப. மாணிக்கனார்.

பொது அறமாயினும் சரி, தனி அறமாயினும் சரி, ஒருவர் பின்பற்றத்தக்க அறத்தைக் காலமும் சூழலும் தனிமனித அறிவும் அவர்தம் இயல்புகளும் முயற்சிகளுமேத் தீர்மானிக்கும். மாறாக, மனிதர்தம் சாத்திரமோ, மதகுருவோ, கடவுளோ இன்னார்க்கு இது அறம் என்று விதிப்பதில்லை; அறத்திற்குப் பிறப்பு ஒரு தகுதியாய் அமைவதில்லை.

**தர்மம்:**

தர்மம் எனும் சொல்லின் பொருள் ரிக் வேத காலம் துவங்கி சமய மறுமலர்ச்சி காலம் வரை தொடர்ச்சியான மாற்றங்களுக்கும் பொருள் விரிவுக்கும் உள்ளாகி வந்துள்ளது. வேதச் சடங்குகளை முறைப்படி ஆற்றலும் அதன் வழியே இயற்கைச் சக்திகளைப் பிரதிபலிக்கும் அக்னி, வருணன், சோமன், இந்திரன் முதலான தேவர்களைத் திருப்திபடுத்தி உலகின் ரிதம் (ஒழுங்கு) வழுவாமல் நிலைநிறுத்தலுமே வேததர்மங்கள். இதனோடு வருண தர்மங்களும் ஆசிரம தர்மங்களும் வளர்ச்சிபெற்று வருணாசிரம தர்மம் நிலைபெறுகிறது. மனுஸ்மிருதி முதலிய பின்னாளைய தர்ம சாத்திரங்கள் வருணாசிரம தர்மத்தைக் கட்டிறுக்கம் செய்வதோடு அதனைச் சட்டமாக்குகின்றன. இவ்வாறு சமயச் சடங்காகத் துவங்கிய தர்மம் பின்னாளில் சமூக வாழ்விற்கான சட்டமாக நிலைபெறுகிறது.

அறங்களை ஒத்த நெறிகளும் ஒழுக்கங்களும் பொதுவில் தர்மங்கள் என்றே அழைக்கப்பட்டாலும் இயல்பில் தர்மம் என்பது பிறப்பின் அடிப்படையில் கடமைகளை விதிப்பது; மாற்றத்திற்கும் மறுபரிசீலனைக்கும் உட்படாதது. ஏனெனில் இது கடவுளால் படைக்கப்பட்டதாகச் சாத்திரங்களில் ஓதப்பட்டு மக்களாலும் சைவம், வைணவம் முதலிய சமயங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் நிறுவன அமைப்பு.

மனிதர்களின் குணம் மற்றும் செயல்களின் வேறுபாட்டிற்கு ஏற்ப அவர்களை நான்கு பிரிவாக நான் வகுத்தேன் (ஸ்ரீமத் பகவத்கீதை 4:13) என்கிறார் கிருஷ்ணர். இதன் மூலம் வருண தர்மத்தின் தோற்றத்திற்கு ஒரு புனிதநிலை ஏற்படுகிறது.

இத்தகு செய்திகளைக் கூறும் வேதங்களையும் ஸ்மிருதிகளையும் தனது தர்க்க அறிவு கொண்டு ஆராய்பவனை நாத்திகன் (மனுதர்ம சாஸ்திரம் 2:10-11) என்று மனு பழிப்பதன் மூலம் அப்புனிதநிலை அறிவுக்கு அப்பாற்பட்டதாகவும் நம்பிக்கைக்கு மட்டுமே உட்பட்டதாகவும் நிலைபெறுகிறது.

**தமிழ்ச்சூழலில் அறமும் தர்மமும்:**

பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் (புறம் 183) எனும் பாடல் புறநானூற்றுக் காலத்திலேயே தமிழகத்தில் வேற்றுமை தெரிந்த நாற்பால்களும் இருந்ததைப் புலப்படுத்துகிறது. ஆனால் கல்வி கீழ்ப்பால் ஒருவனை மேற்பாலாக்கும் என்று சுட்டுகிறது. இது அறவழிப்பட்ட கருதுகோள். ஏனெனில் நால்வருண தர்மத்தில் தனது சொந்த முயற்சியால் ஒருவன் வாழ்வில் உயர்வடைதல் என்பதற்கு இடமில்லை. நாலாம் வருணத்தோன் ஏவல் புரிதலை விட்டொழித்து அரசனாக ஆவானேயாகின் அவன் ஆளும் நாட்டில் வசிக்கக்கூடாது (4:61) என்று அந்தணர்களுக்கு மனு இடும் கட்டளையின் வழியே தர்மத்தின் இறுக்கத்தை அறியலாம்.

இத்தகு நிலையில், 'அறமாவது, மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலும்' என்று திருக்குறளின் உரைப்பாயிரத்தில் எழுதுகிறார் பரிமேழலகர். உடம்பில் சிறப்பு வாய்ந்தது முகம் எனவே இறைவனின் முகத்திலிருந்து உதித்த பெருமையால் முன்னிற்கும் சால்பு அந்தணனுக்கே உரித்தது என்று கூறும் மனுவின் தர்மத்தை, சதுர்வருணக் கோட்பாட்டில், காலிலிருந்து பிறந்ததால் நான்காம் இடத்திற்கு உரியவன் என்று தள்ளப்பட்ட உழவனை உயர்த்தி, உழன்றும் உழவே தலை என்றும் பிறர் எல்லாம் அவன் அடியைத் தொழுதுண்டு பின்செல்பவர் என்றும் கூறும் வள்ளுவரின் அறத்தோடு பிணைத்த பரிமேலழகரின் திறத்தை முரண் என்றுதான் கொள்ளவேண்டியுள்ளது.

இயல்பான இடப்பெயர்வுகளாலும் வைதீகச் சார்புடைய மன்னர்களால் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களாலும் வருண தர்மத்தைப் பின்பற்றுவோரின் பண்பாடு தமிழ் நிலத்தில் பகிரப்பட்டதற்கான சான்றே மேற்கண்ட முரண் என்று ஊகிக்க இடமுண்டு . பரிமேலழகர் போன்ற பேரறிவாளர்களும்கூட அறத்தையும் தர்மத்தையும் பிழைபடப் பிணைத்தமைக்கு இப்பண்பாட்டுப் பரிமாற்றங்களே காரணங்கள் எனலாம்.

### முடிவுரை:

வாழும் நிலத்திற்கு ஏற்ப அக ஒழுங்கையும் புற ஒழுங்கையும் அமைத்து வாழ்வது அறனெறிப்பட்ட வாழ்வு. பிறந்த குலத்திற்கேற்ப வினைகளை அமைத்துக்கொள்வதும் அதனின்று வழுவா தன்மையுமே தர்மநெறிப்பட்ட வாழ்வு. காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மாறக்கூடியது அறம். இத்தகையச் சூழல் மாற்றத்தை, ‘சாந்தியும் சமாதானமும் போதித்த சமணத் துறவிகளுக்கு வீரயுகத்திலே வரவேற்பு இருந்திருக்க முடியாது’ என்று சான்று காட்டி விளக்குகிறார் க. கைலாசபதி. ஆனால் தர்மங்கள் அவற்றை நம்புவோரின் மீது கால-இட மாற்றமின்றி சுமத்தப்படுபவை. விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலும் என்கிற பரிமேலழகரின் கூற்று அறம், தர்மம் இவையிரண்டுக்குமே பொருந்தும். ஆனால் மனு முதலிய நூல்களில் விதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்டனவுமான தர்மங்களோ அற விழுமியங்களோடு பொருந்தாதவை.

தர்மம் காலங்காலமாய்த் தொடரும் சனாதனம். மாற்றத்திற்கோ ஏற்றத்திற்கோ வழியில்லாக் கட்டிறுக்கமான படிநிலை அது. நிறுவன பலத்தினால் நிலைபெறுவது. அறமோ தனிமனித மேம்பாட்டிற்கு முதன்மையளிப்பது. இத்தகைய அறத்தையும், தர்மத்தையும் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்த முற்பட்டால் கருத்தியல் சிக்கல்கள் ஏற்படும் வாய்ப்புகளே அதிகம்.

எனவே, அறமும் தர்மமும் அடிப்படையில் வெவ்வேறானவை, அமைப்பளவில் முரணானவை.

### துணை நூல்கள்:


1. ஆறுமுகத்தமிழன், கரு, 2019, உயிர் வளர்க்கும் திருமந்திரம், தி இந்து தமிழ் திசை, சென்னை.
2. கைலாசபதி, க, 1999, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை.
3. சாமிநாதையர், உ. வே, 2019, என் சரித்திரம், டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை.
4. சிவசுப்பிரமணியன், ஆ, 2022, பிராமண போஜனமும் சட்டிச் சோறும், NCBH, சென்னை.
5. திருவள்ளுவர், 2016, திருக்குறள் பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
6. தொல்காப்பியர், 2021, தொல்காப்பியம், பாரி நிலையம், சென்னை.
7. மனு, 2018, மனுதர்ம சாஸ்திரம், அலைகள் வெளியீட்டகம், சென்னை.
8. மாணிக்கம், வ. சுப, 2019, வள்ளுவம், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
9. ராதாக்ருஷ்ண சாஸ்த்ரிகள், S.V, 2002, தர்ம சாஸ்திரம், ஸ்ரீ சுரபி ஜகத்குரு சதாப்தி பப்ளிகேஷன்ஸ், சென்னை.
10. ஜோத்கா, சுரிந்தர் எஸ், 2023, சாதி தோற்றமும் வளர்ச்சியும்: ஓர் அறிமுகம், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.


### இணைய மூலங்கள்:


1. எது அறம்? எது தர்மம்? - பேராசிரியர். கரு. ஆறுமுகத்தமிழன்
2. உயர் வள்ளுவம் திருக்குறள் வகுப்பு, இலங்கை ஜெயராஜ்,


●


**கட்டுரையாளர்: ஆய்வு மாணவர், மெய்யியல் துறை, இராமகிருஷ்ணா மிஷன் விவேகானந்தா கல்லூரி (தன்னாட்சி), மயிலாப்பூர், சென்னை.**



**புத்தகங்கள் அச்சிட அற்புதத் தீர்வு**

**குறைந்த செலவு அதிகபட்ச தரம்**

அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

**REAL IMPACT SOLUTIONS, CHENNAI**

தொடர்பு கொள்ள

**98412 93503**

கட்டுரை

# ஓடைப்புல் புதினத்தில் வெளிப்படும் ஆதிக்கமும் அடக்குமுறையும்

**மு.தவமணியன்**

**முனைவர் மா. சம்பத்குமார்**

நிலம் மானுட வரலாற்றில் முக்கியத்தன்மை பெரும் மிகப்பெரிய பொருண்மை வட்டம் ஆகும். தொடக்க கால சமூகம் அதிகம் போர்களையும், பாதிப்புகளையும், கொடுமைகளையும் அடக்குமுறைகளையும்  சந்தித்தது நிலத்திற்காக மட்டுமே. இது வரலாற்று நெடுகிலும் இதற்கான எச்சங்கள் தொக்கி நிற்கின்றன என்பது அனைவரும் அறிந்த உண்மை. இத்தகைய நிலம் சார்ந்த பொருண்மை அதிகம் விவாதத்திற்குட்பட்டது. இலக்கியங்களில் மட்டுமே என்பது மறுக்க முடியாத ஒரு உண்மை. தொடக்க கால சங்க இலக்கிய காலம் முதல் பக்தி இலக்கியம் தொடங்கி நவீன இலக்கியங்கள் வரை நிலம் என்பது முக்கியத்துவம் பெறக்கூடிய ஒரு விவாதப் பொருளாகவே இருக்கின்றது. இதற்கு காரணம் சாதி என்ற ஆலவிழுதுகளே ஆகும். இத்தகைய சாதியம் சார்ந்த நிலவுடைமை சமூகம் சி.ஆர். ரவீந்திரன் அவர்கள் எழுதிய ஓடைப்புல் என்னும் புதினத்தில் எவ்வகையில் கையாளப்பட்டுள்ளது என்பதனை குறித்து கட்டுரையில் விவாதிக்கின்றது.



இறைவன் படைப்பில் எண்ணற்ற உயிர்கள் வாழ்ந்து மறைவதை காண முடிகிறது மதம் இனம் மொழி பாகுபாடு இன்றி பறவைகள் விலங்குகள் வாழ்ந்து வருகின்றன. ஒற்றுமைக்கு உதாரணமாக பறவைகளை காண முடிகிறது. உலக வாழ்வில் நிலையாமையை உணர்ந்தவன் மனிதனாவான் மனிதன் தங்களுக்குள் மனிதநேயத்தை தொலைத்து ஏழை, பணக்காரன், உயர்ந்த குலம், தாழ்ந்தவன் என பிரிவினைகளை உருவாக்கி வாழ்ந்து வருகிறான். பல நூற்றாண்டுகள் வரலாற்றில் இடம் பெற்ற மன்னர்களும் தங்கள் வாழ்க்கையை இழந்து நிலையாமையில் மறைந்து போயினர். சராசரி மனிதர்கள் காலந்தோறும் தங்களின் அடையாளம் சாதி எனக் கருதி நம்சமுதாயத்தை வன்முறை சமுதாயமாக மாற்றம் பெற செய்கின்றனர்.

**சாதி சொற்பொருள்**

சாதி என்ற சொற்பிறப்பியல் ஆங்கில வார்த்தை சாதி (/ka st , k æ s t /) என்பது ஸ்பானிஷ் மற்றும் போர்த்துகீசிய காஸ்டாவிலிருந்து பெறப்பட்டது, இது ஜான் மின்ஷூவின் ஸ்பானிஷ் அகராதியின் (1569) படி, "இனம், பரம்பரை, பழங்குடி அல்லது இனம்" என்று பொருள்படும். சாதி என்பது பழைய தமிழ்ச்சொல் இது ஜாய் என்பதிலிருந்து வருவதாக சொல்லப்பட்டாலும் சாதிகள் பிறப்பினால் உண்டாகவில்லை. ஆதியில் தொழிலாள்தான் உண்டாகினர். ஆதிகால சமூகம் என்பது அறியாமை நிறைந்தது. வேட்டை சமூகமாக வாழ்ந்திருந்தது. நாகரீக வளர்ச்சி தான் மனிதனை மனிதன் வேறுபடுத்தியது. கால சூழல்களினால் இன மக்கள் தொழில் சார்ந்தும், உணவிற்கும் இடப்பெயர்வு அடைகின்றனர். தங்களுக்குள் இனப் பிரிவுகளும் தோன்றுகின்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற இனக்குழு பொருளாதார அடிப்படையிலும், தொழில் அடிப்படையிலும் பிரிக்கப்பட்டனர்.


**இலக்கியங்களில் சாதியம்**

மனிதவாழ்க்கை காட்டுமிராண்டி நிலை, அநாகரிக நிலை, நாகரிக நிலை என மூன்றாகப் பிரிக்கப்படுகிறது. காட்டுமிராண்டி நிலையின் இறுதியில் இனக்குழுகால கண ஆட்சிமுறை உருவாகத் தொடங்குகிறது. கண ஆட்சி முறையில் ஆண் பெண் உட்பட அனைவரும் அனைத்திலும் சமமாக இருப்பர். முழுமையான மக்களாட்சி இருக்கும். உண்மையான சகோதரம், சமத்துவம், சுதந்திரம் இருக்கும். அகமணமுறையிலான குழுமணம், இணைமணம் இருக்கும். மனிதர்கள் இரத்த உறவுமுறை அடிப்படையில்தான் பிரிக்கப்படுவர். இந்த கண ஆட்சிமுறையில் குடும்பம், கற்பு, பரத்திமை முறை, தனிச்சொத்து, தொழில்பிரிவுகள், வகுப்பு, அரசு ஆகியன இருக்காது. அநாகரிக நிலையின் இறுதியில் இந்த கண ஆட்சிமுறை அழிந்து குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியன உருவாகத் தொடங்கும். நாகரிக காலத்தில் குடும்பம், தனிச்சொத்து அரசு ஆகியன உருவாகி இருக்கும். இக்காலத்தில்தான் தொழில் பிரிவுகள், வகுப்பு, ஒருதாரமணம், குடும்பம், கற்பு, பரத்திமைமுறை முதலியன இருக்கும். மக்கள் பிரதேச அடிப்படையில் பிரிக்கப்படுவர். ஆகவே நாகரிக காலத்தில்தான் தொழில் பிரிவுகளும் வகுப்பும் உருவாகி இருக்கும் என்பது இங்கு முக்கியம். அதுபோன்றே கண ஆட்சிமுறை அழிந்தபின்தான் நாகரிககால அரசு உருவாகிறது என்பதும், கண ஆட்சிமுறையில் உள்ள குழு மணம், இணை மணம் முதலியனவற்றுக்கு அடிப்படையாக இருந்த அகமணமுறை அழிந்துதான் ஒருதார மணமும் குடும்பமும் உருவாகிறது என்பதும் முக்கியம். மகாபாரதத்தில் பீசுமர் ஒருதார மணத்துக்கு முன்பு, குழுமணம் இணைமணம் முதலியன இருந்தன எனக் குறிப்பிடுகிறார். ஆகவே அகமண முறை அழிந்துதான் ஒருதார மணமும் குடும்பமும் உருவாகியது என்ற புரிதல் மிக முக்கியம். ‘உடன்போக்கு’ என்ற மணமுறை மூலம் அகமணமுறை அழிந்து போவதை சங்க கால அகப்பாடல்கள் உறுதி செய்கின்றன. ஆகவே நாகரிக காலத்தில் அகமணமுறையோ, சாதியோ இருக்காது, தொழில் பிரிவுகளும் வகுப்புகளும்தான் இருக்கும். இவை அனைத்தும் உலகெங்கும் இருந்து வந்த வரலாற்று உண்மைகள்(விதிகள்). ஆகவே நாகரிக காலத்தில் சாதிமுறை இருப்பது என்பது தொழில் பிரிவுகளும் வகுப்பும் உருவாகியபின் மிக நீண்ட காலம் கழித்து அது ஒரு சிலரால் இங்கு திட்டமிட்டு உருவாக்கப்பட்டது என்ற புரிதல் மிக முக்கியம். சங்ககாலத்தில் பாணன், பறையன், துடியன், ஈமச்சடங்கில் ஏவல் புரிவோர், பிறர் அழுக்கை வெளுப்போர், கூடைமுடையோர், வயல்களில் வேலை செய்வோர், என அகநானூறு குறிப்பிடுகிறது.

"மடிலாயத் தன்னுமை கிழிசினள் குரரே"

(அகநானூறு ப எ 157 )

மனிதனின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்குத் தொழில் அவசியமாகிறது. மனிதனுக்கு விவசாயம் அவசியமானது. உணவு மனிதனுக்கு தேவையான ஒன்று. அவற்றை போல மனிதன் சார்ந்த குப்பை போன்ற கழிவுப் பொருட்களை அகற்றுவதும் தேவையான ஒரு செயலாகும். இத்தகைய வேறுபட்ட செயல்களில் உயர்வு தாழ்வு கருதுவதும், சாதி அடிப்படையில்




**வெளியீடு: என்சிபிஎச், சென்னை | விலை: ரூ.100/-**

பிரித்து மக்களை கையாளுவதும் மனித அறமற்றது. இத்தகைய கருத்தை வள்ளுவர்

**பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான். (குறள் 972)**

என்று அனைவரும் ஒருவரே என்றும் பிறப்பில் வேறுபாடு இல்லை என்பதை உணர்த்துகிறது. மனிதனின் வளர்ச்சியை கெடுக்கும் சாதி மத பேதங்களை விட்டு விலகுதல் சிறந்த நற்குணம் என்பர். சாதியின் பெயரில் தனிமனிதன் அனுபவிக்கும் அவமரியாதைகளால் தற்கொலை எண்ணங்கள் தோன்றுகின்றன. மனிதன் தன்வாழ்வில் மரணத்தருவாயை அடையும்போது உலகில் உள்ள மூடநம்பிக்கைகளையும், சாதிய நிலைப்பாடுகளையும் கண்டு வருந்துவான் என்று சித்தர் பாடல் விளக்குகின்றது.

**"சாதி குலம் இல்லை சத்குரு வறிந்தால்**
**சாதி பிரிவினிலே தீயை மூட்டுவோம்**
**சாதி பேதம் என்பது ஒன்று சற்றும் இல்லை இல்லையே"**
**( சித்தர் பாடல் பா எ 4)**

என்று சித்தர்கள் சாதியை குறித்து பாடியுள்ளனர். சாதிப்பிரிவை மிகைப்படுத்தி வளர்க்கும் சடங்கு சாத்திர குப்பைகளால் தீமையே அன்றி அணுவளவும் நன்மை இல்லை என்கின்றார்.இலக்கியங்களில் மட்டுமல்லாமல் மனிதனின் அறியாமையை போக்க கதை கவிதைகளிலும் சாதிய கொடுமைகள் எடுத்து தரப்படுகின்றன.

## பொருளாதாரமும் சாதியும்

நிலம் ஒரு மனிதனின் உரிமையாகும் தொடக்க காலம் தொட்டே ஒரு மனிதனின் வாழ்வியல் வாழ்வாதாரம் என்பது அவனை சார்ந்த நிலமாகும். அத்தகைய நிலத்தை வைத்து ரவீந்திரன் அவர்கள் தனது ஓடைப்புல் என்னும் நாவலை இயற்றியுள்ளார். கொங்கு மண்டலத்தை சார்ந்த நாவல் என்பதும் எல்லோரும் அறிந்ததே. ராக்கி அண்ணன் என்பவரை சுற்றி இந்த நாவல் நகர்கின்றது. ராக்கி அண்ணன் என்பவன் தன் நிலத்தை எவ்வாறு நேசித்தான் என்பதனை நாவல் முழுவதும் சுட்டிச் செல்கின்றார். சமூகத்தில் தாழ்ந்த குலத்தில் இருக்கக்கூடியவர்கள் நிலங்களை ஆதிக்க சாதிகள் பறித்துக் கொண்டு அவர்களை எவ்வாறு அடிமைப்படுத்தினார் என்பதை குறித்த ஒரு உண்மை சம்பவம் நாவலாக நகர்கின்றது.

"கந்தாயம் கட்ட கூட காசு இல்லாமல் ஊருக்குள் கடன் வாங்க வேண்டி இருந்தது. பாகக் காரரான பின்னால் கரண்டு பில்லுக்கும் காசு தேட வேண்டி இருந்தது. பங்காளிகள் கைவிரிக்கையில் ராக்கி அண்ணன் படுகிற பாடு பெரும்பாடாக இருந்தது" என்ற வரிகள் சமூகத்தில் தாழ்ந்த குலத்தில் இருக்கக்கூடிய மக்களுடைய பொருளாதார சூழலை இயல்பாக எடுத்துரைக்கின்றது. சமூகத்தில் தாழ்ந்த மக்கள் என்று உருவாக்கப்பட்டார்களோ அன்றே ஒருவேளை உணர்விற்கு கூட கஷ்டப்படுகின்றனர். என்பதனையே கதை வழியே உணர்த்தியுள்ளார். பட்டினிக்கு வலியுறுக்கும் முன்னேற்றம் மற்ற சூழ்நிலைகளையே உருவாக்கும் என்பதனை குறிப்பிடுகின்றார். உணவு கிடைப்பதற்கும் உண்பதற்கும் சாதி ஒரு தடையாகிறது மேட்டின்மை மக்கள் உரைப்பது பசிப்பிணி தீர்த்தல் வேண்டும் என்பதே "பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும் தவப்பெரு நல்லறம் சாற்றினார்" (ப. மார்க்கபந்து மணிமேகலை அடி 12 பக்கம் 118)

## உயர் குலமும் சாதியும்

உயர் குலத்தில் பிறந்த ஒருவன் கஷ்டமில்லாமல் வாழ்ந்து வருகின்றான். ஏழை கீழ் சாதி இருக்கும் வரை தொழிலாளியாக வறுமையில் சாவதும் சாதிக் கொடுமையை கூறுகின்றது. அவ்வகையில் ஓடைப்புல் நாவலிலும் உயர்வு தாழ்வு என்ற முறை அதிகமாக பயின்று வருகின்றது. இந்தன் அடிப்படையில் ஒரு தாழ்ந்த குலத்தில் உள்ள

மக்களின் நிலங்களை பிடுங்கிக் கொண்டு பண்ணையார் என்பவர் வாழ்ந்து வருகின்றார் என்பதனை

"நமக்கும் நாலு சாதிசனம் நல்லது கெட்டதுன்னு வேணும்னு சின்னையா நினைக்கிறாரு பெரிய மனுஷன் நீங்க கொஞ்சம் அனுசரணை பண்ண கூடாதா" (ப .எ 72) "செல்லம்மாள் ஊர் கவுண்டருக்கு காபி கொண்டு வந்து கொடுத்தால் தொடர்ந்து பித்தளை தம்ளர்களில் ஒவ்வொருவருக்கும் காபி கொடுத்துக் கொண்டே வயக்காட்டு பக்கம் பார்த்தால் மாறாதால் குனிந்த தலை நிமிராமல் களை வெட்டிக் கொண்டிருந்தாள்" (ப. எ 72) இத்தகைய வரிகள் சமூகத்தில் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளை மிக தெளிவாக புலப்படுத்துகின்றன. சமுதாயத்தில் ஒரு இனம் சார்ந்த மக்களின் தலைமுறை ஒடுக்கப்பட்ட பின் உயர்வினை அடைவதில்லை. உயர்வு என்பது பரம்பரையை பொருத்து அமைகிறது என்பதனை இங்கு எடுத்துக்காட்டி உள்ளார். சாதி மனித சமுதாயத்தின் முற்போக்குப் பாதைக்கு தடைக்கல்லாகும். விழிப்புணர்வு இல்லாத தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் உரிமையை பெறுவது கடினமானது. கால சூழலிலேயே சாதி நிலைகளை கலந்து எரியும் மனிதனின் மனங்களில் அன்பு நிறைந்த எண்ணங்கள் உருவாக வேண்டும். மனிதநேயம் காக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் சாதி கொடுமைகள் விலகும். என்ற கருத்தை சி.ஆர் மறைமுகமாக சுட்டுகின்றார்.

### சாதியும் ஏற்றத்தாழ்வும்

"15 , 20 நாளைக்கு முன்னே பெரிய கவுண்டர் அவன் வேலப்பன் ஒருத்தன கொன்னாரு" (ப.எ 90) "பொழச்சி போகட்டும்னு விட்டுட்டாரு மக்கமாறு வேல பணம் சிங்காரமும் ஊட்டுல ஒரு கை பார்த்து விடலாம் என்று நின்னாங்க பெரிய கவுண்டர்வும் சரின்னுட்டாரு பார்த்துட்டே இருந்தேன் ஒருநாள் சாமப் படையில் தனியா வேலைக்கு போயிட்டு இருந்தா வந்து சொன்னேன் அவ்வளவுதான் முடிச்சு போட்டோம்" (ப. எ 90) இத்தகைய சொல்லாடல்கள் சமூக எதார்த்தத்தை விளக்குகின்றன. சமுதாயத்தில் கீழ் சாதி மக்களை தனிமைப்படுத்துவதும், மரணத்திற்கு பின்பு கூட அவர்கள் ஒதுக்கப்பட்டுள்ளதை இத்தகைய வரிகள் கூறுகின்றன. பதவி பணம் இவற்றின் மூலம் மக்களிடம் செல்வத்தை பெற விரும்பும் சுயநலக்காரர்களுடன் ஒதுக்கப்பட்ட மக்கள் பாதிக்கப்படுகின்றன என்பதனை உணர்த்துகின்றன. சாதிப் பெயரிலும் ஏழை என்கின்ற நிலையிலும் ஒதுக்கப்பட்ட மக்களின் அறியாமை விழிப்புணர்வுயின்மை காரணமாகவே தன்னை மேலும் தாழ்வு படுத்திக் கொள்கின்றனர். சாதியின் பெயரினால் ஒதுக்கப்படுகின்ற மனிதன் சக மனிதர்கள் அவனை மரியாதையுடன் வழிநடத்துவதில்லை விலங்குகளை விட கொடுமையான முறையில் பார்க்கப்படுகின்றான். மேல் சாதியினிடம் கைகளை கட்டிக்கொண்டு பேச வேண்டும் கீழ்படிந்து நடத்தல் போன்றவை தனிமனித சுதந்திரத்திற்கும் உரிமைக்கும் எதிரானது. இத்தகைய நிலையில் சமுதாய முன்னேற்றம் பெறுவது கடினமாகிறது. தற்கால சாதி வேற்றுமையானது இந்தியாவில் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாகும். அது வாழ்க்கையை குறுக்குகிறது. கட்டுப்படுத்துகிறது. பிரிவினை செய்கிறது. அரிப்பு வெள்ளத்தின் முன்பாக அது வந்து மாயும் என்கின்றார் விவேகானந்தர்.

### முடிவுரை

சாதி வேற்றுமை மனித உரிமைகளை பெறுவதில் தடையாகவே அமைந்துள்ளது என்பதனை உணர்த்துகின்றது. வரலாற்றின் அடிப்படையில் மாற்றங்களில் சாதிய நிலைப்பாடு மனிதர்களிடம் வைரஸ் என பரவுகிறது. தாழ்த்தப்பட்ட இனம் சார்ந்த மக்கள் என்று அழைக்கப்படும் மனிதர்களின் சூழ்நிலை மாற்றம் வர வேண்டும். மனிதனின் உயர்வான நற்சிந்தனைகள் உருவாக வேண்டும். சிந்தனைகளின் மூலம் கொடுமைகளையும் அதனை மீட்கும் நிலைப்பாட்டினை சி.ஆர் ரவீந்திரன் எடுத்துரைத்துள்ளார். கொங்கு மண்டலத்தின் எதார்த்த சித்தரிப்புகளை ஓடைப்புல் என்னும் ஊடகத்தின் வழி தெளிவு படுத்துகிறார்.

### அடிகுறிப்புகள்


1. மதுரை உப்பூரி குடிகிழார் அகநானூறு பக்க எண் 157
2. திருவள்ளுவர் திருக்குறள் குறள் எண் 972
3. சித்தர்கள் சித்தர் பாடல்கள் பக்க எண் 4
4. ப. மார்க்கபந்து மணிமேகலை பக்க எண் 118
5. ஓடைப்புல்


●


**மு.தவமணியன்**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல் கல்லூரி,
கோயம்பத்தூர்.

முனைவர் மா. சம்பத்குமார்
நெறியாளர், முனைவர் மா. சம்பத்குமார்
உதவிப்பேராசிரியர், டாக்டர் என்.ஜி.பி. கலை அறிவியல்
கல்லூரி, கோயம்பத்தூர்.

கட்டுரை

# போண்டு செல்லப் பிராணிகளின் கதை



சு.தீபிகா


மனித வாழ்வோடு கதைகள் பிணைந்திருப்பதைப் போல செல்லப் பிராணிகளும் பிணைந்து விட்டன. நாம் வேட்டைச் சமூகத்தினராக இருந்த காலகட்டத்தில் இருந்தே சில விலங்குகளை வீட்டு விலங்குகளாகப் பழக்கி வைத்திருந்தோம். அதில் முக்கியமான விலங்காக நாய் இருந்தது. பிற்காலத்தில் பூனையும் நம்பிக்கைக்குரிய வீட்டு விலங்கானது. இந்திய தொன்மக் கதைகளில் நாயும் பூனையும் முக்கிய கதாபாத்திரங்களாக உள்ளன. பெருமாள்முருகன் ‘போண்டு’ என்றொரு சிறுகதைத் தொகுப்பைச் சமீபத்தில் வெளியிட்டுள்ளார். அதில் நாய்களையும் பூனைகளையுயே கதாபாத்திரங்களாக்கி எழுதியுள்ளார். இச்சிறுகதைத் தொகுப்பைப் பார்ப்பதற்குமுன், மரபிலக்கியத்தில் உள்ள ஒரு குறிப்பை இங்கு நினைவுகூர்வது சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

‘மெய்யதா வால்குழைக்கும் நாய்’ (213 பாடல்) எனும் நாலடியாரின் பாடல், யானைக்கு ஒப்பானவர் சிநேகத்தைவிட்டு நாய்க்கு ஒப்பானவர் சிநேகத்தைக் கொள்ளவேண்டும் என்னும்படி அந்தப் பாடல் அமைந்துள்ளது. ‘யானை நன்றாக அறிந்திருந்தும் அதனைப் பேணும் பாகனையே கொல்லும் இயல்பினை உடையது; வேல் தவறுதலாகத் தன்மீது பாய்ந்தபோதும் தன்னை வளர்ப்பனைப் பார்த்துத் தன் வாலைக் குழைத்துக்கொண்டு சுற்றித்திரியும் குணம் கொண்டது நாய்’ என்று யானையின் குணத்தைத் தாழ்த்தியும் நாயின் குணத்தை உயர்த்தியும் அன்றே சமணப் புலவர்கள் பாடியுள்ளனர்.

நாய் ஒருவர் வீட்டிற்கு வந்த சூழல், பெயர் சூட்டப்பட்ட காரணம், வீட்டாரின் எதிர்ப்பு, வந்ததற்குப் பிறகான வீட்டுச்சூழல், அவற்றின் பிரிவு போன்றவற்றை நாயை வளர்ப்பவர்களிடம் கேட்கும்போது வெவ்வேறு விதமான காரணங்களைப் பகிர்ந்து கொள்வர். கேட்பதற்கும் வியப்பாக இருக்கும். பெருமாள்முருகனின் 'போண்டு' சிறுகதைத் தொகுப்பை வாசிப்பவர்கள், இதற்குச் சற்றும் குறைவில்லாத வியப்பை அடைவர். பெருமாள்முருகன் நூலின் முன்னுரையில், "இவை வளர்ப்பு விலங்குகளைப் பற்றிய கதைகள்போலத் தோற்றம் தரும். ஒவ்வொரு கதையிலும் அவற்றின் சித்திரத்தை வேறுபடுத்திக் காட்ட முயன்றிருக்கிறேன். அவற்றின் குணாம்சங்களையும் வெளிப்படுத்தியிருக்கிறேன். அவற்றின் நடவடிக்கைகளை ஆழ்ந்து நோக்கியிருக்கிறேன். அவற்றோடு ஊடாடிச் சென்றிருக்கிறேன். எனினும் வியப்புத் தருபவை அவை அல்ல. மனிதர்கள்தான்" என்று கூறியுள்ளார். ஒவ்வொரு சிறுகதையையும் வாசிக்கும்போது, மனிதர்கள் எப்போதும் வியப்புக்குரியர்களே என்பதும் நாம் மிக நேசித்த ஒன்று எப்போது வேண்டுமானாலும் நம் சிநேகத்தை இழந்து நமக்கு பிடிக்காமல் போகலாம் என்பதையும் உள்வாங்க முடிந்தது. அதேபோன்று, நாம் வெறுக்கக்கூடிய ஒன்று நம் சிநேகத்தைப் பெறவும் செய்யும் என்பதையும் 'குர்குர்' மற்றும் 'போண்டு' ஆகிய சிறுகதைகளின் மூலமாக நுட்பமாகச் சித்திரித்துள்ளார்.

'மனிதர்கள் தனிமையில் இருக்க முடியாது' என்ற கருத்தாடலை மையமாக வைத்து இந்நூலை வாசிக்கும்போது, முற்றிலும் வேறொரு மனநிலைக்கு நூல் நம்மை அழைத்துச் சென்றுவிடுகிறது. திவ்யா, சுடர், செல்வி, வசந்தி, மஞ்சு, பாலன், பாலனின் அத்தை, கபிலன், பூவாசுரி போன்றோரின் தனிமைச்சூழல் வெவ்வேறாக இருபினும், அவர்களின் தனிமையைப் போக்கியதும், 'இவற்றின் துணையாவது நமக்கு உள்ளதே!' என்ற நிலையை உருவாக்கியதும் வளர்ப்புப் பிராணிகள்தான் என்று பொதுவாகச் சொல்லிவிட முடியாது. ஏனெனில் எப்போதும் மஞ்சுவிற்குப் பாதுகாவலனாக இருப்பது 'செம்மி' ஒரு தெருநாய். நாய்களில் விளிம்பு நிலையில் இருப்பது தெருநாய்கள். ஒரு காலத்தில் நாய்களென்றால் அது தெரு நாய்கள் மட்டும்தான் குறிக்கும் என்ற நினைவையும் பெருமாள்முருகன் இக்கதையில் மீட்டெடுக்கிறார்.

'போண்டு' சிறுகதையில் செல்வி, முருகேசு ஆகியோரின் ஒரே மகள் சுடர். ஒற்றை பிள்ளையாகச் சுடர் இருக்கிறாள். அவளுக்குத் துணையாக பீம் (நாய்) இருக்கட்டும் என்று முருகேசு கூறுகிறான். அதன்மீது ஈடுபாடில்லாத செல்வி மறுப்புத் தெரிவிக்கிறாள். 'சுடருக்குத் துணையாக ஒரு பிள்ளையைப் பெற்றுக்கொடு' என்று தன் விருப்பத்தை முருகேசு தெரிவிக்கிறான். 'ஒரு குழந்தையே போதும்' என்று செல்வி பிடிவாதமாக இருந்தது முருகேசுவுக்குப் பிடிக்கவில்லை; என்றாலும் செல்விதான் இதில் வெற்றி பெறுகிறாள். நாய் வளர்ப்பில் முருகேசு வெற்றி பெறுகிறான். பீமின் வருகைக்குப் பிறகு அவனைத் தன் மகனாகவே முருகேசு பார்த்தான்; வளர்த்தான். 'பதிமூன்று வருசம் வீட்டில் வாழ்ந்தாலும் பீமோடு செல்விக்கு எந்த நெருக்கமும் இல்லை' என்ற வரிகளை வாசிக்கும்போது செல்வி மீதான நம் பார்வை வேறுமாதிரி இருக்கும். பீமின் மரணம் செல்விக்கு நிம்மதியைக் கொடுக்கிறது. ஆனால் அது நீடிக்கவில்லை. தந்தையும் மகளும் வெவ்வேறு காரணத்தினால் வெளியே தங்கியிருக்கும் சூழலில், சுடர் வாங்கிய நாய்க்குட்டி வேறு ஒருவரால் வீட்டிற்கு வரவழைக்கப்படுகிறது. 'தொல்லை வரப் போகிறதே' என்ற துயரத்துடன் செல்வி வேலை செய்து கொண்டிருக்கிறாள். ஆனால், கதையின் முடிவில் செல்வி போண்டுவை ஆசையோடு தூக்கி




**போண்டு | பெருமாள்முருகன் | காலச்சுவடு பதிப்பகம்,**
**விலை: ரூ.220 | தொடர்புக்கு: 04652 278525**

வீட்டினுள்ளே அழைத்துச் செல்கிறாள்; அதனுடன் பேசுகிறாள். யாருமற்ற தனிமையைப் போக்கிய போண்டின்மீது செல்விக்கு விருப்பம் ஏற்படுகிறது. பீம் இருந்தபோது செல்வி தனித்து இருந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. போண்டா மாதிரி இருந்த இந்த நாய்க்குட்டிக்குச் செல்விதான் 'போண்டு' என்ற பெயரும் வைக்கிறாள். மனிதர்கள் நிகழ்காலத்தில் நாய்களையும் பூனைகளையும் வளர்ப்பதற்குப் பின்னாலுள்ள காரணங்கள் மிக முக்கியமானவை. சக மனிதர்களிடம் உரையாடவே நேரமற்ற இச்சூழலில், தம் தனிமையைப் போக்கிக்கொள்ள செல்லப் பிராணிகளையே நாட வேண்டியுள்ளது. இந்தப் பின்புலத்திலிருந்து இந்தக் கதையை வாசிக்கும்போது 'போண்டு' முக்கியமான கதையாக இருக்கிறது.


'பீம் + சுட்கி' என்ற கதையில், மலரும் குமாரும் பாட்டி வீட்டிற்குச் சென்று வரும்போது 'சுட்கி' என்ற பூனையை அழைத்து வருகின்றனர். 'சுட்கி'யைக் குமாருக்குப் பிடிக்கவில்லை. வீட்டில் 'பீம்' (நாய்) இருப்பதால் பூனைக்கும் நாய்க்கும் ஆகாது என்று குமார் எச்சரித்தும் அக்காவான மலர் கேட்கவில்லை. இவர்களின் அம்மா முதலில் கோபம் கொண்டாலும் 'பீமை'யும் 'சுட்கி'யையும் ஒன்றாகவே பார்க்கிறாள். வீடு யாருக்குச் சொந்தம் என்று கேட்டு குமார் சண்டையிடும்போது, 'உனக்குதான், அவள் வேறு வீட்டிற்குச் செல்லக்கூடியவள்' எனும்போது மலர் அப்பாவிடம் முறையிடுகிறாள். ஒருநாள் 'பீம்' 'சுட்கி'யைக் கடித்துவிடுகிறது. மலர் தன் அருகில் இருந்த அம்மிக்குழவியைத் தூக்கி 'பீம்'மீது வீசுகிறாள். நாயும் பூனையும் இறந்து விடுகின்றன. இக்கதையில் நாய் என்பது ஆணுக்கான குறியீடாகவும் பூனையைப் பெண்ணுக்கான குறியீடாகவும் மாற்றி வாசிக்க வேண்டும். வீடு என்பது யாருக்கானது; வயதில் சிறியவனாக இருந்தாலும் ஆண் என்ற அதிகார மையம் மலரிடம் எப்படிச் செயல்படுகிறது. வீடு யாருக்குப் பணிந்து போகிறது போன்ற விவாதங்களுக்கு இக்கதை அழைத்துச் செல்கிறது.

'இளன்' சிறுகதையின் கபிலன், வீட்டுக்காவலுக்குச் செல்லும் கல்லூரி மாணவன். தனக்குப் பழக்கம் இல்லாத பூனையையும் பார்த்துக்கொள்ளவேண்டிய சூழல் அவனுக்கு ஏற்படுகிறது. பிடிக்கவில்லை என்றாலும் கூடுதல் பணம் கிடைப்பதால் பூனையைப் பார்த்துக்கொள்ள சம்மதிக்கிறான். இறுதியில், 'போகும் இடங்களில் எல்லாம் இப்படியொரு பிராணி இருந்தால் நன்றாக இருக்குமே' என்ற எண்ணம் வரும் அளவுக்குக் கபிலன் இளனுடன் நெருக்கமாகிவிடுகிறான். இளன் ஒருநாள் காணாமல் போய்விடுகிறது. இந்த இடத்தில் வெளிப்படும் கபிலனின் துயரங்களைப் பெருமாள்முருகன் மிகுந்த படைப்பூக்கத்துடன் எழுதியிருக்கிறார். சிறுதெய்வ வழிபாடு தோற்றப் பின்புலத்திற்கான காரணங்களின் ஒரு பகுதியை ஆராயும் 'பொங்கி' என்ற சிறுகதையும் வாசிக்கத் தகுந்தவை. மேலதிகாரியைப் பழிவாங்க நினைக்கும் ஒருவர், தன் வீட்டு நாய்க்குட்டிக்கு அந்த அதிகாரியின் பெயரை வைத்துத் தன் வன்மத்தைத் தீர்த்துக் கொள்கிறார். அதேநேரத்தில் அந்தரங்க விஷயங்களைப் பகிர்ந்துகொள்ளும் இடத்திற்கும் சிலர் செல்லப் பிராணிகளை நகர்த்தி வைத்திருக்கின்றனர். இதுபோன்ற பல தன்மைகள் இந்தத் தொகுப்பிற்குள் உள்ளன.

'எண்ணிப் பார்த்தால் எல்லாக் கஷ்டங்களும் இப்போது கதை போலத் தோன்றுகின்றன' என்ற வரி 'மதி' சிறுகதையில் வருகிறது. பெருமாள்முருகன் தன் வாழ்நாளில் எதிர்கொண்ட கசப்புகளையும் துயரங்களையும் வெவ்வேறு தன்மைகளில் தொடர்ந்து புனைவுகளாக எழுதி வருகிறார். கொங்கு வட்டார வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே இவரது கதைகள் இருக்கின்றன. அதிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை 'போண்டு' சிறுகதைத் தொகுப்பு. மனிதர்களைக் கடந்து அஃறிணை உயிர்களையும் பொருட்படுத்திப் புனைவுகளாக்கும் பண்பு குறிப்பிடத் தக்கது. நம்மைச் சுற்றியுள்ள நாய்களுக்கும் பூனைகளுக்கும்கூட ஒரு வாழ்க்கை இருக்கிறது. அந்த வாழ்க்கையையும் படைபாளர்கள்தாம் பதிவு செய்ய வேண்டும். அதனைக் கடந்த சில வருடங்களாகப் பெருமாள்முருகன் கவனித்து எழுதி வருகிறார். இத்தொகுப்பின் கதைகள் வாசிப்பவர்களை மென்மையாக்குகிறது. இந்தத் தொகுப்பை வாசிப்பவர்களுக்குப் பெருமாள்முருகனின் இன்னொரு பரிமாணம் பிடிபடும். அந்தப் பரிமாணத்தில் அன்பும் கருணையும் கொண்ட நாய், பூனைகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும்.

●

**கட்டுரையாளர்: உதவிப் பேராசிரியர், தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன்செட்டி இந்துக்கல்லூரி, பட்டாபிராம், சென்னை.**







# Reading Between Languages: Bama's Voice in Karukku

**G.Krishnaveni**
**Dr.B. Winmayil**

Karukku, the autobiography of Bama is a pioneer writing in Tamil Dalit Literature It deals with the suppressed life of Bama who struggled hard to find an identity as a Dalit in the casteist society through the tool of education. Bama highlights the skirmishes of jeopardized communities and exposes the exploitation driven by capitalism and caste discrimination. She effectually portrays the daily hardships faced by Dalit people, particularly Dalit women who suffer from multiple layers of oppression. Bama's bold critique of bigoted practices and the powerful questions she raises against their despots make her work a landmark in Dalit literature. The immediate success of Karukku motivated Bama to continue her writing carrier with the same theme: Dalit People's Plights. She has written two novels: Vanmam and Sangati other than Karukku. She has also written short stories too. All of her works have been translated into English and French.

Lakshmi Holmstrom is a great translator and literary critic. She has translated the works of Bama, Ambai, Pulamaipithan and so on. She has written 2 critical works: one on R.K. Narayan and another on Mauni. Bama's sacrifice of her life to her community and the struggles endured by herself and her people prompted Lakshmi Holmstrom to render the Tamil text Karukku into English. She brought out this important work to a global audience and shedding light on the suffering and discrimination faced by Dalit people. However, despite conveying the central theme of the struggles of Dalit communities, Holmstrom's translation could not fully capture the essence of Karukku as conveyed by Bama. The use of colloquial Tamil language in the original, which reflects the authentic life of Tamil people, posed challenges in translation, making it difficult to preserve the original flavour and depth of Bama's work.

In the original Tamil text, there is no fixed grammar structure, and the language is written in spoken Tamil, reflecting the natural flow of conversation. In contrast, Lakshmi Holmstrom's translation follows a more structured approach with clear spelling and grammar. At times, when she could not find exact English equivalents for certain Tamil words used by Bama, she chose to transliterate them, preserving the original terms. This highlights the difference in linguistic approaches between the colloquial style of the Tamil text and the more formal structure of the English translation. In the translated version, certain Tamil words, such as பெருமாள் சாமி, பொந்தன் மாமா, நரிப்பாற, and பேய் are transliterated as Perumaal saami, Bondan Mama, Nari Paara, and pey, they hold specific cultural meanings that cannot be easily translated into English. Similarly, the caste names from Dravidian communities in Tamil Nadu such as நாடார், தேவர், செட்டியார், ஆசாரி, நாயக்கர், உடையார், குறவர், சக்கிலியர், பள்ளர் and பறையர் are also transliterated in English as Nadar, Thevar, Chettiyaar, Aasaari, Naicker Udaiyaar, Kuravar, Chakkiliyar, Pallar, and Parayar. Because there are no direct equivalents for these terms in the English language. Therefore, despite the translation, the deeper cultural and contextual reference of சப்பரம் is lost.

Bama uses her community's colloquial language, incorporating even abusive terms, in her writing. However, the translator, Lakshmi Holmstrom, has rendered the language in a more polished form for the target text, sometimes omitting certain words. Bama has comically said,

> *சாயங்காலம் ஆறு மணிக்கி மேல தெருவுல ஒரே கூப்பாடாத்தான் இருக்கும். கூகொலேலான்னு ஆணும் பெண்ணும் அலையும். இருக்குற ஒரே இடத்துல அடிகுழாய்ல தண்ணி அடிக்க சண்டை காடு நாறும். வகுற எக்கி எக்கி அடிச்சு ஒரு குடம் ரொம்புரதுக்கு அம்புட்டு நேரம் ஆகும். அங்ன வார சண்டைகள கேட்டா சிரிப்பான சிரிப்பு வரும். (பாமா 6-7).*

## The same passage is as follows in the Target Language Text

In the afternoon, after five o-clock, the streets were all noise and bustle. Men and women would be out there, shouting and yelling. Usually there were fights going on among those who waited their turn at the single water-pump. It took such an age to fill a single water-pot, even if you worked the pump strenuously. But the quarrels and fights going on there really made you laugh" (Holmstrom 7).

The phrase, வகுற எக்கி எக்கி does not have equivalent in English language, So Holmstrom translated it as 'even if you worked the pump strenuously', which denotes the sense of working hard.

"Look at the cheri children! When they stay here, they eat their fill and look as round as potatoes. But look at the state in which they come back from home – just skin and bone!" (Holmstrom17). In the original text it is as "லீவுக்கு வீட்டுக்குப் போயிட்டு வந்த ஒடனே இந்த சேரி பிள்ளைகள பாருங்க. இங்க இருக்கையிலே நல்லா தின்னுபோட்டு உருளக்கெழங்கு மாதிரி இருப்பாளுக. வீட்டுக்கு போயிட்டு வந்து பாரு வத்தல் கணக்கா வந்துருக்காளுகன்னு சொல்லும்" ( பாமா 29). In this instance, the girls are likened to the thinness of red chillies, and the translator conveys this idea by using the phrase "just skin and bone," which preserves the original meaning expressed by the author in the source language.

There are different forms of addressing someone, such as "நீ," "நீங்கள்," and "நீவீர்" in செந்தமிழ் whereas in English, a single word, "you," is used to represent all of these. Additionally, while English has both active and passive voice, Tamil does not have a passive voice. The translator, Lakshmi Holmstrom, faces challenges in finding equivalent English words for certain Tamil lexical terms, and as a result, she omits some words for which there is no direct counterpart in English. The following words are omitted by the Translator in the Target Language text that was used in the Source Language Text: "பண்ணண்டு மணி ஆனா போதும், பிளேட்டுகளத் தூக்கிட்டு சத்துணவு வாங்கி திங்க சாரை சாரையா நண்டு நசுக்கெல்லாம் போகும், கோயில்ல பண்ணண்டுக்கு மணி அடிப்பாக". சாரை சாரையா நண்டு நசுக்கெல்லாம் (பாமா 12) has no equivalent in English language so it is omitted and the sentence in the translated text became "The moment it struck twelve, they would rush of plate-in-hand, even the tiniest crab-like ones, for their free meal" (Holmstrom 7). கொரங்காட்டி, பெட்டி ராட்டுனம், கொடை ராட்டுனம், பணியார கடை, காதுகுடும்பி (பாமா 18) are the words used by Bama which do not have equivalent word in English language, so the translator, explained the meaning of the word காதுகுடும்பி as "instruments for cleaning out the ears" (Holmstorm 19). When reading a novel, words with direct meaning can provide more clarity and consistency, helping readers better grasp the author's points. For a Tamil-speaking audience, reading Karukku in its original language would make it easier to understand the suffering of Dalit people. However, for foreign readers or people from other states, encountering transliterated Tamil words and their English equivalents in brackets will not offer the same immersive experience as the original text. The translation may convey the meaning, but it cannot replicate the depth and emotional impact of the original Tamil language.

India has a rich array of kinship terms, more than most other countries. For example, terms like சித்தப்பா, மாமா, and பெரியப்பா translate to "uncle" in English, even though each of these terms refers to different familial relationships. Similarly, சித்தி, அத்தை and பெரியம்மா are all translated as "aunt," despite their distinct meanings in Tamil. If the translated text simply uses "uncle" or "aunt" for all these kinship terms, it would lose the nuanced meanings conveyed in the original Tamil. To preserve the original intent and impact, the translator chose to transliterate words like சித்தப்பா, and மாமா, ensuring the translation retains the same cultural and relational depth as the original text. "Bondan-Maama" "Chittappa" (Holmstorm 10, 66).

The nicknames used by Dalit people in their dialect have no direct equivalents in English. Rather than omitting them, the translator, chose to transliterate these nicknames to preserve their original form. However, since these transliterated words may be difficult for the target language audience to understand, she provided their meanings in parentheses, making it easier for readers to get the intended significance of the words.

Kazhinja, ...Medenda, Floater.... Leaky Kaakkaa, Crow. I could go on and on. Konnavaachi (Starer), Deaf-one, Dumbo, Crazy, Severiyaa (Xavier), Black-ant, Manacchi (Flat nose), Uzhamuki (Running nose), Green-nose, Needle-bum.... And so, I could go on with names like Black-mouth, Nezhucchaan (Staggerer), Belly-button, Kaaman (Jack of all trades), Bondan (Snatcher), Vidvi (Idiot), Naadodi (Wanderer), Idiot and Half-ear. (Holmstrom 16-17).

## Food and Drinks

Food items that are exclusively used by Tamil people in the ancient time do not have equivalent in other languages especially in English. Tamil foods such as இட்லி, வடை, சாம்பார், சட்னி, and பொங்கல், have no equivalents. So, whenever food is mentioned, Lakshmi Holmstorm just transliterated the word. கேப்பக்கூழு (பாமா 16) is transliterated as "keppa kuuzhu" (Homstrom 17) and also gave the meaning of the word "kuuzh, millet porridge" (Holmstrom 16). Like food, ornaments and clothings in one language have no equivalent so they have to be transliterated. The word சேலை is used by Bama as *சீல* (50) and it is transliterated as "Sari" (Holmstrom 44) and தாவணி (பாமா 85) as Daavani (Holmstrom 75). Proverbs of one language can be explained in another language and not be translated. The proverb used by Bama in Tamil Language is "'வெயிலுக்குப் பயந்து வெந்நிப் பானைக்குள்ள உளுந்த கதையா" கிணத்துக்குள்ள ஒரு நல்ல பாம்பு படமெடுத்துகிட்டு இவரை கொத்த வந்துச்சாம் (13) "It was rather like the tale of the man who feared the sun and jumped into a pan of boiling water, though. Because, once he was in the well, a cobra suddenly spread its hood and made to bite him." (Holmstrom 15).

Lakshmi Holmstrom's translation of Karukku reflects her commitment to preserving the essence of the original text. While she succeeds in translating most parts of Bama's work faithfully, there are moments where her rendering of certain words appears inconsistent. For example, the Tamil word கஞ்சி is sometimes translated as "gruel" or "porridge," while in other instances, it is transliterated as "Koozh." (62,61). நல்ல பாம்பு is translated as King Cobra which means ராஜ நாகம் in Tamil or கரு நாகம். This variation in translation introduces an element of ambiguity, highlighting the challenges inherent in translating dialects. Such inconsistencies can complicate the reader's understanding, especially when a single word carries different nuances depending on the context.

Lakshmi Holmstrom's main intention was to convey the essence of Karukku and she did her best despite transcreation and very minor ambiguity words. She herself has said that, "... when you translate a work, whether it is a poem or a long work of fiction, you have to keep in mind the integrity of the whole thing. Words and sentences may be the bricks and mortar but it has a structure as a whole that you are constantly aspiring towards. ...The most difficult part of translation is, I believe, finding the 'right' pitch and voice of the original, and to try and match that" (qtd. in Deshpande and Hariharan n.p). And true to her saying she conveyed the voice of Bama and agony of Dalit people in her translated work too.

## References


- Bama. Karukku. Translated by Lakshmi Holmstorm, Oxford UP, 2012.
- Deshpande, Shashi and Hariharan Githa. "Reader, translator, friend: Remembering
- Lakshmi Holmström". Cultural Forum. https://indianculturalforum.in/2016/05/10/reader-translator-friend-remembering-lakshmi-holmstrom/
- பாமா. கருக்கு. என்சிபிஎச் பதிப்பகம், 2019.


●


**G.Krishnaveni,**
Ph.D. Research Scholar,
V.V.Vanniaperumal College for Women, Virudhunagar,
**Dr. B. Winmayil**
Assistant Professor of English,
V.V.Vanniaperumal College for Women, Virudhunagar)

நியூ செஞ்சுரியின் இம்மாத வெளியீடு

# தோழர் தமிழ்ஒளி ஆக்கங்கள்

## ஆறு தொகுதிகள்

**தோழர் தமிழ்ஒளி (1925 – 1965) நூற்றாண்டுச் சிறப்பு வெளியீடு**




| | | |
|---|---|---|
| தொகுதி-1 | : தோழர் தமிழ்ஒளி கவிதைகள் | விலை: ரூ.390/- |
| தொகுதி-2 | : தோழர் தமிழ்ஒளி காவியங்கள் (பகுதி ஒன்று): | விலை: ரூ.315/- |
| தொகுதி-3 | : தோழர் தமிழ்ஒளி காவியங்கள் (பகுதி இரண்டு) | விலை: ரூ.390/- |
| தொகுதி-4 | : தோழர் தமிழ்ஒளி சிறார் பாடல்கள் - கதைகள் | விலை: ரூ.315/- |
| தொகுதி-5 | : தோழர் தமிழ்ஒளி சிறுகதைகள் - ஓரங்க நாடகங்கள் | விலை: ரூ.360/- |
| தொகுதி-6 | : தோழர் தமிழ்ஒளி ஆய்வுகள் - கட்டுரைகள் - தன் வரலாறு | விலை: ரூ.430/- |

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 600 050.

☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in


நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.

Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam** at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,** 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly) Registered with RNI No :TNBIL/2009/28728. Postal Regn No. TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication 1-7TH of every month Posted at Egmore RMS, Patrika Channel, chennai - 08
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam,
16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

தமிழ் வளர்ச்சித் துறை · நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

# அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள்




தமிழ்நாடு அரசின்
**மக்கள்**
**பதிப்பு**
**100**
தொகுதிகள்

முதற்கட்டமாக
**10**
தொகுதிகள்
தற்போது விற்பனையில்

3300 பக்கங்கள்
**ரூ 1000/–**
10 தொகுதிகளும் சேர்த்து

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in